SAPTHAGIRI (TAMIL)
ILLUSTRATED MONTHLY
Volume:1, Issue: 9, Pages:56
April -2022, Price Rs.5/-

திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# ஸப்தகிரி

சமய மாத இதழ்

ஏப்ரல் 2022, விலை ரூ.5/-

## ஒண்டிமிட்டா ஸ்ரீகோதண்டராம ஸ்வாமி பிரம்மோத்ஸவம்

**2022 ஏப்ரல் 10 முதல் 18 வரை**



மன்னுபுகழ்க் கௌசலைதன் மணிவயிறுவாய்த்தவனே!
தென்னிலங்கைக் கோன்முடிகள் சிந்துவித்தாய்! செம்பொன்சேர்
கன்னிநன்மாமதிள்புடைசூழ் கணபுரத்துஎன் கருமணியே!
என்னுடையஇன்னமுதே! இராகவனே! தாலேலோ.

- குலசேகராழ்வார்



ஸ்ரீராமானுஜரின் சஹஸ்ராப்தி முன்னிட்டு தெலுங்கானா மாநிலம் ரெங்கா ரெட்டி மாவட்டம் முச்சிந்தலில் ஸ்ரீஸ்ரீஸ்ரீ திரிதண்டி சின்ன ஜீயர் ஸ்வாமிகள் மேற்பார்வையில் நிறுவப் பட்ட இராமானுஜரின் சமத்துவ மூர்த்தி சிலை திறப்பு விழா 02-02-2022 முதல் 14-02-2022 வரை கோலாகலமாக நடைபெற்றது. இங்கு நிறுவப்பட்ட 108 திவ்விய க்ஷேத்திரங் களில் ஒன்றான திருமலை திவ்ய க்ஷேத்திரத்திற்கு தி.தி.தே. சார்பில் தி.தி.தே. பொறுப்பாண்மைக் குழுத் தலைவர் திரு. ஒய்.வி. சுப்பா ரெட்டி அவர்கள் பட்டு வஸ்த்திரங்களை சமர்ப்பித்தார். பின்னர் தி.தி.தே. ஏற்பாடு செய்திருந்த புகைப் படக் கண்காட்சி, தி.தி.தே. உற்பத்தி பொருட்கள் விற்பனை மற்றும் கண்காட்சியினை தி.தி.தே. செயலாட்சித் தலைவர், தி.தி.தே. கூடுதல் செயலாட்சித் தலைவர், தி.தி.தே. பொறுப் பாண்மை குழு உறுப்பினர்கள் பார்வையிட்ட போது...











*உலகம் யாவையும் தாமுள ஆக்கலும்*
*நிலைபெறுத்தலும், நீக்கலும் நீங்கலா*
*அலகிலா விளையாட்டுடையார் அவர்*
*தலைவர் அன்னவர்க்கே சரண் நாங்களே*



**எல்லா உலகங்களையும் படைத்து,**
**காத்து, இறுதியில் அழித்தும்**
**ஒழியாத அளவற்ற**
**விளையாட்டாகச் செய்பவர் எவரோ**
**அவரே தலைவர். அத்தகைய**
**எம்பெருமானையே நாங்கள்**
**என்றும் சரணடைவோம்.**

*–கம்ப ராமாயணம்*



*ஆசார்யா: பிதர: புத்ராஸ்-*
*தைத$_2$வ ச பிதாமஹா: ।*
*மாதுலா: ச்வசுரா: பௌத்ரா:*
*ச்யாலா: ஸம்ப$_3$ந்தி$_4$நஸ்தத$_2$ா॥*

**ஆசார்யர்கள், பெரியப்பா–சிற்றப்பாக்கள், மகன்கள்,**
**அவ்விதமே பாட்டனார்கள், தாய்மாமன்கள்,**
**மாமனார்கள், பேரன்கள், மைத்துனர்கள் மற்றும்**
**உறவினர்கள் இங்கே கூடியிருக்கிறார்கள்**

*– ஸ்ரீமத் பகவத் கீதை 1–34*



# திருமலை ஆகாச கங்கா - அஞ்சனாத்ரி

உ.வே. டாக்டர் மாடபூசி வரதராஜன் ஸ்வாமி,
சென்னை.

*"அஞ்சனமாமலைப் பிறவி ஆதரித்தோன் வாழியே
அணி அரங்கர் மணத்தூணை அடைந்து உய்ந்தோன் வாழியே
வஞ்சி நகர் தன்னில் வாழ வந்தோன் வாழியே
மாசி தன்னில் புனர்பூசம் வந்துதித்தான் வாழியே
அஞ்சல் எனக் குடப்பாம்பில் அங்கையிட்டான் வாழியே
அநவரதம் இராமகதை அருளுமவன் வாழியே
செஞ்சொல்மொழி நூற்றஞ்சும் செப்பினான் வாழியே
சேரலர்கோன் செங்கமலத் திருவடிகள் வாழியே"*

(அஞ்சனமாமாலை) வடக்குத் திருமலைக்கு அஞ்சனாத்ரி என்று பெயர். திரேதாயுகத்தில் பம்பா க்ஷேத்ரத்தில் (தற்போது ஹம்பி) வசித்து வந்த வானர இனத்தைச் சேர்ந்த அஞ்சனை, கேஸரி ஆகிய இருவரும் மதங்க முனிவர் ஆச்ரமத்துக்குச் சென்று அவரை வணங்கி வருவார்கள். மகப்பேறு இல்லாத காரணத்தால் மதங்கர் சொல்லியபடி அஞ்சனா தேவி திருமலையில் ஆகாச கங்கை தீரத்தில் 12 வருடம் கடும் தவம் புரிந்தாள். பின்னர், வாயுதேவன் நேரில் வந்து மாங்கனியைக் கொடுக்க, அதனால் உண்டானவனே அனுமானாவார். இது பற்றியே அஞ்சன மாமலை என்ற பெயர் திருமலைக்கு ஏற்பட்டது என்று பவிஷ்யோத்தர புராணம் சொல்லும். பிரம்மாண்ட புராணத்திலும் இந்த வரலாறு சற்று மாறுபட்டு வருகிறது. இப்படிப்பட்ட அஞ்சனாசலத்துக்கு அதிபதியானவன் திருவேங்கடவன். இது பற்றியே திருவேங்கடவன் அஷ்டோத்தர சத நாமாவளியில் *"ஓம் அஞ்ஜனா கோத்ரபதயே ஶ்ரீவேங்க டேசாய நம:"* என்ற திருநாமம் (81) சொல்லப்படுகிறது. மேலும் அஞ்சனைக்கு அருமையான தனயனை அளித்த திருவேங்கடவனுக்கு *"ஓம் அஞ்சனாஸுததாத்ரே ஶ்ரீவேங்கடேசாய நம:"* என்ற திருநாமமும் (83) உள்ளது காணலாம். மேலும், நம்மாழ்வார் திருவாய்மொழியில் (8.2.8) ப்ராப்ய ஸ்தலங்களை – அடைய வேண்டிய தலங்களைச் சொல்லும்போது *"அஞ்சன வெற்பும்"* என்று திருமலை ஆகிற அடைய வேண்டிய தலம் என்பர். இவ் விடத்தில் அஞ்சன வெற்பு என்பது திருமலையும் பரமபதத்தோடு ஒக்கச் சொல்லலாய் இருக்கிறதாயிற்று என்பர் நம்பிள்ளை.







வேங்கடமே விண்ணோர் தொழுவதுவும் மெய்ம்மையால்
வேங்கடமே மெய்வினைநோய் தீர்ப்பதுவும்

# ஸப்தகிரி


சமய மாத இதழ்

ஏப்ரல் 2022

மலர் 01 | இதழ் 09



சிறப்பு ஆசிரியர் :
Dr. K.S. ஜவஹர் ரெட்டி, ஐ.ஏ.எஸ்.,
செயலாட்சித் தலைவர், தி.தி.தே.
வெளியீட்டாளர்-பிரதான ஆசிரியர் :
Dr. K. ராதாரமணா, எம்.ஏ., எம்.பில்., பி.எச்டி.,
ஆசிரியர் :
Dr. V.G.சொக்கலிங்கம், எம்.ஏ., பி.எச்டி.,
அச்சிடுபவர் :
திரு. பி.ராமராஜு, எம்.ஏ.,
சிறப்பு அலுவலர்
தி.தி.தேவஸ்தான அச்சகம், திருப்பதி.
டி.டி.பி.
பிரதான ஆசிரியர் அலுவலகம்,
தி.தி.தே. திருப்பதி.
புகைப்படங்கள் :
திரு. P.N. சேகர்
திரு. B. வெங்கடரமணா

பிரதிகளுக்கு:
THE CHIEF EDITOR,
"Sapthagiri", T.T.D., Tirupati-517 507.
0877- 2264543, 2264359
ஆசிரியர் : 2264360

நீங்கள் ஸப்தகிரி இதழை
www.tirumala.orgயில் பார்த்து,
படித்து மகிழலாம். ஆலோசனைகள்/
கருத்துக்கள்/புகார்களுக்கு
sapthagiri.helpdesk@tirumala.org


| | |
|---|---|
| தனிப்பிரதி | ரூ.5/- |
| வருடச்சந்தா | ரூ.60/- |
| ஆயுள் சந்தா | ரூ.500/- |
| அயல்நாட்டு வருடச்சந்தா | ரூ.850/- |


இதழில் வெளியாகும் கட்டுரைகளுக்கும், கருத்துகளுக்கும் அவ்வவ்வாசிரியப் பெருமக்களே பொறுப்பாவர் -பிரதான ஆசிரியர்


## உள்ளுறை

பக்கம்


ஸ்ரீராமனின் திவ்யத் திருநாமங்கள் 7
- திரு. ஏ.கே. கோபி, கள்ளக்குறிச்சி.
புனர்வசு (புனர்பூசம்) நக்ஷத்திரத்தின் ஏற்றம் 12
- திருமதி பிரேமா நந்தகுமார், ஸ்ரீரங்கம்.
ராமநாமம் சோறு போடுமா? - என். பருவதம், மேல்படூர். 16
ஸ்ரீராமனின் திருக்கல்யாண குணங்கள் : ஸமர்தன் 20
- திரு. உ.வே. வேளுக்குடி கிருஷ்ணன் ஸ்வாமி, சென்னை.
சிறை இருந்தவளின் ஏற்றம் - திருமதி ராஜலக்ஷ்மி, கேரளா. 22
அண்ணல் ராமரும் அறுவரும் -முனைவர் ந. மைதிலி, சென்னை. 31
திருவேங்கடத்தில் இராமன் நித்யவாசம் செய்கிறான் 34
- பேராசிரியர் எஸ். கோகுலாச்சாரி, புவனகிரி.
சுந்தர ராமனை போற்றும் சுந்தரன் 37
- டாக்டர் பா.காயத்ரி, சென்னை.
யோக ராமாலயம் நெடுங்குணம் 39
- திரு. அறந்தாங்கி சங்கர், சென்னை.
சித்திரையில் ஸ்ரீராமர் - முனைவர் ச.செந்திலாண்டவன், சென்னை. 41
ஸ்ரீராம ஜென்ம தினம் - அமரர் சத்யதாரா, சென்னை. 43
இராமநவமியும் பானகமும் நீர்மோரும் 46
- டாக்டர் கி.ஜ. நிகிலாவெங்கட், கோயம்பத்தூர்.
ராசிப்பலன்கள் – ஏப்ரல் 2022 49
- சேலம் முராரி. எம்.வி. நரநாராயணன், சேலம்.
கருணையே வடிவெடுத்த இராமபிரான் 50
- திருமதி பிரேமா வரதன், புதுதில்லி.
சித்திரக்கதை : ராமநாமம் காத்திடும் தாரக மந்திரம் 52


### வாசகர்களுக்கு...

இவ்விதழ் ஸ்ரீராம நவமி சிறப்பிதழாக வெளிவருவதால் இந்த இதழில் வெளிவர வேண்டிய தொடர் கட்டுரைகள் யாவும் அடுத்த இதழிலிருந்து தொடர்ந்து வெளிவரும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

-பிரதான ஆசிரியர்

### அட்டைப்பட விளக்கம்

முன்னட்டை : சீதாதேவி சமேத ஸ்ரீகோதண்டராம ஸ்வாமி, ஒன்டிமிட்டா.

பின்னட்டை : ஸ்ரீவசந்த மகாலக்ஷ்மி தாயார்.



உங்களுடன்...

# விதியினை வெல்லும் மந்திரம்

ஒரு காவியமானது காலம் கடந்தும் படிப்போரின் மனதில் நீங்காமல் நின்று இனம், இடம், மொழிகளையும் கடந்து, கலாசாரங்களின் எல்லைகளையும் மீறி உலகின் இலக்கிய சரித்திரத்தில் அக்காவியம் தனக்கென ஓர் இடம் பெற்று விட்டதேயானால் அதன் பெருக்கத்திற்கு ஈடேது. அவ்வகையில் இந்தியாவின் ஆன்மீக வாழ்க்கையில் இராமாயண மகா காவியம் தன்னை பெரிதும் ஈடுபடுத்தி கொண்டுள்ளது என்பது யாவரும் அறிந்ததே.

இராமாயணத்தின் காவிய நாயகனை பரம்பொருள் என்று நூலை படைத்தவனே அழைத்தாலும், நாம் அந்த நாயகனை மனிதருள் மாணிக்கமாகவே போற்றுகின்றோம். அதாவது அவரிடம் நிறைகளை கண்டபோது போற்றியும், குறைகளை கண்டபோது விமர்சனமும் செய்து வரும் நாம் அந்த நாயகனை ஒரு அவதாரப் புருஷனாக ஏற்றுகொண்டும் உள்ளோம். இராமாயணத்தில் நாம் பெற்றிடும் அறிவுரைகள் பல பல. ஆயினும், ஓர் உண்மைதனை இதில் நாம் உணர்ந்திடத்தான் வேண்டும். விதியையும், அதன் ஆற்றலையும் நமது சனாதன தர்மம் வலியுறுத்தவே செய்கின்றன. இந்த விதி செய்கின்ற சதியை நாம் இக்காவியத்தில் நன்றாகவே காண இயலுகின்றது.

சூழ்நிலைக்கேற்றபடி மாறுகின்ற மனிதனுடைய போக்குகளும், அவனுடைய வாழ்க்கை ரகசியத்தின் உணர்வுகளும் இவ்வுலகத்தில் உள்ள யாவருக்கும் ஒன்றேதான். உணர்ச்சிகளுக்கு ஆட்படாமலும், உணர்வுகளுக்கு அடிமையாகாமலும், சிந்தனைகளுக்கு சிறிதளவேனும் வாய்ப்பினை கொடுப்பானேயானால் மானிடனும் மகானாகலாம். இவற்றினை மறந்தானேயானால் எப்படியெல்லாம் விளைவுகளானது அமையும் என்பதை இராமாயணம் அவனுக்கு கூறும் வாழ்க்கையின் இரகசியமாகும். விதியினை வெல்ல முடியாததுதான். ஆனால் மதியினால் அதனுடைய ஆற்றலை தடுக்கலாம் அல்லவா!

ஸ்ரீராமர் கற்றறிந்தவராகவும், கலைகளில் தேர்ந்தவராகவும் விளங்கியவர். பெற்றவருக்கு சிறந்த புதல்வனாகவும், உடன் பிறந்தவர்களுக்கு உற்ற உறவினராகவும், கையைப்பற்றியவளுக்கு நல்ல தலைவனாகவும், நட்பிற்கு நல்ல இலக்கணமாகவும் விளங்கினார். ஆனால், வந்தது பொன் மான் அல்ல, பொய்மான் தான் என்பதை உடன் பிறந்தவன் எச்சரித்தும் மானைப் பின் தொடர்ந்து சூழ்ச்சிக்கு உட்பட்டார். தாடகை பெண் என அவளைக் கொல்லத் தயங்கிய இராமன், சூர்ப்பணகையின் வாயிலாக இராவணனின் எதிர்ப்பினை எதிர் கொண்டார். விதி யாரை விட்டது?

இலக்குமணனின் குணத்தில் சந்தேகம் கொண்டு தன்னுடைய பாதுகாப்பினையும் இழந்த சீதையின் போக்கிற்குக் காரணமும் விதி தானோ என்றும் கூறலாம். இரு முறை தோற்றும், தாரை தடுத்தும் போருக்குச் சென்ற வாலி இராமனின் வில்லிற்கு பலியானதும் விதி வகுத்த வழியோ எனலாம். வீரத்திலும் விவேகத்திலும் இராவணனை விட சிறந்தவனான கும்பகர்ணன் உறக்கத்தில் வீழ்ந்ததும் விதி செய்த சதியோ எனலாம். இராவணன் சூர்ப்பணகையின் பாசக் கண்ணீரில் சிக்கித் தடுமாறி, சீதையை அபகரித்து உற்றார் உறவினரின் மரணத்தையும் மறந்தாது, இராமனின் அறிவுரையும் மறந்தான். தோற்கப்போகும் போருக்கு தேரேறிச் சென்று மரணத்தில் வீழ்ந்தான். இவையாவும் விதியின் வலிமையாலன்றோ?

விதியின் முன்னால் ஆற்றல் உடையவனும் துன்பப்படுவான் என்பது அனைவரும் அறிந்ததே. எனினும் அந்த விதியானது தன்னுடைய தாக்குதல்களுக்கு முன்னதாக ஒருவனின் அறிவுக்கு மதிப்பளிக்கும். இதனை நன்கு உணர்ந்தால் எவ்வித பிரச்சனைகள் சூழ்ந்த போதிலும் தன்னுடைய சீரிய சிந்தனையால் நல்ல ஒரு வாழ்க்கைதனை அமைத்துக் கொள்ள அது உதவும். ஸ்ரீராமபிரானும் பல இன்னல்களுக்கு ஆட்பட்டாலும் தன் சிறந்த பண்பாலும், குணத்தாலும் மானிடர், வானரர், அரக்கர் என அனைவரிடத்திலும் அன்பு செலுத்தி நம்மனைவருக்கும் சிறந்த உதாரண புருஷராக விளங்கினார். நாமும் ஸ்ரீராம நாமத்தை துதிப்போம்! ஸ்ரீராமரின் பாதையில் நாமும் பயணித்து, நற்சிந்தனையுடன் விதியினை வென்று நல்வாழ்வினை பெற்றிடுவோம்.

# ஸ்ரீராமனின் திவ்யத் திருநாமங்கள்

-திரு. ஏ. கே. கோபி, கள்ளக்குறிச்சி 9443879592



**ஸ்ரீ:** பதியான ஸ்ரீமந்நாராயணன் அடியார்களை உய்விப்ப தற்காக எடுத்த பத்து அவதாரங்களில் ஏழாவது அவதாரமே ஸ்ரீராம அவதாரம். மனித வாழ்வியல் நெறிமுறைகள், அறவாழ்க்கை, பெற்றோர் சொல் தவறாமை, ஒருவனுக்கு ஒருத்தி என்கிற கற்பு நெறி, பறவை முதல் சாதாரண மனிதன் வரை சமமாக பாவிக்கும் நீர்மை, சரணடைந்த வர்களை காத்தருளும் சீலம், தவ வாழ்க்கை, வீரம், பகைவனுக்குக் கூட திருந்து வதற்கும், உயிர் வாழ்வதற்கும் வாய்ப்பு அருளும் தயாளம், அறமும் நேர்மையும் தழைக்கும் அரசாட்சி என மனித வாழ்க்கைக்குத் தேவையான அனைத்து நற்பண்புகள் நிறைந்து வழிந்து அமுதமாய் பெருகி ஓடும் திருக்கல்யாண குணங்களின் ஊற்றாய், உதாரண புருஷனாய், அனைத்து இன்ப துன்பங் களையும் அனுபவித்து வாழ்ந்துக் காட்டிய ஒரு பூரண அவதாரம் ஸ்ரீராமாவதாரம்.

இராம அவதாரத்தினை பல்வேறு திவ்ய தேசங்களில் அனுபவிக்கும் ஆழ்வார்கள், இராமனின் குழந்தைப் பருவம் முதல் பட்டாபிஷேகம் வரை அனுபவித்து பாசுரங்கள் இயற்றியுள்ளனர். இராமகாதை அனுபவமாகும் போது இராமனுக்கு பல திருநாமங்கள் தாமாகவே உருவாகி இராமன் தசரதராமன், கோசலராமன், ஜானகி ராமன், சீதாராமன், இரகுராமன், சுந்தரராமன் எனப் போற்றப்படுகிறான். ஆழ்வார்கள் அனுபவ பாசுரங்களில் இந்த திருநாமங்களின் மேன்மையினை இராமகாதையோடு பொருந்த நோக்குவோம்.



### இரகுராமன்:


இராமன் ரகுகுல திலகன், இஷ்வாகு குலத்தில் திரேதா யுகத்தில் அவதரித்தவன். இதனையே குலசேகர ஆழ்வார் தம்முடைய பெருமாள் திருமொழியில்,

*"அங்கணெடு மதிள்புடை சூழ் அயோத்தி என்னும்*
*அணிநகரத்து உலகனைத்தும் விளக்கும் சோதி*
*வெங்கதிரோன் குலத்துக்கோர் விளக்காய்த் தோன்றி"*

நான்கு திசைகளிலும் மதில்களால் சூழப் பெற்ற அயோத்தி மாநகரத்திற்குரிய சூரிய வம்சத்தின் (ரகுவம்சம்) விளக்கு போலே இராமன் சித்திரை மாதம் புனர்பூச நட்சத்திரத்தில் அவதாரம் செய்தமையினால் இரகுராமன் என்னும் திருநாமம் பெற்றார்.

### தசரதராமன்:

*"தவளமாட நீடு அயோத்திக் காவலன்தன் சிறுவன்*
*குவளைவண்ணன்"*



**சீதாராமன்:**

அரசர்களும் சக்ரவர்த்திகளும் கூடியுள்ள சபையினில் மிதிலையின் அரண்மனையில் ஜனக மகாராஜனின் முன்னிலையில், அண்ணலும் நோக்கினான், அவளும் நோக்கினாள் என்பதான சீதா தேவியின் காதல் வசத்தினால் எவரும் முறியடிக்க முடியாததான சிவதனுசினை முறித்து, சீதாதேவியை மணம் புரிந்ததால் சீதாராமனாகவும், ஜானகி ராமனாகவும், கல்யாண ராமனாகவும் இராமன் அழைக்கப்படுகிறார்.

திருமங்கை ஆழ்வார் பெரிய திருமொழியில் திருத்தேவனார்தொகை திவ்ய தேசத்தில் சேவை சாதிக்கும் தெய்வநாயகன், சீதாதேவியினை திருமணம் செய்து கொள்வதன் பொருட்டு வைரம் போன்ற வலிமையுடைய வில்லினை முறித்து தனித்துவம் வாய்ந்த காளை போன்றவன் இராமன் என வர்ணனை செய்கிறார்.

*“வாராரும் இளங்கொங்கை மைதிலியை மணம் புணர்வான்*
*காரார்திண் சிலையிறுத்த தனிக்காளை கருதுமிடம்”*

குலசேகர ஆழ்வார் திருக்கண்ணபுரம் சௌரிராஜ பெருமாளை இராமனாக தாலாட்டும்போது “தமது உந்தித் தாமரையில் நான்முகக் கடவுளைப் படைத்தவனே, தசரத சக்கரவர்த்தியின் புதல்வனே, சீதா தேவியாகிய மைதிலியின் மணாளனே” என்றும் தாலாட்டுகிறார்.

வெண்மையான மாட மாளிகைகள் மிகுதியாய் இருக்கின்ற நீண்ட வீதிகளையுடைய அயோத்தி மாநகரின் சக்கரவர்த்தியான தசரதனின் குமாரனாய், குவளை மலரின் வண்ணத்தினை உடையவனாய், தசரதராமன் திகழ்ந்ததை திருமங்கை ஆழ்வார் அனுபவிக்கிறார்.

ஆயிரமாயிரம் அரக்கர்களை வீழ்த்துவதற்காகவே தசரதன் மரகத நிறமுடைய தடாகம் போன்ற இராமனைப் பெற்றெடுத்தான் என நம்மாழ்வார் திருமோகூர் எம்பெருமானை முன்னிட்டுக் கொண்டு பாசுரமிடுகிறார்.

**கோசலராமன்:**

கௌசலையின் மகனாய்ப் பிறந்ததினால் கோசலராமன் என்றழைக்கப்படுகிறார். ஸ்ரீராம அவதாரத்தினை மிகவும் அனுபவித்து பாசுரங்கள் இயற்றியதில் குலசேகர ஆழ்வார் முதன்மையானவர். அவர் பெருமாள் திருமொழியில்

*“மன்னுபுகழ்க் கௌசலைதன் மணிவயிறு வாய்த்தவனே!*

நிலைநின்ற புகழினை உடைய கௌசலையின் அழகிய திருவயிற்றினில் உதித்தவனே என்றும்

*“கொங்குமலி கருங்குழலாள் கௌசலைதன் குலமதலாய்”*

பரிமளமிக்க நறுமணமுடைய கருத்த கூந்தலை உடைய கௌசலையின் குலம் தழைக்க வந்த சிறுவனே என்றும் கொண்டாடுகிறார்.

திருமலை வேங்கடவனை அதிகாலை துயில் எழுப்புவதான சுப்ரபாதத்தின் முதல் வரியிலேயே *“கௌசல்யா சுப்ரஜா ராமபூர்வா சந்த்யா ப்ரவர்த்ததே”* என வேங்கடவனும் கோசலராமனாகவே துயிலெழு கிறார்.

**கோதண்டராமன்:**

இராமபிரான் என்றதும் அவர் திருக்கைகளில் வைத்திருக்கும் சாரங்கம் என்னும் வில்லும், தோளிலே உள்ள அம்பறாத்தூளியும் ஆழ்வார்களின் மனத்தின்கண் நிழலாடுதல் இயல்பேயன்றோ. அடியார்களை காத்திடவும், தீயோர்களை



அழித்திடவும் இராம அவதாரத்தில் தாடகை முதல் இராவணன் வரை அனைவரையும் மாய்க்க வில்லும் அம்புமே பிரதான ஆயுதமாகப் பயன் படுத்துவதால் கோதண்ட ராமன் என்னும் திருநாமம் பெறுகிறார்.

சுக்ரீவனின் மனைவியைக் கவர்ந்த வாலியின் வலிமையினை தோற் கடிக்க தாம் வல்லமை பெற்றுள்ளதை நிரூபிக்கும் வண்ணம் தேன்கூடுகள் நிறைந்த கிளைகளையுடைய மரங்கள் நிறைந்த சோலையில் ஏழு மரங்களை ஒரே அம்பு எய்தலில் துளையிட்டதை நம்மாழ்வார் திருவாய் மொழி பாசுரத்தில் அனுபவிக்கிறார்.


காழிச்சீராம விண்ணகரம் தாடாளன் திருமங்கை ஆழ்வாரால் இராமனாக அனுபவமாகும்போது, இராமன் கோபத்தால் சிவந்த முகத்தி னையுடைய வாலியினையும், அடர்ந்து பரந்த காட்டிலிருந்த கவந்தன் என் னும் கொடிய அரக்கனையும், உறுதியான கைகளில் உக்கிரமான ஆயுதங்களை வைத்துக்கொண்டு சிவந்த கோபம் தெறிக்கும் சிவந்த கண்களோடு போரிட வந்த விராதன் என்னும் அரக்கனையும் வில்லினால் வீழ்த்தியதையும் விவரணம் செய்கிறார்.


*“பைங்கண்விறல் செம்முகத்து வாலிமாளப்*
*படர்வனத்துக் கவந்தனொடும் படையர் திண்கை*
*வெங்கண் விறல் விராதனுக விற்குனித்த”*

திருக்குடந்தையில் சாரங்கபாணியாகவும், திருப்புள்ளம்பூதங்குடியில் வல்வில் ராமனாகவும், திருவெள்ளியங்குடியில் கோலவில்லி ராமனாகவும் பெருமாள் சேவை சாதித்தருள்கிறார்.

**சுந்தரராமன்:**

இராமகாதையில் அனுமனின் வைபவம் கிஷ்கிந்தா காண்டம் முதல் மிகவும் பிரதானமாதலால் சுந்தரகாண்டம் என்னும் தனி காண்டமே எழுதப்பட்டு சீதாதேவியினை இலங்கையில் தரிசித்தது முதல் இராவண யுத்தம் மற்றும் சீதாராம பட்டாபிஷேகம் வரை அனுமனின் பாகவத சேவை இராமாயணத்தில் கொண்டாடப்படுகிறது. அனுமனின் பெயரினை சேர்த்த சுந்தரராமன் என்னும் திருநாமமும் இராமபிரானுக்கு பிரசித்தமாயிற்று. இராமபிரான் தன்னுடைய திருக்கை மோதிரத்தினை அனுமனிடம் அளித்து இலங்கைக்குச் சென்று சீதாதேவியினை சந்தித்து இராவணாதிகளை அழித்து சிறை மீட்டு வந்துக் கொண்டிருப்பதாக தூது சொல்லியனுப்பியதை திருஎவ்வுள் வீர ராகவனை சேவிக்கும்போது முன்னோர் தூது வானரத்தின் வாயில் மொழிந்து என அனுபவிக்கிறார்.





*"மிக்கபெரும் சபை நடுவே*
*வில்லிறுத்தான் மோதிரங்கண்டு*
*ஒக்குமால் அடையாளம் அனுமான்!*
*என்று உச்சிமேல்*
*வைத்துக்கொண்டு உகந்தனளால்*
*மலர்க்குழலாள் சீதையுமே"*


சமுத்திரத்தைத் தாண்டி அனுமன் இலங்கை அடைந்து சீதாதேவியினை சந்தித்து தாம் இராம தூதுவனாக நல்ல செய்தி கொண்டு வந்திருப்பதாக உறுதிப்படுத்த இராமகாதை நிகழ்வுகளை இராமனும் சீதையும் தனித்து இருக்கும் போது நடந்த நிகழ்வுகளையும் சுட்டிக் காட்டி இராமபிரானின் மோதிரத்தை சீதாதேவியிடம் அளிக்க, சீதாதேவி பக்தியுடன் பெற்றுக் கொண்டு மோதிரத்தை தலைமேல் சூட்டிக்கொண்டு மகிழ்ச்சி அடைந்ததை பெரியாழ்வார் திருமொழியில் காட்டப்படுகிறது.

**ஜெயராமன்:**

கடலின்மீது அணைக்கட்டி இலங்கையினை அடைந்து இராவணனுடன் போரிட்டு வெற்றிப் பெற்று சீதையினை மீட்டதினால் ஜெயராமன் என்னும் திருநாமம் பெறுவது பொருத்தமன்றோ.

*"அம்பின் வாய்ப்பட் டாற்றகில்லா திந்திர*
*சித்தழிந்தான்*
*நம்பி அனுமா! சுக்கிரீவா! அங்கதனே! நளனே!*
*கும்பகர்ணன் பட்டுப்போனான்"*

இலங்கையில் அனுமன், சுக்ரீவன், அங்கதன், நளன் உள்ளிட்ட வானர சேனைகளுக்கும், இராவணன் சேனைகளுக்கும் இடையே நடந்த மாபெரும் போரில் இராவணன் குமாரன் இந்திரஜித், தம்பி கும்பகர்ணன் முதலானோர் இராம லக்ஷ்மணர்





களின் அம்புகளினால் வீழ்ந்ததை திருமங்கை ஆழ்வார் பாசுரத்தில் தெரிவிக்கிறார்.

*"மின்னனைய நுண்மருங்குல் மெல்லியற்கா*
*இலங்கை*
*வேந்தன் முடியொருபதும் தோளிருபதும் போயுதிர*
*தன்னிகரில் சிலை வளைத்தன் றிலங்கை பொடி*
*செய்த"*

மின்னலைப் போன்ற மெல்லியதும் ஒளிவீசும் படியான இடையினையுடைய சீதாபிராட்டியினை மீட்கும் பொருட்டு இலங்கை மன்னன் இராவண னோடு கடும்போர் புரிந்து அவனுடைய பத்துத் தலைகளையும் இருபது தோள்களையும் அம்பு களினால் அறுத்து அவனுடைய உடலில் இருந்து அவைகள் உதிர்ந்து பூமியில் விழும்படியாகக் கொன்று, இலங்கையினை பொடியாக்கி வீரம் செறிந்த தோள்களையுடைய வெற்றியாளன் ஜெயராமன் என திருமங்கை ஆழ்வார் திருவைகுந்த விண்ணகரம் வைகுந்த நாதனைப் போற்றுகிறார்.


**ராஜாராமன்:**

சக்கரவர்த்தியாகத் திகழ்பவர் தம்முடைய எல்லைக்கு உட்பட்ட நாட்டில் சிறிய அரசுகளை தம்மாட்சிக்கு உட்பட்டதாய் சிற்றரசர்களை தேர்ந்தெடுத்து முடிசூட்ட வேண்டும். அத்தகைய சிற்றரசுகளை உருவாக்கியவன் ராஜாராமன், சக்கரவர்த்தி திருமகன் எனவும் போற்றப்படுகிறார்.

*"உருத்தெழுவாலிமார்வில் ஒருகருணை யுருவ*
*வோட்டி*
*கருத்துடைத் தம்பிக்கின்பக் கதிர் முடியரசளித்தாய்"*

சுக்ரீவனின் அண்ணனான வாலியின் மார் பினை அம்பினால் பிளந்து அழித்து, சுக்ரீவனுக்கு

பட்டாபிஷேகம் செய்துவைத்ததை திருக்காவளம்பாடி திவ்யதேசத்தில் கோபால கிருஷ்ணனாக சேவை சாதிக்கும் எம்பெருமானிடம் திருமங்கை ஆழ்வார் அனுபவித்து பாசுரமிடுகிறார்.



*"முனைமுகத்து அரக்கன் மாள முடிகள் பத்தறுத்து*
*வீழ்த்து ஆங்*
*கனையவற் கிளையவற்கே அரசளித்தருளினானே"*

இலங்கையில் இராவணனுடன் போரிட்டு அவன் பத்து தலைகளையும் அம்பினால் அறுத்து மண்ணில் வீழும்படி வீழ்த்தி, இராவண யுத்தத்தில் வெற்றிப் பெற்று, இராவணனின் தம்பியான விபீஷணனுக்கு இலங்கை அரசனாக முடி சூடியதும் இயம்பப்படுகிறது.

**பட்டாபிராமன்:**

*"அம்பொனெடு மணிமாட அயோத்தியெய்தி அரசெய்தி"*

போர்முடித்து புஷ்பக விமானத்தில் சீதா தேவியோடு அயோத்திமாநகர் வந்தடைந்த இராமனுக்கு பொன்னாலும், நவரத்தின மணிகளாலும் இழைக்கப்பட்டு ஒளிவீசும் மணிமகுடங்களையுடைய அயோத்தியின் சக்கரவர்த்தியாக வசிஷ்ட முனிவரால் முடிசூட்டப்பட்டு அறநெறி தவறாமல் ஆட்சி புரிந்ததை குலசேகர ஆழ்வார் திருச்சித்திரகூட கோவிந்தராஜனை பட்டபிஷேக ராமனாக சேவிக்கையில் பாசுரமிட்டு அருள்கிறார்.

மதுராந்தகத்தில் ஏரியினை காத்ததினால் ஏரிகாத்த ராமர், பத்ராசலத்தில் பத்ராசல ராமர், மேல்கோட்டையில் ராமப்பிரியர், கிருஷ்ண அவதாரத்துடன் தொடர்புபடுத்தி இராம கிருஷ்ணன், இராம மூர்த்தி, இராமச் சந்திரன், துளசிராமன் என பல்வேறு திருநாமங்கள் சூட்டப்பட்டு பாரத தேசத்தில் அவர் புகழ் என்றொன்றும் நிலைத்திருப்பது இராம பக்தர்களின் பெரும்பாக்கியம்.



**வேங்கட ராமன் :**

*"தென்னிலங்கை மன்னன் சிரந்தோள் துணிசெய்து*
*மின்னிலங்கு பூண் விபீடணநம்பிக்கு*
*என்னிலங்கு நாமத்தளவுமரச்சென்ற*
*மின்னலங் காரற்கோர் கோல் கொண்டுவா"*

பெரியாழ்வார் பாசுரத்தில் தென்னிலங்கை மன்னனான இராவணனின் தலைகளையும் தோள் களையும் அம்பினால் அறுத்துக் கொன்று அவன் தம்பியான விபீஷணனுக்கு தம்முடைய பெயர் என்றென்றும் விளங்கும்படியாக இலங்கை அரசனாக முடிசூட்டுவித்தவன் திருமலையிலே மின்னலைப் போன்ற திருவாபரணங்களை தரித்துக்கொண்டு பக்தர்களுக்கு சேவை சாதிப்பதால் திருமலை எம்பெருமான் வேங்கடராமன் என்று போற்றப்படுகிறார்.

# புனர்வசு (புனர்பூசம்) நக்ஷத்திரத்தின் ஏற்றம்



**திருமதி பிரேமா நந்தகுமார்,**
**ஸ்ரீரங்கம், 04312432959**

நமது தெய்வங்களைக் கொண்டாடும் போது, அவர்களையும் நம் போன்றவர்களாகவே நினைத்து வழிபடுவதில் எல்லையற்ற மகிழ்ச்சிக் கிடைக்கிறது. அவர்களது பிறந்த நாட்களை கொண்டாடுவதில் தான் எவ்வளவு ஆனந்தம்! காரணம், நம்மை தூய்மைப்படுத்திக் கொள்ள சனாதன தர்மம் காட்டும் வழி இதுதான்.

சிருஷ்டி அனைத்துமே இறைவனின் காட்சி. இக்காட்சிகள் அனைத்துமே அவனது மாட்சியைப் பறைசாற்றுகின்றன. எங்கும் நிறைந்த இறைவனுக்கு, எவன் காலத்திற்கு அப்பாற்பட்டவனோ, அவனுக்கு ஜன்மதினம் கொண்டாடுகிறோம். இறைவனுக்கு என்று ஒரு நக்ஷத்திரம், அன்று எங்குமே குதூகலம். இந்த ஒரு காரணம் முக்கியமானது. அவதாரங்கள் தோன்றிய நக்ஷத்திரம், மாதம் கணித்துக் கொண்டாடுவதால் அன்று விசேஷமாக இனிமை நம்மைச்சுற்றி சுழல்கிறது.

நரசிம்மர் போன்று ஒரு கணமே நம்முன் நின்று கொடுமையான இரணியகசிபுவை அழித்த அவதாரத்திற்கு சுவாதி நக்ஷத்திரம் என்று சொல்கிறோம். அன்றைய தினம் நரசிம்மர் கோயில்களெங்கும் மக்கள் திரண்டு வந்து கூட்டமாக வழிபாடு செய்கின்றனர். அதுபோல கிருஷ்ணனுக்கு ரோகிணி, ஆண்டாளுக்கு பூரம் என பக்தியில் நீந்துகிறோம். மக்கள் மத்தியில் ஆனந்தம் துள்ளுகிறது. இந்த வகையில் ஸ்ரீராமச்சந்திர மூர்த்திக்கு புனர்வஸு நக்ஷத்திரம் கூறப்படுகின்றது. இதை வால்மீகி முனிவரே பதிவு செய்திருக்கிறார்.

*“ததஸ்ச த்வாதஸே மாஸே சைத்ரே நாவமிகே திதௌ*
*நக்ஷத்ரே அதிதி தைவத்யேஸ்வ உச்ச ஸம்ஸ்தேஷு பஞ்ச்சஸு*
*க்ரஹேஷு கர்கடே லக்னே வாக்படா இந்துனா ஸஹ*
*ப்ரோத்யமானே ஜகன்னாதம் ஸர்வலோக நமஸ்க்ருதம்*
*கௌஸல்யா அஜனயத் ராமம் ஸர்வ லக்ஷண ஸம்யுதம்*
*விஷ்ணோ அர்த்தம் மஹாபாகம் புத்ரம் ஐக்ஷ்வாகு நந்தனம்*
*லோஹிதாக்ஷம் மஹாபாஹும் ரக்த ஓஷ்டம் துந்துபிஸ்வனம்”*

புத்திர காமேஷ்டி யாகம் முடிந்து ஆறு ருதுக்கள் நிறைந்து பன்னிரண்டாவது மாதத்தில் சித்திரை மாதம், நவமி திதியில் அதிதியை தலைமையாகக் கொண்ட (புனர்வஸு) நக்ஷத்திரத்தில் ஐந்து கிரகங்கள் தங்களது இடத்தில் உச்ச நிலையில் இருந்திட, கடக லக்னத்தில், வாக்பதியான வியாழன் சந்திரனுடன் எழும்போது (இது முன்னேறிவரும் அபிஜித் லக்னத்தைக் காட்டுகிறது)உலகத்து நாயகனை, அனைத்து உலகங்களாலும் வணங்கப் படுபவனை, உயர்ந்த லக்ஷணங்கள் அனைத்தையும் கொண்டவனை, சாக்ஷாத் மகாவிஷ்ணு போன்ற உயர்ந்த குணங்கள் பொருந்தியவனை, இக்ஷ்வாகு குலத்தோன்றலை, தாமரைக் கண்கள், நீண்ட திருக்கரங்கள், சிவந்த உதடுகள், கம்பீரமான குரல்



முதலியவற்றை உடைய மகனை கௌசல்யை ஈன்றாள். உயர்ந்த புனர்வஸு நக்ஷத்திரத்தில் இராமர் பிறந்ததால் அந்த நக்ஷத்திரம் ஏற்றம் பெற்றது என்றாலும், இந்த நக்ஷத்திரத்திற்கே பல பெருமைகள் உண்டு. இச்சொல்லை புன:, வஸு என்று பிரித்தால் "மறுமலர்ச்சி" என்றே பொருள் பெறுகிறோம். இது நினைக்கும் போதே மகிழ்ச்சித் தருகிறதல்லவா!

இந்த நக்ஷத்திரத்தின் தேவதை அதிதி என்பது மிகப் பெருமை தருவது. அதிதி என்பவள் சாமான்ய தேவதையா? அவளை தேவமாதா என்று கொண்டாடுகிறோம். பன்னிரு சூர்யர்களுக்குத் தாய் அவள். அதனால், இந்த நக்ஷத்திரமும் அவளது சத்தியம், பொலிவு, ஆளுமை, பெருந்தன்மை, தூய்மை போன்ற குணங்களை இயற்கை யாகப் பெற்றிருக்கிறது. இதனால் இந்த நக்ஷத்திரத்தில் பிறந்தவர்கள் இயற்கை யாகவே இவற்றில் பல நற்குணங்களைப் பெற்றிருப்பார்கள் என நம்பப்படுகிறது.

காலம், இருப்பிடம் முதலியவை இவர்களை கட்டுப்படுத்துவதில்லை என்று சொல்வதுண்டு. கஷ்டம், துயரம் முதலியன வந்தால் நடுங்காமல் அவைகளை எதிர்கொள்வார்களாம். இதற்குக் காரணம் அவர்களுக்கு இயற்கையாகவே உள்ள இனிய பேச்சு, நட்புரிமையுடன் பழகும் குணம், ஆன்மீகத் தேடல் முதலியன இவர்களிடம் பழகும் போதே தெரிய வரும் என்று பெரியவர்கள் சொல்லக் கேட்டதுண்டு.

"புனர்வஸுவா" நல்ல நக்ஷத்திரமாச்சே ! குணவானாக நேர்மையுடன், ஆற்றல்கள் பல பெற்றிருப்பான் என்றும் ஜாதகம் பார்க்கத் தெரியாதவர்கள் கூட சொல்வார்கள். இதற்காக இராமபிரானை மட்டுமின்றி இன்றைய காலத்தைச் சேர்ந்த பலர் பெயர்களும் சொல்வார்கள்.

நம்மைப்பொறுத்தவரை இது இராமபிரானின் நக்ஷத்திரம், இராமநவமி கொண்டாடும் நேரமிது. இந்த நேரத்தில் இக்ஷ்வாகு இராமனை நினைத்து, நாரத மகரிஷி வர்ணிக்கும் அவனது சிறந்த குணங்களைப் படித்து, நாமும் அவற்றில் ஓரிரண்டு குணங்களை வளர்த்துக் கொள்வோம் என்று நிச்சயம் செய்துக்கொண்டு புனர்வஸு நக்ஷத்திரத்தையும் ஏற்றுக் கொள்வோமே!

வால்மீகியின் ஆசிரமத்துக்கு நாரதர் வருகிறார். அவர்களிருவரும் பேசிக்கொண்டிருக்கும்போது, உலகத்தில் அனைத்து நற் குணங்களும் பெற்று சிறந்தவன் யார்? என்ற கேள்விக்கு நாரதர், புனர்வஸுவினில் பிறந்த இராமபிரானை முன் வைக்கிறார். நாரதர் பதில் சொல்லும்போதே இராமாயணத்தில் நடக்கும் முக்கியமான செய்தி மூலம் இராமனின் சிறப்பை சுட்டிக் காட்டுகிறார். இப்படி கணக்கற்ற நற்குணங்களை பெற்றவன் இக்ஷ்வாகு குலத்தில் தோன்றிய இராமனே.



அவன் புத்திமான், நியா யத்தை அனுசரிப்பவன், சிறந்த பேச்சாளன் என்று தொடங்கும் நாரதர், தன் மக்களை காப்பதும், எதிரிகளை அழிப்பதும் இராமனுக்கு இயற்கை, ஏன் உலகத்தில் எந்த நல்லதொரு மனிதனோ, பிராணியோ

இருந்தாலும் அவனே காப்பு. தர்மத்தை காப்பவன், *''ரக்ஷிதா ஜீவலோக ஸ்தரமஸ்ய பரிரக்ஷிதா''* என குதூகலிக்கிறார். இதுதானே ராமராஜ்யம் என்ற சொல்லுக்கு மூலம்.

ப்ரதிஜ்ஞ என்ற சொல், ஒருவருக்குக் கொடுக் கும் வாக்குறுதி என்னும் பொருள் கொண்டது. இச்சொல் மிகவும் சக்தி வாய்ந்தது. வாக்குத்தத்தம் செய்து விட்டால், அதை மாற்றக்கூடாது. அந்தக் காலத்தில் கடிதத்திலோ, நீதித்துறை அல்லாத முத்திரைத் தாளிலோ கையெழுத்துப் போட வேண்டி யிருக்க வில்லை. வாயால் சொல்லும் வார்த்தைக்கே அளவற்ற மதிப்பு இருந்தது. அதனை எளிதில் மீற முடியாது. தனது தந்தை, கைகேயிக்கு கொடுத்த வாக்கிற்கு கட்டுப்பட்டதால், தந்தைக்கு கொடுத்த வாக்கை மீற முடியாமல் காட்டிற்குச் சென்றவன் இராமன் என்பதை நாரதர் சொல்கிறார்.:

*''ஸ ஸத்யவசனாத் ராஜ தர்மபாசேன ஸம்யத:*
*விவாஸயாமாஸ ஸுதம்ராமம்தம் சரத: ப்ரியம்''*

அயோத்யா காண்டத்தின் பெருமை, புனர்வஸு வில் தோன்றிய இராமர், தந்தை சொல்லைக் காப்பாற்ற காட்டிற்குச் சென்றதுதானே?

சிறிய விஷயத்திலும் பெரிய பிரச்சனைகளிலும், நாம் சொன்ன வாக்கைக் காப்பாற்ற வேண்டும் என்று நிச்சயம் செய்துக்கொண்டு ஸ்ரீராமச்சந்திர மூர்த்தி யையும், அவர் தோன்றிய புனர்வஸு நக்ஷத் திரத்தை யும் கொண்டாடி மகிழ்வோம்.

## ஸ்ரீகோதண்டராமஸ்வாமி ஆலயம், ஒண்டிமிட்டா, ஆந்திரமாநிலம்.

**ஸ்ரீராமபிரான் தந்தையின் ஆணைபடி, 14 ஆண்டுகள் வனவாசம் செய்தபோது, பல்வேறு இடங்களுக்கு சீதை மற்றும் லக்ஷ்மணருடன் சென்று கொண்டிருந்தார். சீதையை இராவணன் கவர்ந்து சென்ற போது ஸ்ரீராமருக்கு சுக்ரீவரின் நட்பு ஏற்பட்டது. ஆஞ்சநேயரும், ஜாம்பவானும் சீதையைத் தேடத் தொடங்கினர். ஜாம்பவான் தனக்கு கிருத யுகத்தில் ஸ்ரீராமச்சந்திர மூர்த்தி தரிசனமளித்த ஒண்டிமிட்டாவிற்கு வந்தான். அந்த இடத்தை வணங்கி விட்டு, சீதா தேவியை தேடச் சென்றான். கலி யுகத்தில் இங்கு ஆலயம் நிர்மாணிக்கப்பட்டது. இவ்வாலயத்தில் ஸ்ரீராமலக்ஷ்மண சீதை வன வாசம் செய்வது போன்று கொலு வீற்றிருக்கின்றனர். இங்கு வாழும் மக்கள் இத்தலத்தை இரண்டாம் அயோத்தியாக அழைக்கின்றனர்.**



**2015 ஆம் ஆண்டு திருமலை திருப்பதி தேவஸ்தானத்தினர் இந்த ஆலய நிர்வாகத்தை ஏற்று, அன்று முதல் ஸ்ரீராமநவமி மஹோத்ஸவம் இராமநவமியை முன்னிட்டு ஆந்திர மாநில அரசு சார்பில், தி.தி.தே. மேற்பார்வையில் மிகச் சிறப்பாகக் கொண் டாடப்பட்டு வருகிறது. லக்ஷ கணக்கில் பக்தர்கள் இங்கு நடைபெறும் திருக்கல்யாணத்தை கண்டு களிக்கின்றனர்.**



# வைணவக் குறுக்கெழுத்துப் புதிர் - 69

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | | 2 | | | | 3 | | | |
| | | 6 | | | | | 5 | | | | 4 |
| 7 | | | | | 8 | | | | | 9 | |
| | | | | | 11 | | | | | | 10 |
| 12 | 13 | 14 | 15 | ■ | 17 | | ■ | 26 | ■ | ■ | ■ |
| | | | | ■ | | | ■ | | | | 22 |
| | | | | | | | ■ | | | 24 | |
| | | | | | | 25 | ■ | | | | |
| | | ■ | ■ | | ■ | ■ | | | | | |
| | | 21 | ■ | | ■ | | | | | ■ | |
| | ■ | | ■ | | | | | | | ■ | |
| | ■ | | ■ | 23 | 20 | 19 | 18 | ■ | 16 | ■ | |

## இடமிருந்து வலம்

1. தசரதனுடைய மகனாதலால் இராமன் .....(4) என்றும் அழைக்கப்பட்டார்.
2. யுத்தமே இல்லாத பூமி.....(4)
3. ஜானகியின் தந்தை.....(4)
7. சீதையை மணக்க இராமன் முறித்த வில்....(5)
8. இராமர் பிறந்த நக்ஷத்திரம்.....(5)
9. இராமனின் அவதாரத்தை குறிப்பிடுவது....(2) காண்டம்

## வலமிருந்து இடம்

4. கொடு மனத்துக் கூனியின் இயற்பெயர்.....(4)
5. தசரதரின் குலகுரு.....(5)
6. சீதா தேவி பிறந்த பட்டணம்....(3)
10. தசரதரின் ஆலோசகர்.....(6)
11. .....(6) வதத்தின் போது தசரதர் கைகேயிக்கு இரண்டு வரங்கள் அளித்திருந்தார்.
22. கங்கையாற்றின் படகோட்டி ....(3)
24. கழுகுகளின் அரசன்....(3)
26. திருப்புள்ளம் பூதங்குடியில் அருள்பவர்.....(7)

## மேலிருந்து கீழ்

12. தசரதர் ......(8) ஆண்டுகள் ஆட்சி புரிந்தார்.
13. தசரதருக்குச் சாபம் கொடுத்த முனிவர்....(6)
14. இராமனின் திருப்பாதம் பட்டவுடன் கல்லாக இருந்த .....(4) பெண்ணாக மாறினாள்
15. வசிஷ்டரிடம் இருந்த பசு.....(4)
17. ஸ்ரீராம பத்னி....(4)
21. 21 தலைமுறை சத்திரிய வம்சத்தை அழித்தவர்....(3) ராமன்.
22. இந்திராசனத்திற்குப் பதிலாக நித்ராசனத்தை கேட்டவன்.....(7)

## கீழிருந்து மேல்

16. தசரதனுக்காக புத்திரகாமேஷ்டி யாகம் செய்தவர்.....(6)முனிவர்
25. திருப்பதியில் அருள்புரிபவர்.....(4)ராமர்
18. பரதனின் மாமன் ஊர் நந்தி......(4)
19. .....(3) எனும் பெண் முனிவர் தந்த கனியை இராமர் மனமுவந்து ஏற்றார்.
20. வாலியின் மனைவி....(2)
23. லக்ஷ்மணனால் மூக்கறுபட்டவள்..... (6)

தொகுப்பு :
திரு. டி,டி.வரதராஜன், சென்னை
979198950

புதிருக்கு விடை அறிய
18ம் பக்கம்
பார்க்கவும்...

# ராம நாமம் சோறு போடுமா?

‘‘ராம ராம’’ என்று ஓயாமல் ஜபித்துக் கொண்டே இருந்தார் ஒரு பெரியவர். நின்றாலும் நடந்தாலும் அவர் இராம நாமம் ஜபிப்பதை விடுவதா யில்லை. எப்போதும் வாய் மணக்க இராம நாமம் உச்சரணம் செய்தவராய் ஒரு தவயோகியைப் போல வாழ்ந்தார் அவர். அவரைத் தொடர்ந்து கவனித்துக் கொண்டிருந்த ஓர் இளைஞன் ஒரு நாள் அவரிடம் வந்தான். இப்படி ஓயாமல் இராம நாமம் ஜபித்துக் கொண்டிருக்கிறீர்களே வாய் வலிக்காதா? இவ்விதம் இராம நாமத்தை விடாமல் ஜபிப்பதால் என்ன பயன் என்று அவரைக் கேட்டான். பெரியவர் அந்த இளைஞனைப் பார்த்து பரிவோடு அவன் மனதில் பதியும் விதத்தில், இராம நாமத்தின் மகிமையைப் பற்றி விளக்கி கூறலானார். அன்பனே ஒரு நாட்டு மக்கள் அத்தனை பேரையும் ஒருங்கிணைத்து அந்த நாட்டுக்கு சுதந்திரம் வாங்கித் தருமளவு வலிமை பெற்றதப்பா இந்த இராம நாமம். இமயத்தில் வாழும் சிவபெருமானே இந்த இராம நாமத்தினை பல்வேறு படியாக புகழ்ந்திருக்கிறார். திருமாலின் ஆயிரம் நாமங்களைச் சொல்வதை விடவும் இந்த ஒரு நாமத்தைச் சொன்னாலே போதும், அது ஆயிரம் நாமங்களைச் சொன்ன பலனைத் தரும் என்று அவர் தம் மனைவி பார்வதிக்கு உபதேசம் செய்திருக்கிறார். இன்னும் சொல்லப் போனால் இராமரை விடவும் உயர்வானது இராம நாமம். இராமனுக்குக் கூட கடலை கடக்க சேது அணை கட்ட வேண்டிய தேவை நேர்ந்தது. அனுமனுக்கோ எந்த அணையும் தேவைப் படவில்லை. இராமநாமம் மட்டுமே போதுமானதாக இருந்தது. அவன் இராம நாமத்தை ஜபித்தவாறே கடலை ஒரே தாவாகத் தாவிக் கடந்து விட்டான். பிறவிப் பெருங்கடலை கடக்க வேண்டுமானால் இராம நாமத்தைத் தோணியாகக் கொள்ள வேண்டும். அது தம்மைக் கரை சேர்த்து விடும். தொடர்ந்து இராம நாம ஜபம் செய்து வருவதன் மூலம் பிறவித் தளையறுத்து நாம் முக்தி அடையலாம்.

மிகுந்த ஆர்வத்தோடும் ஈடுபாட்டோடும் சொல்லப்பட்ட அவரின் நீண்ட பேச்சைப் பொறுமை யாகக் கேட்ட இளைஞன், பேச்சினிடையே குறுக் கிட்டான். “சுவாமி, முக்தி சொர்க்கம் என்பதெல்லாம் இருக்கட்டும். அதெல்லாம் என் அறிவுக்கு அப்பாற் பட்ட விஷயங்கள். இராம நாமம் ஜபிப்பதால் என்ன பயன்? உங்கள் இராமநாமம் இந்தப் பிறவியில் எனக்குச் சோறு போடுமா? அதைச் சொல்லுங்கள்!”. பெரியவர் மீண்டும் புன்முறுவல் பூத்தார். பின் அழுத்தம் திருத்தமாக ஆணித்தரமான தம் கருத்தைச் சொல்லலானார். “ஏன் சோறு போடாது? தொடர்ந்து இராம நாம ஜபம் செய்து வந்தால், உன் புத்தி நன்கு தூண்டப்படும். அவ்விதம் புத்தி தூண்டப்படும் போது உழைக்க வேண்டும் என்ற உத்வேகம் உன் மனதில் தானாய்ப் பிறக்கும். அப்படி உழைத்தால் நிறையச்




என். பருவதம்,
மேல்படூர்.

சம்பாதிக்கலாம். சம்பாதித்தால் நன்றாகச் சாப்பிடலாம். அப்படியானால் இராம நாமம் சோறு போடுகிறது என்று தானே பொருள்?"

இந்தப் பதிலைக் கேட்டு இளைஞன் கடகடவென்று நகைத்தான். "சமத்காரமாகப் பேசுகிறீர்கள். நான் அப்படிக் கேட்கவில்லை சுவாமி! தொடர்ந்து ஓரிடத்தில் அமர்ந்து இராம ஜபம் செய்து கொண்டிருந்தால், நாம் இருக்கும் இடம் தேடி இராம நாமம் சோறு கொண்டு வந்து தருமா?'' இது தான் என்னுடைய கேள்வி!. பெரியவர் தாமும் இப்போது பதிலுக்கு நகைத்தார்.



"ஏன் கொண்டு வந்து தராது? கட்டாயம் கொண்டு வந்து தரும். நீ வேண்டாம் வேண்டாம் என்றாலும் இராம நாமம் உனக்குச் சோறு தந்துவிட்டுத் தான் மறுவேலை பார்க்கும். இராம நாமம் என்பது ஒரு புனிதமான ஆயுதம் அப்பா! அதனால் ஆகாதது ஒன்றுமில்லை. ஆனால், அதன்மேல் சந்தேகமில்லாத முழு நம்பிக்கை வைக்க வேண்டும், அவ்வளவுதான். இராம நாமத்தை நீ ஜபித்தால் இராம நாமம் உன்னைக் காப்பாற்றும். உன் உடல் நலனைக் காப்பதும் இராம நாமத்தின் பொறுப்பாகும். எனவே உனக்கு உணவு தர வேண்டியது அந்த நாமத்தின் பணியாகி விடும்".

இளைஞன் "அப்படியா? அதையும் தான் பார்க்கிறேன்" என்றவாறே ஓர் உறுதியுடன் புறப்பட்டான். பெரியவர் சொன்னது உண்மையாக இருக்குமா? இராம நாமத்தை நம்பினால் இராம நாமம் சோறு போடுமா? நாம் சாப்பிடக் கூடாது என்று உறுதியாக இருந்தால் இராம நாமம் எப்படிச் சோறு போடும்? சிந்தித்தவாறே நடந்த இளைஞன் மனித நடமாட்டமில்லாத காட்டிற்குச் சென்றான். ஒரு மேட்டுப்பாங்கான இடத்தில் பிறர் கண்ணுக்குத் தெரியாதவாறு ஒரு மரத்தின் மறைவில் உட்கார்ந்து கொண்டான். யாருமில்லாத இந்தக் கானகத்தில் யார் எனக்குச் சாப்பாடு கொண்டு தருவார்கள் பார்க்கிறேன் என்று மனதிற்குள் நினைத்துக் கொண்டான்.

கண்ணை மூடிக் கொண்டு தொடர்ந்து இராம நாம ஜபம் செய்யலானான். உண்மையிலேயே மன ஒருமைப்பாட்டுடன் இராம நாமத்தை ஜபிக்கத் தொடங்கினான். அவன், மெல்ல மெல்ல நாம ஜபத்தில் லயித்து விட்டான். மதியவேளை ஆகியது. யாரோ அருகில் நடந்து வரும் அரவம் கேட்டுக் கண் திறந்தான். கானகத்தின் வழியே எங்கோ செல்லும் வழிப்போக்கன் ஒருவன் இரண்டு நாட்களுக்கான உணவைக் கட்டுச் சோறாகக் கொண்டு வந்திருந்தான். மர நிழலில் அமர்ந்து மதிய உணவை உண்டான் அந்த வழிபோக்கன். மீதிச் சோற்றை தலைமாட்டில் வைத்துக் கொண்டு சின்னதாய் ஓர் உறக்கம் போட்டுக் களைப்பாறினான். பின் மெல்ல எழுந்து நடக்கலானான். நடக்கும் போது கட்டுச் சாத மூட்டையை மறந்து நடந்தான்! இவையனைத்தையும் பார்த்துக் கொண்டிருந்த இளைஞன் நாவில் எச்சில் ஊறத்தான் செய்தது. ஆனால், இராம நாமம் சோறு போடுமா? என்ற சோதனையை மேற்கொண்டிருப்பதால் அந்த சாப்பாட்டைத் தொடக்கூடாது என்று முடிவு செய்தான். தொடர்ந்து இராம நாம ஜபம் செய்யலானான். சிறிது நேரம் சென்றது. அப்போது அங்கே சில கள்வர்கள் வந்தார்கள். இளைஞன் தொலைவில் அமர்ந்து தியானம் செய்து கொண்டிருந்ததை அவர்கள் கவனிக்கவில்லை. வழிப்பறி செய்து கொள்ளையடித்த செல்வத்தை அவர்கள் தங்களுக்குள் பங்கிட்டுக் கொண்டனர். பங்கீடு முடிந்ததும் ஒருவன் அங்கே இருந்த சோற்று மூட்டையைக் கண்டான். அவர்கள் அனைவருக்கும் நல்ல பசி. சோற்று மூட்டையைப் பிரித்து

## பக்தர்களுக்கு வேண்டுகோள்

1. முகக்கவசம் தவறாமல் அணிந்து இருத்தல் வேண்டும்.
2. சமூக இடைவெளியை கடைப்பிடித்தல் வேண்டும்.
3. சானிடைசர் தவறாமல் உபயோகித்தல் வேண்டும்.
4. கூட்டமாக எங்கும் இருத்தல் கூடாது.
5. தவறாமல் கோவிட் நிபந்தனைகளை கடைப்பிடித்தல் வேண்டும்.
6. திருடர்கள் உள்ளனர். ஜாக்கிரதை.
7. தளாரிகளை நம்பி ஏமாறாதீர்கள்.
8. யாத்திரிகர்கள் தமது உடைமைகளை பாதுகாத்துக் கொள்ளுதல் வேண்டும்.
9. அந்நியர்களிடம் ஜாக்கிரதையாக இருத்தல் வேண்டும்.

உண்ணலாம் என முடிவு செய்து அதைப் பிரித்தார்கள்

ஆனால் அவர்களில் ஒருவனுக்கு திடீரென ஒரு சந்தேகம் வந்தது. கானகத்தில் எப்படிச் சோற்று மூட்டை வரும்? வழிப்போக்கர்கள் யாராவது மறந்து வைத்து விட்டுப் போயிருக்கலாம் தான். ஆனால் அது அப்படித்தான் இருக்க வேண்டும் என்பது என்ன நிச்சயமா? ஒரு வேளை கள்வர்களைக் கொல்லும் எண்ணத்தில் யாராவது விஷம் கலந்து சோற்று மூட்டையை வைத்திருந்தால் என்ன ஆகும்?

இப்போது அது விஷம் கலந்ததா இல்லை கலவாததா? என்பதை எப்படிக் கண்டு பிடிப்பது? வேறு யாருக்காவது இதை கொடுத்து அவர்களுக்கு ஒன்றும் ஆகவில்லை என்றால் விஷம் கலவாதது என்று முடிவு செய்யலாம். பிறகு இந்தச் சோற்றை எல்லோரும் ஆனந்தமாகச் சாப்பிட்டுப் பசியாறலாம். வயிற்றுப் பசிக்கு இப்போது சோறு கிடைத்தால் அதை விட சொர்க்கம் வேறு எதுவும் இல்லை. ஆனால் யாருக்கு இந்தச் சோற்றைக் கொடுத்து இப்போது பரிசோதனை நிகழ்த்துவது?

திருடர்கள் சுற்றும் முற்றும் உன்னிப்பாகப் பார்த்தார்கள். அங்கே ஓர் இளைஞன் தவமியற்றியவாறு அமர்ந்திருப்பதைக் கண்டார்கள். ஒருவேளை விஷம் கலந்த உணவை வைத்தவன் அவனாகவே கூட இருக்கலாம் என்று முதலில் நினைத்தார்கள். உணவை அவனிடம் கொடுத்துச் சாப்பிடச் சொன்னார்கள். இளைஞனோ சாப்பாடு கிடைத்தால் கூடச் சாப்பிடக்கூடாது என்ற எண்ணத்தில் இருந்ததால் சாப்பாட்டை வாயில் போட்டுக் கொள்ள மிகவும் முரண்டு பிடித்தான்.

உணவில் விஷம் கலந்துள்ளதோ என்ற சந்தேகம் திருடர்களுக்கு. அவனது நடவடிக்கை காரணமாக மேலும் வலுத்தது. அவனை இருவர் இறுகப் பிடித்துக் கொள்ள மற்றொருவன் அந்த இளைஞன் வாயில் வலுக்கட்டாயமாக உணவை ஊட்டினான். வேறு வழியின்றி உணவைச் சாப்பிட்டாக வேண்டிய நிலைமை இளைஞனுக்கு! பெரியவர் சொன்னபடியே நடக்கிறதே! வேண்டாம் வேண்டாம் என்று சொன்னாலும் இராம நாமம் சோறு போடுகிறதே? என்ன ஆச்சரியம்! இராம நாமத்தின் உண்மையான சக்தி அப்போதுதான் அவனுக்குத் தெரிந்தது. தொடர்ந்து "ராம ராம" என்று ஜபித்துக் கொண்டே இருந்தது அவன் மனம். இராம நாமத்தின் மகிமையைத் தனக்குக்கூறிய பெரியவரை அவன் மனம் மானசீகமாக வணங்கியது.

## வைணவக் குறுக்கெழுத்துப் புதிர் - 69க்கான பதில்

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 தா | ச | ர | தி | 2 அ | யோ | த் | யா | 3 ஜ | ன | க | ர் |
| லா | தி | 6 மி | ர் | ட | ஷ் | சி | 5 வ | ரை | த | ந் | 4 ம |
| 7 சி | வ | த | னு | சு | 8 பு | ன | ர் | வ | ஸு | 9 பா | ல |
| ர | சு | ரா | ப | ம் | 11 ச | ன் | ர | தி | ந் | ம | 10 சு |
| 12 அ | 13 ச | 14 அ | 15 கா | | 17 சீ | ட | | 26 வ | | | |
| று | ல | க | ம | | தா | ண் | | ல் | ன் | க | 22 கு |
| ப | போ | ல் | தே | கை | தே | த | | வி | டு | 24 ச | ம் |
| தி | ச | யா | னு | ன | வி | 25 கோ | | ல் | ட் | பா | ப |
| ணா | ன | | | ப | | | ம் | ரா | கோ | யு | க |
| யி | ர் | 21 ப | | ப் | | ரி | ம | ம | க் | | ர் |
| ர | | ர | | ர் | ரை | ப | ரா | ன் | லை | | ண |
| ம் | | சு | | 23 சூ | 20 தா | 19 ச | 18 கி | | 16 க | | ன் |



அகிலம் போற்றும் இராமனுதித்த அயோத்தி
அருஞ்சேயுடன் கோசலை உய்த்த அயோத்தி
அனந்தராமன் அரியணையேறிய அயோத்தி
அரி ஆலயமாய் அருள் பாலிக்கும் அயோத்தி ।

ஆதவ குலமாம் ரகுவம்சம் அரசாண்ட அயோத்தி
ஆசான் வசிட்டர் அரிக்கு முடிசூட்டிய அயோத்தி
அருமை லக்குவபரத சத்ருகன் மேவிய அயோத்தி
ஆழ்வார்கள் சாதித்த ரகுநாயகனுறை அயோத்தி ।

# அயோத்தியில் ஓர் ஆலயம்

அருந்தந்தையின் சொல்லொழுகிய அயோத்தி
அன்னை சீதையின் புனிதம் விண்ட அயோத்தி
அண்ணலின் பாதுகை அரசோச்சிய அயோத்தி
அவதாரத்தின் பட்டாபிடேகம் கண்ட அயோத்தி ।

அசுவமேத யாகத்து குண்டமுடை அயோத்தி
அரி தூதன் அனும குண்டமமைந்த அயோத்தி
அரி நாராயணன் குண்டமிருக்கும் அயோத்தி
அரி தீர்த்தமாடிய சரயு நதியோடும் அயோத்தி ।

அவனியின் வைகுண்டமாய் ஒளிர் அயோத்தி
அனுமனவன் அரியணை தாங்கிய அயோத்தி
அகத்திய முனிவரின் குடிலமைந்த அயோத்தி
அண்டியோருக்கு அபயமளிக்கும் அயோத்தி ।

அவனியில் ஆன்மீகம் பரப்பட்டும் அயோத்தி
அருமறை பொருளை போற்றட்டும் அயோத்தி
அநாதி சனாதனமதை காக்கட்டும் அயோத்தி
அனுதினம் அரி நாமங்கள் ஓதட்டும் அயோத்தி ।


திரு.தி.சுவாமிநாதன்,
கோவை.
9013300706



ஸ்ரீராமனின்
திருக்கல்யாண குணங்கள்

# ஸமர்த்தன்

## சாமர்த்யம் உடையவன்





**கருத்து:**

*நல்லவர்கள் சாமர்த்யமாக இருந்தால் உலகுக்கு நன்மையே.*
*தீயவர்கள் சாமர்த்யமாக இருந்தாலோ உலகுக்குத் தீமைதான்!*

### சுக்ரீவன் நட்பு ஏற்புடையதா?

இராமன் வாலியை ஓரம்பால் வீழ்த்தினான். உயிர் பிரியப் போகும் தருணத்தில் வாலி "இராமா! நீ சுக்ரீவனோடு நட்புக் கொண்டது அசட்டுத் தனமாக உள்ளது. இராவணன் என்னிடம் பயந்து நடுங்குபவன்! நீ என்னை நண்பனாகக் கொண்டிருந்தால் நான் என் நண்பனான இராவணனிடம் கூறி சீதையை மீட்டிருப் பேனே! ஒரு யானையை அடக்க சிங்கத்திடம் நட்புக் கொள்ளா மல் முயலிடமா நட்புக் கொள்வது? என்று ஏளனமாகக் கூறினான்.

இராமன் "நீதி சாஸ்த்ரம் "பகைவனின் நண்பன் பகைவன் என்றும், பகைவனின் பகைவன் நண்பன்" என்றும் கூறுகிறது. அதன்படி என்னிடம் பகைமை கொண்ட இராவணனின் நண்ப னான நீயும் எனக்குப் பகைவன். ஆகவே உனக்குப் பகைவனான சுக்ரிவன்தான் எனக்கு நண்பனாக முடியும். இந்த நட்பே நிலைக் கும்" என்று சாமர்த்யமாக விடை கூறினான். வலியவர்கள் நட்பை விட நல்லவர்கள் நட்பு நன்மை செய்யும். கூடா நட்போ குழியில் தள்ளும்!



### பாதுகையைப் பணயம் வைத்துத் தன்னை மீட்டான்

சித்ரகூடத்தில் பரதன் இராமனை வணங்கி நாடு திரும்பும்படி வேண்டி னான். தந்தையின் வாக்கை நிறை வேற்றுவதற்காக நாடு திரும்ப மறுத்த இராமன், பரதனை சமாதானப்படுத்த ஒரு வழியைக் கையாண்டான். தனக்குப் பிரதிநிதியாகத் தன் பாதுகையை பரதனுக்குக் கொடுத்து, அதை எடுத்துக் கொண்டு ஊர் திரும்பச் சொன்னான். பாதுகையின் மகிமை தெரிந்த பரதனால் மறுக்க முடியவில்லை. பாதுகையை நந்திக்ராமத்தில் எழுந்தருளப் பண்ணி அதற்கு பட்டாபிஷேகம் செய்து, அதன் பிரதிநிதியாக தான் இருந்து கொண்டு நாட்டைப் பாதுகாத்தான். இராமன் பாதுகையைப் பணயமாக வைத்தான். தன்னை மீட்டுக் கொண்டான்.

எப்போதும் பணயம் (அடகு) வைக் கும் பொருள் அதிக மதிப்புள்ளதாகவும், பெற்றுப் போகும் பணம் குறைவாகவும் இருக்கும். ஆகவே, இராமனை விட இராம பாதுகையின் மதிப்பு அதிகம் என்பதை சாமர்த்யமாக வெளியிட்டான் இராமன்.

**பாதிக்கப்பட்டவனே தீர்ப்புக் கூறினான்!**

இராமன் தன் மீது மறைந்திருந்து அம்பு எய்ததை எதிர்த்து வாலி பல கேள்விகளை எழுப்பினான். அவை "1. உனக்கும் எனக்கும் பங்காளிச் சண்டையோ நிலத்தகராறோ இல்லாதபோது என்னை ஏன் கொன்றாய்? 2)நான் மற்றொருவனோடு சண்டையிடும்போது ஏன் மறைந்து நின்று கொன்றாய்? 3) நாங்கள் காடு வாழ் விலங்கு; நீயோ நாடு வாழ் மனிதன். நமக்குள் தொடர்பே இல்லாதபோது ஏன் கொன்றாய்? 4) என்னை வேட்டையாடுவதற்காகக் கொன்றாய் என்றால் தோல், நகம், முடி அல்லது மாம்ஸம் ஆகிய எதற்காகவும் குரங்கை வேட்டையாட மாட்டார்களே! பின் நீ ஏன் அதைச் செய்தாய்? 5) எனக்கு தண்டனை அளிக்கவே கொன்றாய் என்றால் அந்த அளவுக்கு நான் என்ன குற்றம் புரிந்தேன்?" எனக் கேட்டான். இக்கேள்விகளுக்கு பதில் கூறிய இராமன்.

"1. இந்த கிஷ்கிந்தையும் எங்கள் அயோத்தி மன்னர்களுடையதே. இதனை நீ உன்னது என்றபடியால் நிலத்தகராறு உள்ளது. 2) தண்டனை கொடுக்கும் போதோ அல்லது வேட்டையாடும்போதோ நேருக்கு நேர் சண்டை செய்யத் தேவையில்லை. மறைந்திருந்தே கொன்றாலும் குற்றம் ஆகாது. 3)நாட்டை ஆளும் மன்னர்களான எங்களின் ப்ரஜை நீ. ஆகவே நமக்குள் தொடர்பு உள்ளது. 4) உன்னை தோலுக்காகவோ மாம்ஸத்துக்காகவோ வேட்டையாடவில்லை. குற்றம் புரிந்ததற்காகவே தண்டனை கொடுத்தேன். 5) தம்பி உயிரோடு இருக்கும்போது அவன் மனைவியைப் பறித்தது, காலில் விழுந்து சரணாகதி செய்த தம்பியை மன்னிக்காமல் விரட்டியது ஆகியவை நீ செய்த இரண்டு பெருங்குற்றங்கள்!" என்று நேர்மையான பதில்களைக் கூறினான். பதில்களில் இருந்த உண்மை புரிந்த வாலி தன் குற்றத்தை ஒப்புக் கொண்டு இராமனின் நேர்மையைப் பாராட்டினான். பாதிக்கப்பட்டவனே ஒப்புக் கொண்டபின் இராமன் மறைந்திருந்து கொன்றது குற்றமா எனும் வாதம் எதற்கு?

**- திரு. உ.வே. வேளுக்குடி கிருஷ்ணன் ஸ்வாமி,**

**சென்னை.**

*வளரும்...*

## ஸ்ரீபட்டாபிராமர் ஆலயம், வாயல்பாடு

**ஆந்திர மாநிலம், சித்தூர் மாவட்டத்தில் உள்ள வாயல்பாடு ஸ்ரீபட்டாபிராமர் ஆலயம் ராம பக்தனான ஜாம்பவானால் பிரதிஷ்டை செய்யப்பட்ட பெருமைக்குரியது. இந்த ஆலயத்தில் பட்டாபிஷேகக் கோலத்தில், ஸ்ரீராமபிரான், சீதா, லட்சுமண, பரத, சத்ருக்னர், அனுமனோடு ஒரே பீடத்தில் எழுந்தருளியிருப்பதால் இது ராம பஞ்சாயதன (ஐந்து பேர்களும்) ஆலயமாகக் கருதப்படுகிறது. இங்கு கருவறையில் ஸ்ரீராமபிரான் கோதண்டமின்றி, இடக் கரத்தில் கட்கம் என்ற குறுவாள் ஏந்தி காட்சியளிப்பது இத்தலத்தின் தனிச்சிறப்பாகும். இங்கு சீதா தேவியின் திருநட்சத்திரமான ஆயில்யத்தன்று திருக்கல்யாணம் நடை பெறுவதும் ஒரு சிறப்பாகும். பாஞ்சராத்ர ஆகம முறைப்படி தினப்படி பூஜைகள், உற்சவங்கள், சைத்ர மாதம் ஸ்ரீராமநவமிக்கு மூன்று நாட்களுக்கு முன்பாக தொடங்கி பிரம்மோத்ஸவம் நடைபெறுகிறது. பிரம்மோற்சவத்தின் ஆறாவது நாள் திருக்கல்யாணம் முடிந்து ஸ்ரீபட்டாபி சீதாராமர் கருட வாகனத்தில் திருவீதி உலா வர ஏழாவது நாள் ரத உற்சவம் நடைபெறுகிறது.**





# சிறை இருந்தவளின் ஏற்றம்



திருமதி ராஜலக்ஷ்மி, கேரளா
9946128102

விஷ்ணு புராணத்தில் பராசர முனி எழுதிய சுலோகம் *"ராகவத்வே அபவத் ஸீதா ருக்மிணி க்ருஷ்ண ஜன்மனி..."* எப்போது எல்லாம் ஸ்ரீமந் நாராயணன் அவதரிக்கின்றானோ, அப்போது எல்லாம் ஸ்ரீமஹாலக்ஷ்மி அவருடன் அவதரிப்பாள்.

ஸ்ரீராமாவதாரத்தில் சீதையாகவும், ஸ்ரீகிருஷ்ணாவதாரத்தில் ருக்மிணியாகவும் அவதரித்தாள் பிராட்டி. பகவானை விட்டு ஒரு நொடியும் பிரிய மாட்டாள். *"அகலகில்லேன் இறையுமென்று அலர் மேல் மங்கை உரை மார்பா..."* என்ற (திருவாய்மொழி) நம்மாழ்வாரின் பாசுரம் இதையே விளக்குகிறது.

புராணங்களில் பஞ்சகன்யா என்று ஐவரை போற்றுகிறார்கள். *"அகல்யா திரௌபதி ஸீதா தாரா மண்டோதரி ததா பஞ்சகன்யா ஸ்மரேன் நித்யம் மஹாபாதக நாசினி"* இந்த பதிவ்ரதா ஸ்த்ரீகளை வணங்கினால் நம் பாபங்கள் நீங்கும். இதில் சீதா தேவி மிக முக்கியமான அவதாரமாவாள். ஏன் இவர்களை வணங்கினால் நன்மை ஏற்படும் எனில் இவர்கள் தவம் செய்தவர்கள், வாழ்க்கையில் பல விரதங்களை மேற்கொண்டு தர்மத்தின் வழி நடப்பவர்கள். இவர்கள் வாழ்க்கை கடினமாக இருந்தாலும் இவர்களின் தபோ வலிமையால் தெய்வமாகவே போற்றத்தக்கவர்கள்.

### நிலத்தில் உதித்தவள் :

சீதை மிதிலையின் ஜனகராஜனுடைய நிலத்திலிருந்து உதித்தவளாவாள் . அதனால் அவளுக்கு பூமிஜா, ஷிதிஜா, ஜானகி, மைதிலி, வைதேகி, வனதேவி என்று பல திருநாமங்கள் உண்டு.

### சீதா நவமி :

சீதையின் பிறந்த நாளை, "சீதா நவமி" என்று கொண்டாடுவார்கள். வைகாசி புஷ்ய நக்ஷத்திரத்தில் அவதரித்தாள். இதை திருமணமான பெண்கள் முக்கியமாகக் கொண்டாடுவார்கள். பெண்கள் விரதம் இருந்து, விளக்கேற்றி, கோலமிட்டு, பூச்சாத்தி, பட்டு வஸ்திரம் சாத்தி, பூஜை செய்து பின்னர் விரதத்தை முடிப்பார்கள். இவ்வாறு செய்வதால் கணவன் மற்றும் குடும்பத்தினருக்கு சீரும் சிறப்பும், ஆயுள், ஆரோக்கியம், ஐச்வர்யம் கிட்டும். ஏனெனில் சீதை மஹாலட்சுமியின் அவதாரமாவாள்.

இராமாயணத்தின் சாரத்தை பல கவிஞர்கள் எழுதியுள்ளார்கள். அதில் சிலவற்றில் சீதையின் அன்பு, அவளின் சிறு வயது முதலே இயற்கை பாதுகாப்பு, மரம் நடுதல், வளர்ச்சி போன்ற இயற்கையுடன் ரசித்து அனுபவித்து வாழ்ந்து வந்தவள். இதுவே ஒரு தவ வாழ்வாகும். நாமும் இயற்கையை பாதுகாக்க வேண்டும்.

### சீதா கல்யாண வைபோகமே :

"விவாக பஞ்சமி" மற்றும் "பங்குனி உத்திரம்" என்று கூறுவது இந்த நாளில் சீதைக்கும் இராமனுக்கும் கல்யாணம் நடைபெற்றது. இருவரும் திருமணத்திற்கு முன் சில மங்கல விரதத்தை மேற்கொண்டார்கள்.



விடியற்காலை எழுந்து தீர்த்தமாடி, புதிய வஸ்திரங்கள், ஆபரணங்கள் அணிந்து, விளக்கேற்றி விரதம் இருந்தனராம். இக் காலத்திலும் இதை பல தம்பதியர்கள் கடைபிடிக்கிறார்கள். மஞ்சள் ஆடை சீதா இராமனுக்கு அணிவித்து, *"ஓம் ஜானகி வல்லபாய நம:"* என்று அர்ச்சிப்பார்கள். சீதையின் வஸ்திர நுனியை ஸ்ரீராமனுடைய வஸ்திரத்துடன் பின்னிடுவார்கள். தூபம், தீபம், பிரசாதம், தாம்பூலம் சமர்ப்பித்து தம்பதியர்கள் பிரியாவண்ணம் இருக்க மனமுருகப் பிரார்த்தனை செய்வார்கள். இப்போதும் பல திருக்கோயில்களில் திருக்கல்யாண உற்சவம் நடைபெறுகின்றன.

சீதையின் முழு வாழ்க்கையே ஒரு விரதமாகும். அவள் ஸ்ரீராமச்சந்திர மூர்த்தியை மணப்பதற்கு சித்திரை மாதத்தில் மூன்றாம் நாள் சுக்ல பக்ஷத்தில் விரதம் மேற்கொண்டாள். இப்போதும் திருமணம் ஆகாத பெண்கள் நல்ல கணவன் கிடைப்பதற்கும், திருமணமான பெண்கள் கணவனின் அன்பு பெருகுவதற்காகவும் இதை கடைபிடிக்கிறார்கள்.

**சீதையின் அயோத்தி :**

ஸ்ரீராமபிரான் 14 வருடம் கானகம் என்ற வரத்திற்கேற்ப கானகம் செல்ல புறப்பட்டார். சீதா தேவியும் பின் தொடர்ந்தாள். இதுவே ஒரு மிகப் பெரிய விரதமாகும். கணவனுடன் எங்கு இருந்தாலும் அது சுகமே என்று நிரூபித்தவள் சீதை. காட்டில் ஆசிரமத்தில் பல விரதங்கள் மேற்கொண்டாள். அதில் ஏகாதசி விரதமும் ஒன்றாகும். "சோமவார விரதம்" என்று திங்கட்கிழமை பங்குனி மாதத்தில் விரதம் மேற்கொண்டாள் மற்றும் சிரவணம், கார்த்திகை மாதங்களிலும் இந்த விரதம் மேற்கொண்டாளாம்.

**சிறையில் தவம் :**

இராவணன் சீதையை அசோக வனத்தில் சிறை வைத்தான். சீதா தேவி அந்த வனத்தையே தன் தவ வலிமையால் புனிதம் அடையச் செய்தாள். ஸ்ரீராமனை விட்டுப் பிரிந்ததால், அவள் குளிக்காமல், உண்ணாமல், உறங்காமல் எப்போதும் வடதிசை (இந்தியா) நோக்கி இராம நாமத்தை ஜபித்துக் கொண்டிருந் தாள். அசோக மரத்தினிடம் தன்னு டைய வாழ்க்கை, ஸ்ரீராமருடன் நடந்த இனிமை யான உரையாடல் போன்ற நிகழ்வுகளை கூறிக் கொண்டே இருப்பாள். அதனால் "அசோக விரதம்" என்று வைகாசி மாதத்தில் மூன்று நாட்களுக்குக் கொண்டாடுவார்கள். இந்த விரதம் காலை முதல் இரவு வரை அசோக மரத்திற்கு பூஜை செய்து விட்டு, ஆரத்தி காண்பித்து, பழங்கள் நைவேத்தியம் செய்து எல்லோர்க்கும் கொடுத்து விரதத்தை முடிப்பார்கள். இந்த விரதத்தினால் துன்பம் நீங்கி செழிப்பு உண்டாகும். சில இடங்களில் சித்திரை மாதத்திலும் செய்வார்கள். அசோக மரம் சீதைக்கு ஆறுதலாக இருந்தது. அதனால் எல்லோர்க்கும் நன்மை பயக்கும்.





## பதிவிரதா சீதை :

ஸ்ரீராமன் இராவணனை வென்று சீதையை ஏற்க மறுத்தார். சீதா தேவி தாம் அக்னி பிரவேசம் செய்து தன்னுடைய பதிவிரதா தன்மையை நிரூபித்தாள். இராம பிரான், சீதா தேவியின் புனிதத்தை உலக மக்கள் அறிய வேண்டும் என்பதற்காக இவ்வாறு ஒரு நிகழ்வை ஏற்படுத்தினார்.

## சீதா ராம பட்டாபிஷேகம் :

''சாக்ஷாத் பூஜை'' என்ற பூஜை சூரிய பகவானுக்காக செய்வது. இராமன், சூரிய குலத்தில் பிறந்தவன். அதனால் 14 ஆண்டு வனவாசம் முடிந்த பின் இருவரும் இந்த விரதத்தை மேற்கொண்டார்கள். இந்த விரதம் மேற்கொண்டு இழந்த செல்வம், ராஜ்ஜியம் திரும்பப் பெறலாம் என்பது ஐதீகம். சிலர் ஒரு நாள், நான்கு நாள் என விரதம் மேற்கொள்வர். காலையில் எழுந்து, புனித நீராடி, சூரிய தேவனுக்கு படையல் வைத்து, ஒரு வேளை மட்டும் உண்டு, சூரிய நமஸ்காரம் செய்வார்கள். சிலர் நிர்ஜலம் (தண்ணீர்) குடிக்காமலும் கடுமையாக விரதம் மேற்கொள்வர். சித்திரை அல்லது கார்த்திகை மாதத்தில் இதை ஏற்பார்கள். *''ஆரோக்யம் பாஸ்கராத் இச்சேத்''* என்ற வாக்கின்படி ஆயுள், ஆரோக்கியம், செல்வம் எல்லாம் அந்த சூரிய நாராயணர் வழங்குவார் என்று கூறப் படுகிறது.

சீதையின் சிறப்பு அவளுடைய குணமாகும். அவள் பொறுமையின் சிகரம். *''இயம் சீதா மம சுதா ஸஹ தர்ம சரீத்தவ''* என்று ஜனகர், சீதையின் திருக்கரங்களைப் பற்றி ஸ்ரீராமனின் திருக்கரங்களோடு இணைத்து கன்னிகா தானம் செய்தார். ராஜ ரிஷியான ஜனகரே சீதையை "மமசுதா'' என்னுடைய மகள் என்று மிக கௌரவமாகக் கூறினார். அது மட்டுமல்ல "லக்ஷ தர்ம சரீத்தவ" தர்மத்தில் உன்னுடன் துணையாகி இருப்பாள் என்று உறுதிமொழி கூறினார். அவ்வாறு சீதை தர்மம் என்ற விரதத்தை தன் வாழ்நாளில் மூச்சாகவே கொண்டு வாழ்ந்து வந்தாள். ''அக்னி பரீட்சை'' என்று அக்னி தேவன் சீதா பிராட்டியை ஏற்றதால் தூய்மை ஆனாள் என்பதும் ஒரு கூற்று. இவ்வாறு சீதை ஒரு சிறந்த புதல்வியாகவும், பத்தினியாகவும், தோழியாகவும், மஹாராணியாகவும், சந்நியாசினியாகவும் ஒவ்வொரு பாத்திரத்திலும் ஒரு விரதத்தை மேற்கொண்டாள்.

இயற்கையை மிகவும் பாதுகாத்து போற்றி வந்தாள். வால்மீகி முனிவர் அவளை "வனதேவி" என்றும் கூறுவார். இவ்வாறு சீதை பூவுலகத்திற்கான ஒரு வரப் பிரசாதமாவாள். அவளுடைய தியாகம் போற்றப்படுபவை. சாக்ஷாத் மஹாலட்சுமி தன் கருணையால் பூமியை காப்பதற்காக இந்த அவதாரம் மேற்கொண்டாள் என்பது



திண்ணம்.நமக்கெல்லாம் பக்தி, ஞானம், வைராக்கியம் என்ற மூன்று கருவிகள் மோக்ஷத்திற்கு உரியது என்று காண்பித்தாள்.

**சீதையின் பதிவிரதா அடையாளங்கள் :**

அவள் தன் கணவனே கண்கண்ட தெய்வமாக வாழ்ந்தவள். கணவனுடன் தர்ம வழி நடந்தவள். கருணை மிக்கவள். இனிமையானவள். பொறுமையை கடைபிடிப்பவள்.

ஸ்த்ரீ தர்மங்களை கடைபிடிப்பவள். எப்போதும் நெற்றியில் குங்குமம், திருமுகத்தில் மஞ்சள், கழுத்தில் மங்கள சூத்திரம், காதுகளில் ஆபரணம், கைகளில் வளையல்கள், தலையை அழகாகக் கட்டி பின்னி பூச்சூட்டி மிக அழகான அலங்காரங்களோடு காணப்படுபவள். சீதாதேவியாக மஹாலட்சுமி பூமியில் வாழ்ந்த காலமாக திரேதாயுகம் விளங்கிற்று.

**பாசுரங்கள் - கவிதைகள் :**

*''நெறிந்த கருங்குழல்''* என்று தொடங்கும் பெரியாழ்வார் பாசுரம் – இராமன் அடையாளமாகக் கொடுத்ததை சீதையிடம் அனுமன் சேர்த்த பாசுரம் – சீதைக்கு பலமாக இருந்தது. அனுமன் சீதையை கண்டது முதல், தான் "சீதா தாசன்" என்று கூறினார்.

ஏனெனில் கற்பின் உருவமாகத் திகழ்ந்து இருக்கின்றாள் மற்றும் இராமபிரான் எவ்வாறு இவளை பிரிந்துள்ளார் என்றும் எண்ணுகிறார். இது அவள் பதிவ்ரதா தன்மையைக் குறிக்கிறது.

குலசேகர ஆழ்வாரும் *''வைதேகி பிரியலுற்று''* என்ற பாசுரத்தில், இராமன் தன்னுடைய ஒரே சொத்தாகிய சீதா பிராட்டியை தொலைத்தார் என்று கூறுகிறார். இதிலிருந்து சீதாதேவி ஸ்ரீராமனுக்கு சொத்தாக விளங்குகிறார் என்பதை அறியமுடிகிறது.

அருணாச்சல கவிராயர் எழுதிய இராம நாடகத்தில் சீதையின் ஏற்றத்தை *''கண்டேன் சீதையை''* என்ற பாடலில் *"அரவிந்த வேதாவை தரவந்த சீதையை''* என்று சீதை ஸ்ரீமஹாலட்சுமியின் அடையாளமாகவேக் கூறியுள்ளார். அப்பாடலில் அனுமன், தான் சீதையைக் கண்டு, சீதையை ஒரு தவ வாழ்வின் புனிதமாகப் போற்றுகிறார்.

## திருமலையில் ஸ்ரீராமநவமி உற்சவம்



**திருவேங்கட மலையில் ஸ்ரீராம நவமி அன்று இராம நவமி ஆஸ்தானம் ஒவ்வொரு ஆண்டும் நடைபெறுகிறது. அன்று அதிகாலையில் ஸ்ரீராம சீதா லக்ஷ்மணருக்கு அபிஷேக ஆராதனைகள் நடைபெறும். ஸ்ரீராமருக்கு அவ்வேளையில் நித்திய நைவேத்திய வகைகளோடு பாசி பருப்பு ஊறவைத்து வைத்த வடபருப்பு, பானகம், நீர்மோர் போன்றவற்றையும் நைவேத்தியம் செய்வார்கள்.**

**இராமநவமி அன்று மாலை திருமலை திருமாட வீதிகளில் சீதாராம லக்ஷ்மணர் திருவீதி உலாவாக வரும் பொழுது ஏராளமான பக்தர்கள் ஸ்ரீராமரை துதித்து மகிழ்வர். அன்று சீதாராம லக்ஷ்மண ஸ்வாமியும் ஊஞ்சல் சேவை சாதிப்பார். அன்னமய்யா கீர்த்தனைகளுடன், தியாகராஜ ஸ்வாமிகளின் ஸ்ரீராம கீர்த்தனைகளுடன் பாராயணம் செய்வர்.**

**அதுமட்டுமின்றி திருமலையில் மாதந்தோறும் ஸ்ரீராமர் அவதரித்த திருநட்சத்திரமான புனர்வசு அன்று சீதாராமருடன் லஷ்மணருக்கு அபிஷேக ஆராதனைகள் மற்றும் ஊஞ்சல் சேவையும் நடைபெறும்.**

## இதில் பொருந்தாதது எது?



குறிப்பு : கிருஷ்ணன், முருகன், சிவன், இராமனுக்கு தொடர்பு இல்லாதவற்றை கட்டத்தில் எழுதவும்.



இரண்டு சித்திரங்களுக்கு இடையே உள்ள ஏழு வித்தியாசங்களை கண்டு பிடியுங்கள்



1) ஸ்ரீராமரின் திருக்கிரீடம்
2) ஸ்ரீராமரின் திருக்கர கங்கணம்
3) ஸ்ரீராமரின் திருக்கழுத்து டாலர்(பதக்கம்)
4) ஸ்ரீராமரின் திரு அம்பு
5) ஸ்ரீராமரின் திரு வில்
6) சீதா தேவியின் திருக்கூந்தல் மலர்
7) சீதா தேவியின் திருக்கம்மல்



# ஸ்ரீராமநவமி பூஜை முறை

அதிகாலையில் எழுந்து ஸ்நானம் செய்து விட்டு, அன்றாட காலை வேலைகளை முடித்து மிகவும் தூய்மையான மனத்துடனும், நம்பிக்கையுடனும், பக்தியுடனும் துளசி, மலர்கள், பழங்கள் என பூஜைக்குத் தேவையான பொருட்களுடன் – ஸ்ரீராமரின் படம் அல்லது விக்ரகம் வைத்து நம் குல வழக்கம் போல் வழிபடுதல் வேண்டும்.

ஸ்ரீகேசவாதி நாமங்களுடன் ஆசமனீயம் செய்த பின் பிராணாயாமம் ஆசரித்து சங்கல்பம் செய்தல் வேண்டும்.

**மமோபாத்த துரித க்ஷயத்வாரா ஸ்ரீபரமேஸ்வர ப்ரீத்யர்தம் சுபே சோபனே முஹூர்த்தே ஸ்ரீமஹா விஷ்ணோராஜ்ஞாயா ப்ரவர்தமானஸ்ய அத்ய ப்ரஹ்மண: த்விதீய பரார்த்தே ச்வேதவராஹ கல்பே, வைவஸ்வத மந்வந்தரே, கலியுகே ப்ரதம பாதே ஜம்பூத்வீபே பரத வர்ஷே பரத கண்டே மேரோ: .... திக்பாகே, ஸ்ரீசைலஸ்ய.... ப்ரதேசே, கங்கா கோதாவர்யோ:, மத்யதேசே, அஸ்மின் வர்தமான வ்யஹாரிக சாந்த்ரமானேன ஸ்வஸ்தி ஸ்ரீ ... நாம சம்வத்ஸரே உத்தராயணே வசந்த ருதௌ சைத்ர மாஸே சுக்லபக்ஷே நவம்யாம்... வாஸரே சுபநக்ஷத்ர சுபயோக சுபகரண ஏவங்குண விசேஷண விசிஷ்டாயம் ஸ்ரீமான்... கோத்ர: தர்மபத்னீ சமேத:... நாமதேய: ஸ்ரீமத:... கோத்ரஸ்ய.... நாம தேயஸ்ய சஹகுடும்பஸ்ய க்ஷேம ஸ்தைர்ய தைர்ய ஆயுராரோக்ய ஐச்வர்யாபிவ்ருத்த்யர்தம், ஜாம்பவத்சுக்ரீவ ஹனும லக்ஷ்மண பரத சத்ருக்ன பரிவார சமேத ஸ்ரீசீதாராமசந்த்ர தேவதா ப்ரீத்யர்தம், ஸ்ரீசீதாராமசந்த்ர தேவதா ப்ரசாத சித்த்யர்தம் சோடசோபசார பூஜாம் கரிஷ்யே...**

என சங்கல்பித்து கலச ஆராதனை செய்து கலசம் மீது கைகளை வைத்து,

**கலசஸ்ய முகே விஷ்ணு: கண்டே ருத்ர: ஸமாச்ரித:**
**மூலே தத்ர ஸ்திதோ ப்ரஹ்மா மத்யே மாத்ருகணாஸ்தீதா: ||**
**குக்ஷௌது சாகராஸ் ஸர்வே ஸப்த த்வீ பா வஸுந்தரா|**
**ருக்வேதோத யஜுர்வேதஸ்ஸாமவேதோஹ்யதர்வண: ||**
**அங்கைச்ச ஸஹிதா ஸ்ஸர்வே கலசாம்பு ஸமாச்ரிதா:|**
**கங்கே ச யமுனே க்ருஷ்ணே கோதாவரி ஸரஸ்வதி |**
**நர்மதே சிந்து காவேரி ஜலேஸ்மிந் ஸந்நிதிம் குரு ||**

புஷ்பத்தாலோ, துளசியாலோ எடுத்துக் கொண்டு தெய்வ ப்ரதிமை மேல் தெளித்து, தன் மீதும், பூஜை திரவியங்கள் மீதும் தெளித்து...

**அதௌ நிர்விக்னேன பரிசமாப்த்யர்தம் ஸ்ரீமஹாகணபதி பூஜாம் கரிஷ்யே.. (கணபதியை பூஜித்து) பூர்வ சங்கல்பித ஸ்ரீசீதா ராமசந்திர பூஜாம் கரிஷ்யே...**

என பூஜையை ஆரம்பித்தல் வேண்டும்.

## த்யானம்

**வாமேபூமி சுதா புபுரஸ்து ஹனுமான் பச்சாத்சு மித்ரா சுத: |**
**சத்ருக்னோபரதச்ச பார்ஸ்வதளயோ: வாய்வாதி கோணே ஷுச**
**சுக்ரீவச்ச விபீஷணச்ச யுவராட்தாராசுதோ ஜாம்பவான் |**
**மத்யே நீலசரோஜ கோமலருசிம் ராமம் பஜே ஸ்யாமலம்**
**சு. கந்தர்பகோடி லாவண்யம் – மந்தஸ்மித சுபேக்ஷணம்**
**மஹாபுஜம் ச்யாமவர்ணம் சீதாராமம் பஜாம்யஹம்**
**ஸ்ரீசீதாராமசந்த்ர பரமாத்மனே நம: த்யானம் ஸமர்பயாமி**

## ஆவாஹணம்

**ஸ்ரீராமாகச்ச பகவன் ரகுவீர ந்ருபோத்தமஜானக்யா ஸஹ ராஜேந்த்ர சுஸ்திரோ பவஸர்வதா**
**சு. ராமசந்த்ர மஹேஷ்வஸ – ராவணாந்தக ராகவ**
**யாவத்பூஜாம் சமாப்யேஹம் – தாவத்த்வம் சன்னிதிம் குரு.**
**சு. ரகுநாயக ராஜர்ஷே – நமோ ராஜீவலோசன**

ரகுநந்தன மே தேவ ஶ்ரீராமாபிமுகோ பவ

ஶ்ரீசீதாராமசந்த்ர பரமாத்மனே நம: ஆவாஹயாமி.

## சிம்ஹாசனம்

ராஜாதிராஜ ராஜேந்த்ர – ராமசந்த்ர மஹாப்ரபோ

ரத்ன சிம்ஹாசனம் துப்யம் – தாஸ்யாமி ஸ்வீகுரு ப்ரபோ

ஶ்ரீசீதாராமசந்த்ர பரமாத்மனே நம:

நவரத்னகசித சிம்ஹாசனம் ஸமர்பயாமி

## பாத்யம்

த்ரைலோக்ய பாவநானந்த – நமஸ்தே ரகுநாயக பாத்யம்

க்ருஹாண ராஜர்ஷே – நமோ ராஜீவலோசன ஶ்ரீசீதா ராமசந்த்ர

பரமாத்மனே நம: பாதயோ: பாத்யம் ஸமர்பயாமி

## அர்க்யம்

பரிபூர்ண பரானந்த – நமோ ராஜீவ லோசன

க்ருஹாணார்க்யம் மயாதத்தம் – க்ருஷ்ணவிஷ்ணோ

ஜனார்த்தன ஶ்ரீசீதா ராமசந்த்ர பரமாத்மனே நம: ஹஸ்தயோ:

அர்க்யம் ஸமர்பயாமி

## ஆசமனம்

நமோ நித்யாய சுத்யாய – புத்தாய பரமாத்மனே

க்ருஹாணாசமனம் ராம–சர்வலோகைக நாயக!

ஶ்ரீசீதாராமசந்த்ர பரமாத்மனே நம: முகே ஆசமனம்

ஸமர்பயாமி

## மதுபர்கம்

நம: ஶ்ரீவாசுதேவாய – புத்தாய பரமாத்மனே

மதுபர்கம் க்ருஹாணேதம் – ராஜராஜாயதே நம:

ஶ்ரீசீதாராமசந்த்ர பரமாத்மனே நம: மதுபர்கம் ஸமர்பயாமி

## பஞ்சாம்ருதஸ்நானம்

க்ஷீரம் ததிக்ருதம்சைவ – சர்கராமது சம்யுதம்

சித்தம் மஞ்சாம்ருதஸ்நானம் ராமத்வம் ப்ரதிக்ருஹ்யதாம்

ஶ்ரீசீதா ராமசந்த்ர பரமாத்மனே நம:

பஞ்சாம்ருத ஸ்நானம் ஸமர்பயாமி

## சுத்தோதக ஸ்நானம்

ப்ரஹ்மாண்டோதர மத்யஸ்தம் தீர்தைச்ச ரகுனந்தன

ஸ்னாபயிஷ்யா ம்யஹம் பக்த்யா – சங்க்ருஹாண ஜனார்தன!

ஶ்ரீசீதாராமசந்த்ர பரமாத்மனே நம:

ஸ்நானனந்தரம் ஆசமனீயம் ஸமர்பயாமி

## வஸ்த்ரம்

சந்தப்த காஞ்சன ப்ரக்யம் – பீதாம்பரயுகம் சுபம்

சங்க்ருஹாண ஜகன்னாத – ராமசந்த்ர நமோஸ்துதே

ஶ்ரீசீதாராமசந்த்ர பரமாத்மனே நம:

வஸ்த்ரயுக்மம் ஸமர்பயாமி

அனந்தரம் ஆசமனீயம் ஸமர்பயாமி

## யஜ்ஞோபவீதம்

அஜ்ஞானத்வம்சனம் நணாம் ப்ரஜ்ஞாகரமனுத்தமம்

தரம் யஜ்ஞோபவீதம் மே வாஞ்சிதார்த்த பலப்ரத

யஜ்ஞோபவீதம் ஸமர்பயாமி

## ஆபராணானி

கௌஸ்துபாஹார கேயூர – ரத்ன கங்கண நூபுரான்

ஏவமாதீ நலங்காரான் – க்ருஹாண ஜகதீஸ்வர ।

ஶ்ரீசீதாராமசந்த்ர பரமாத்மனே நம: ஆபரணான் ஸமர்பயாமி

## கந்தம்

குங்குமாகரு கஸ்தூரி–கற்பூரை ர்மிச்ர சம்பவம்

துப்யம் தாஸ்யாமி தேவேச – ஶ்ரீராம ஸ்வீகுரு ப்ரபோ

ஶ்ரீராமசந்த்ர பரமாத்மனே நம: ஶ்ரீகந்தம் ஸமர்பயாமி

## புஷ்பம்

துளசீகுந்தமந்தார ஜாதீ புன்னாகசம்பகை:

நீலாம்புஜைர்பில்வதளை: புஷ்பமால்யைச்ச ராகவ ।

பூஜாயிஷ்யாம்யஹம் பக்த்யா சங்க்ருஹாண ஜனார்தன

ஶ்ரீசீதாராமசந்த்ரபரமாத்மனே நம:

நாநாவித பரிமள பத்ர புஷ்பாணி ஸமர்பயாமி

## வனமாலா

துளசீகுந்த மந்தார – பாரிஜாதாம்புஜைர்யுதாம்

வனமாலாம் ப்ரதாஸ்யாமி – க்ருஹாண ஜகதீஸ்வர

ஶ்ரீசீதாராமசந்த்ர பரமாத்மனே நம: வனமாலாம் ஸமர்பயாமி

## அங்க பூஜை

| | |
|---|---|
| ஶ்ரீராமாய நம: | பாதௌ பூஜயாமி |
| ஶ்ரீராமபத்ராய நம: | ஜங்கே பூஜயாமி |
| ஶ்ரீராமசந்த்ராய நம: | ஜாநுனீ பூஜயாமி |
| ஶ்ரீசாஸ்வதாய நம: | ஊரூ பூஜயாமி |
| ஶ்ரீரகுவல்லபாய நம: | கடிம் பூஜயாமி |
| ஶ்ரீதசரதாத்மஜாய நம: | உதரம் பூஜயாமி |
| ஶ்ரீகௌசலேயாய நம: | நாபிம் பூஜயாமி |
| ஶ்ரீலக்ஷ்மணாக்ரஜாய நம: | வக்ஷஸ்தலம் பூஜயாமி |
| ஶ்ரீகௌஸ்துபாபரணாய நம: | கண்டம் பூஜயாமி |
| ஶ்ரீராஜராஜாய நம: | ஸ்கந்தௌ பூஜயாமி |
| ஶ்ரீகோதண்டதராய நம: | பாஹூன் பூஜயாமி |
| ஶ்ரீபரதாக்ரஜாய நம: | முகம் பூஜயாமி |
| ஶ்ரீபத்மாக்ஷாய நம: | நேத்ரௌ பூஜயாமி |
| ஶ்ரீரமாய நம: | கர்ணௌ பூஜயாமி |
| ஶ்ரீசர்வேஸ்வராய நம: | சிர: பூஜயாமி |
| ஶ்ரீராமசந்த்ர பரப்ரஹ்மணே நம: | ஸர்வாம்ண்யங்கானி பூஜாயாமி |

தத: ஶ்ரீராமாஷ்டோத்தர சதநாம பூஜாம்குர்யாத்

# ஸ்ரீராம அஷ்டோத்தர சத நாமாவளி

ஓம் ஸ்ரீராமாய நம:
ஓம் ராமபத்ராய நம:
ஓம் ராமசந்த்ராய நம:
ஓம் சாச்வதாய நம:
ஓம் ராஜீவ லோசனாய நம:
ஓம் ஸ்ரீமதே நம:
ஓம் ராஜேந்த்ராய நம:
ஓம் ரகுபுங்கவாய நம:
ஓம் ஜானகீவல்லபாய நம:
ஓம் ஜைத்ராய நம: (10)
ஓம் ஜிதாமித்ராய நம:
ஓம் ஜநார்தனாய நம:
ஓம் விஸ்வாமித்ர ப்ரியாய நம:
ஓம் தாந்தாய நம:
ஓம் சரணத்ராண தத்பராய நம:
ஓம் வாலிப்ரமதனாய நம:
ஓம் வாஜ்மினே நம:
ஓம் ஸத்யவாசே நம:
ஓம் ஸத்யவிக்ரமாய நம:
ஓம் ஸத்ய வ்ருதாய நம: (20)
ஓம் விரதராய நம:
ஓம் ஸதாஹனுமதாச்ரிதாய நம:
ஓம் கோஸலேயாய நம:
ஓம் கரத்வம்ஸிநே நம:
ஓம் விராத வத பண்டிதாய நம:
ஓம் விபீஷண பரித்ராணாய நம:
ஓம் ஸப்ததாளப்பிரபேத்திரே நம:
ஓம் ஹரகோதண்டகண்டனாய நம:
ஓம் தசக்கிரீவ சிரோஹராய நம:
ஓம் தாடகாந்தகாய நம: (30)
ஓம் ஜாமதக்ன்ய மஹா தர்பதள நாய நம:
ஓம் வேதாந்தஸாராய நம:
ஓம் வேதாத்மனே நம:
ஓம் பவரோகஸ்ய பேஷஜாய நம:
ஓம் திருமூர்த்தயே நம:
ஓம் திரிகுணாத்மகாய நம:

ஓம் திரிவிக்கிரமாய நம:
ஓம் திரிலோகாத்மனே நம:
ஓம் புண்யாசாரித்திர கீர்த்தனாய நம:
ஓம் திரிலோகரக்ஷகாய நம: (40)
ஓம் தன்விநே நம:
ஓம் தண்டகாரண்யவர்தனாய நம:
ஓம் புண்ணியக்ருத நம:
ஓம் அஹல்யா சாபசமனாய நம:
ஓம் பித்ரு பக்தாய நம:
ஓம் வரப்ரதாய நம:
ஓம் ஜிதேந்திரியாய நம:
ஓம் ஜ்தேந்திரியாய நம:
ஓம் ஜிதக்ரோதாய நம:
ஓம் ஜிதாமித்ராய நம: (50)
ஓம் ஜகத்குரவே நம:
ஓம் ரிக்ஷவானரஸங்காதினே நம:
ஓம் சித்ர கூடஸமாச்ரயாய நம:
ஓம் ஜயந்த த்ராண வரதாய நம:
ஓம் ஸுமித்ர புத்ரஸேவிதாய நம:
ஓம் ஸர்வதேவாதிதேவாய நம:
ஓம் மிருத வானரஜிவனாய நம:
ஓம் மாயா மாரீசஹந்த்ரே நம:
ஓம் மஹாதேவாய நம:
ஓம் மஹாபுஜாய நம: (60)
ஓம் ஸர்வதீர்த்தமயாய நம:
ஓம் ஹரயே நம:
ஓம் ஸர்வதேவஸ்துதாய நம:
ஓம் சௌம்யாய நம:
ஓம் பிரஹ்மண்யாய நம:
ஓம் முனிஸம்ஸ்துதாய நம:
ஓம் மஹாயோகினே நம:
ஓம் மகோதராய நம:
ஓம் ஸுக்ரீவேப்ஸி தராஜ்யதாய நம:
ஓம் ஸர்வபுண்யாதிகலினே நம: (70)
ஓம் ஆதிபுருஷாய நம:
ஓம் ஸ்ம்ருதஸர்வாக நாசனாய நம:
ஓம் மஹாபுருஷாய நம:

ஓம் பரமபுருஷாய நம:
ஓம் புண்யோத்யாய நம:
ஓம் தயாஸாராய நம:
ஓம் புருஷோத்தமாய நம:
ஓம் அமித வக்த்ராய நம:
ஓம் பூர்வபாஷிணே நம:
ஓம் சுமித பாஷிணே நம: (80)
ஓம் ராகவாய நம:
ஓம் அனந்த குணகம்பீராய நம:
ஓம் தீரோதாத்தகுணோத்தமாய நம:
ஓம் மாயா மானுஷ சாரித்ராய நம:
ஓம் மஹாதேவாதி பூஜிதாய நம:
ஓம் ஸேதுகிருதே நம:
ஓம் ஜிதவாராசயே நம:
ஓம் ஸச்சி தானந்த நம:
ஓம் பரஸ்மைசோதிஷே நம:
ஓம் சியாமாங்காய நம: (90)
ஓம் ஸுந்தாராய நம:
ஓம் சூராய நம:
ஓம் பீதவாஸஸே நம:
ஓம் தனுர்தராய நம:
ஓம் ஸர்வயக்ஞாதிபாய நம:
ஓம் யஜ்விநே நம:
ஓம் ஜராமரணவர்ஜிதாய நம:
ஓம் விபீஷண பிரிதிஷ்டாத்ரே நம:
ஓம் ஸர்வவஷ்குணவர்ஜிதாய நம:
ஓம் பரமாத்மனே நம: (100)
ஓம் பரபிரஹ்மணே நம:
ஓம் பரஸ்மை ப்ரஹ்மணே நம:
ஓம் பராகா சாய நம:
ஓம் பராத்பராய நம:
ஓம் பரேசாய நம:
ஓம் பாராய நம:
ஓம் ஸர்வதேவாத்மகாய நம:
ஓம் பரஸ்மை நம: (108)

நாநாவித பரிமள பத்ர புஷ்பாணி
ஸமர்ப்பயாமி

### தூபம்

வனஸ்பத்யுத்பவைர்திவ்யை –
ர்ணாநாகந்தைஸ்ஸுசம்யுத:
அக்ரேய ஸ்லட்ர்வதேவானாம் தூபோயம்
ப்ரதிக்ருஹ்யதாம்
ஶ்ரீசீதாராமசந்த்ர பரமாத்மனே நம:
தூபமாக்ராபயாமி

### தீபம்

ஜ்யோதிஷாம் பதயே துப்யம் – நமோ ராமாய வேதஸே
க்ருஹாண தீபகம் ராஜன் – த்ரைலோக்ய திமிராபஹம் ।
ஶ்ரீசீதாராமசந்த்ர பரமாத்மனே நம:
தீபம் தர்ஸயாமி

### நைவேத்யம்

இதம் திவ்யான்னமம்ருதம் ரசைஷ்ஷட்பி: சமன்விதம்
ஶ்ரீராமசந்த்ர ராஜேந்த்ர।
நைவேத்யம் ப்ரதிக்ருஹ்யதாம்
விதி ப்ரகாரேண நிவேதனம் குர்யாத்.
மத்யே மத்யே பானீயம் ஸமர்பயாமி.
அம்ருதாபி தானமசி உத்தரா போசனம் ஸமர்பயாமி.
ஹஸ்தௌ ப்ரக்ஷாளயாமி முக ப்ரக்ஷாளனம் ஸமர்பயாமி.
பாதௌ ப்ரக்ஷாளயாமி
சுத்தாசமனீயம் ஸமர்பயாமி

### தாம்பூலம்

நாகவல்லீ தளைர்யுக்தம் பூகீபல சமன்விதம்
தாம்பூலம் க்ருஹ்யதாம் ராம கர்பூராதி சமன்விதம்
ஶ்ரீசீதாராமச்ந்த்ர பரமாத்மனே நம:
தாம்பூலம் ஸமர்பயாமி
தாம்பூல சர்வணானந்தரம் ஆசமநீயம் ஸமர்பயாமி

### நீராஜனம்

மங்களம் விஷ்வகல்யாண – நீராஜன மிதம் ஹரே
சங்க்ருஹாண ஜகன்நாத – ராமபத்ர நமோஸ்துதே
ஶ்ரீசீதாராமசந்த்ர பரமாத்மனே நம:
நீராஜனம் தர்சயாமி
நீராஜனானந்தரம் ஆசமநீயம் ஸமர்பயாமி

### மந்த்ரபுஷ்பம்

நமோ தேவாதிதேவாய – ரகுநாதாய சார்ஙிணே
சின்மயானந்த ரூபாய – சீதாயா: பதயே நம:
ஶ்ரீசீதாராமசந்த்ர பரமாத்மனே நம:
சுவர்ண திவ்யமந்த்ர புஷ்பம் சமர்பயாமி

### பிரதக்ஷிண நமஸ்காரம்

யானிகானிச பாபானி – ஜன்மாந்தர க்ருதானிச
தானிதானி ப்ரணச்யந்தி – ப்ரதக்ஷிண பதே பதே
பாபோஹம் பாபகர்மாஹம் – பாபாத்மா பாபசம்பவ:
த்ராஹிமாம் க்ருபயா தேவ – சரணாகத வத்ஸல ।
அன்யதா சரணம் நாஸ்தி – த்வமேவ சரணம் மம
தஸ்மாத்காருண்ய பாவேன – ரக்ஷரக்ஷ ரக்ஷத்தம ।।
ஶ்ரீசீதாராமசந்த்ர பரமாத்மனே நம:
ஆத்ம ப்ரதக்ஷிண நமஸ்காரம் ஸமர்பயாமி.

### புஷ்பாஞ்சலி

தாசரதாய வித்மஹே சீதாவல்லபாய தீமஹி
தன்னோ ராமசந்த்ர: ப்ரசோதயாத்
சீதாராமசந்த்ர பரமாத்மனே நம:
புஷ்பாஞ்சலிம் சமர்பயாமி

### உத்தர பூஜா

ஶ்ரீஜாம்பவத்சுக்ரீவஹனுமத் லக்ஷ்மண பரத
சத்ருக்ன பரிவார சஹித
ஶ்ரீசீதாராமசந்த்ர பரப்ரஹ்மணே நம:
சத்ரம் தாரயாமி
சாமரம் வீஜயாமி
கீதம் ச்ராவயாமி
ந்ருத்யம் தர்மயாமி
ஆந்தோளிகம் ஆரோஹயாமி
அஸ்வம் ஆரோஹயாமி
கஜமாரோஹயாமி
ஸமஸ்த ராஜோபசார தேவ்யோபசார பக்த்யோபசார
சக்த்யோபசார பூஜாம் சமர்பயாமி
யஸ்யஸ்ம்ருத்யாசனாமோக்த்ய –
தப:பூஜா க்ரியாதிஷு
ந்யூனம் சம்பூர்ணதாம்யாதி –
சத்யோ வந்தே தமச்யுதம் ।
மந்த்ரஹீனம் க்ரியாஹீனம் பக்திஹீனம் ரக்ஷத்தம।
யத்பூஜிதம் மயா ராம ।
பரிபூர்ணம் ததஸ்த்தே
அனயா த்யானாவாஹனாதி பூஜய
ஶ்ரீராமசந்த்ர தேவதா சுப்ரீதா சுப்ரசன்னா வரதா பவது (என்று அக்ஷதையும் நீரையும் விட்டு) சர்வம் ஶ்ரீசீதாராமசந்த்ரரார்பணமஸ்து



# அண்ணல் ராமரும் அறுவரும்

- முனைவர் ந. மைதிலி,சென்னை 9884347886

பாருக்குள்ளே நல்ல நாடு எங்கள் பாரதநாடு என்பதற்கு என்ன காரணம்?

*“ஞானத்திலே பரமோனத்திலே உயர் மானத்திலே அன்ன தானத்திலே கானத்திலே ...”* என பலவாறான காரணங்களை அடுக்குவார் மகாகவி பாரதி. ஆக, இவை யாவும் ஒரே தேசத்தில் இருக்கையில் இந்த நாடு நல்லநாடே.... மற்றும் ஓர் முக்கிய காரணம் என்னவென்றால், என்று தோற்றம் கொண்டது என்றறிய இயலாததான சனாதன தர்மம் என்ற இந்து சமயம் வேரூன்றி வளர்ந்து வரும் நாடு இப்பாரதநாடு. அற வழிக்காட்டி பக்திப்பாதையில் அனைத்து உயிர்களும் பயணிக்க வேண்டும் என்ற அறக் கொள்கை வகுக்கும் நாடு. இப்படி பாரதநாட்டைச் சிறப்பு வாய்ந்ததாக, உலகம் வியக்கும் வண்ணம் ஏற்புடையதாக ஏன் சொல்லவேண்டும் என்பதற்கு உதாரணமாக, இங்கு வாழும் மக்கள் மனித நேயத்துடன், ஒன்றிய சகோதரத்துவத்துடன் பின்னிப் பிணைந்து வாழ்வதைக் குறிப்பிடலாம். இதற்கு வழிகாட்டி சாட்சாத் இராமபிரான். எனவே, இராமபிரானின் சகோதரர்களும், சகோதரர்களாக ஏற்றுக் கொள்ளப்பட்டவர்களும் எப்படி? ஏன்? என்ற நோக்கில் இக்கட்டுரையில் காணலாம்.

உறவு என்பது இருவகைப்படும். ஒன்று பந்தத்தால் இணைவது, மற்றொன்று பிணைப்பால் எழுவது. இவை இரண்டுமே அரவணைப்பால் மேம்படும் இரண்டு ஆத்மாக்களின் சங்கமமாகும். ஏற்றத்தாழ்வு, பாகுபாடு இல்லாமல் பார்க்கப்பட்டால் உறவுநிலை வளர்கிறது. கண்ணீரைத் துடைக்கும் கைகள், துயரத்தில் பங்கு கொள்ளும் உள்ளம் இவை அல்லவோ உறவை மேம்படுத்தவல்ல பாலங்கள். மேற்குறிப்பிட்ட அனைத்தும் நிரம்பப் பெற்றவர் ஸ்ரீராமபிரான்.



## சபரியின் பக்தி

**இராமாயணத்தில் சபரி என்ற பெண்மணி ஸ்ரீராமரின் மேல் அபார பக்தி கொண்டிருந்தாள். தினமும் ஸ்ரீராமபிரானின் விக்ரகத்திற்கு தன்னிடம் இருக்கும் பழங்களை நைவேத்தியம் செய்து அதை உண்டு வந்தாள். ஸ்ரீராமருக்கு படைக்கும் அந்த பழங்கள் எப்படி உள்ளன என அவள் அதை தின்று பார்த்து படைப்பாள். ஒரு நாள் ஸ்ரீராமரை பார்த்து ஸ்வாமி இந்த பழம் புளிப்பாக உள்ளதா இல்லையா என்று சோதித்து பார்த்து கொடுத்தாள். அவளுடைய பக்தியை மெச்சி ஸ்ரீராமர் ஏற்றுக்கொண்டதோடு அல்லாமல் அப்பெண்மணிக்கு முக்தியும் கொடுத்தருளினார்.**




*"புண்டரீகங்கள் பூத்துப் புயல் தழியிப் பொலிந்த திங்கள் மண்டலம் உதயம் செய் மரகதக்கிரி அனான்"*

இராமச்சந்திர மூர்த்தி ...இவர் தம்மோடு உடன்பிறந்தவர்கள் பரதன், இலக்குவன், சத்ருக்கனன். இவர்கள் எந்த அளவிற்கு சகோதரப் பாசம் மிக்கவர்கள் என்பதை நாம் நன்கறிவோம். "குண்டலம் துறந்த கோலவதனன்" இராமன் சென்ற இடமெல்லாம் உடன் பயணித்தவன் லக்ஷ்மணன்.

தமிழிலுள்ள அடி உதவுவது போல அண்ணன் தம்பி உதவுவதில்லை என்ற பழமொழிக்குச் சான்றாக ஒருவன் உண்டென்றால் அவன் பரதன். ஆம் மரவுரி தரித்து இராமன் சீதையுடன் கானகம் ஏக, லக்ஷ்மணனும் பின் தொடர்கிறான். அதோடு கண்ணை இமைக் காப்பது போல இராமனையும் சீதையையும் காக்கிறான். பரதன் தன் சகோதரன் கானகம் சென்றதைக் கண்டு கானகம் நோக்கி வருகிறான். சேய்மையில் இக்காட்சியைக் கண்ட குகன், தன் படைகளுடன் பரதனோடு போருக்கு ஆயுத்தமாகிறான். பிறகு அண்மையில் அவ னது தோற்றத்தைக் கண்டு தன் செயலுக்கு வருந்தி அவ னிடம் மன்னிப்புக் கேட்கிறான். அதோடு ஆயிரம் இராமர் வந்தாலும் பரதா உன் ஒருவனுக்கு அவன் ஈடாகமாட்டான் என்று பரதனை உயர்த்துகிறான். இப்படி, பார்த்த அளவிலேயே பழகாமலேயே முகத்தோற்றத்தை வைத்து பரதனின் அருங்குணங்களை எடைபோட்டு, அவனுடைய சகோதர தர்மத்தை குகன் பேசுகிறான். எந்த அளவிற்கு இராமபரத சகோதரத்துவம் மேலோங்கி இருந்துள்ளது என்பதை இதற்கு மேலும் சொல்ல வேண்டுமா!

கானகம் வந்து சுருதிநூல் வல்லான் இராமனைத் தொழுது அவரின் பாதரக்ஷைகளைச் சிரமேற்கொண்டு அயோத்தி வந்தடைந்து பாதுகைகளை சிம்மாசனத்தில் வைத்து இராமராஜ்ஜியம் செய்தனன். *"ஏத்தரும் பெருங் குணத்து"* இராமன் வாழி என்று பதினான்கு ஆண்டுகள் சகோதரனுக்காக ஏங்கி நின்ற பரதன் காணீர். இவனுக்கு இணையாக சத்ருக்கனன் இருந்தனன்.

இனி இராமன் பிறரையும் சகோதரர்களாய் ஏற்றுக் கொண்டோரைக் காண்போம். அதற்கு முன் மகா பாரதத்தைக் காண்போம். பாண்டவர்களும் கௌரவர்களும் பங்காளிகளாவர். இருப்பினும், சகோதரப் பிணைப்பு இல்லாமல் போனதால் குருக்ஷேத்ர யுத்தம் ஏற்பட்டது. இறை வனேத் தூதுவனாகச் சென்றும் ஒற்றுமையின்மை அழிவைத் தந்தது. ஆனால், இராமாயணமோ ஒற்றுமையே பலம் என்பதை பல நிலைகளில் உணர்த்தி எப்படி அன்பைக் காட்ட வேண்டும் என்று பாதை வகுத்தது. வானரங்களும், புல்லினங்களும், அணில் முதலான சிறிய உருக் கொண்டதும் அன்புப் பாதையில் பயணித்து வெற்றியைத் தேடித் தந்தன. திரு உறையும் மணிமார்பன் இராமன் புள்ளினம் சார்ந்த ஜடாயுவிற்கு மோட்சம் அளித்ததோடு மகனாக இருந்து ஈமக் கடன்களை செய்தார் என்பதைக் காணும் போது இராமனின் கருணையுள்ளம் தெரிய வருகிறது.



ஆயிரம் பெயருடை அமரர்க்கும் அமரன் இராமன் குலம்பாராது குணம் பார்த்து மூவரைச் சகோதரர்களாக ஏற்றுக்கொண்டார். ஒரே குலத்தில் பகை மகாபாரதம். வேறு குலத்தவராயினும் அன்பே பிரதானம் இராமாயணம். வேடுவர் குலம், வானரக் குலம், அரக்கர்குலம்



கிறான். மனம் மாறவில்லை. உற்ற தோழனாக இறுதிவரை உடனிருக் கிறான். இறைவனுக்கு சகோதர னாகும் உரிமை பெறுகிறான். ரஜோ குணம் உடைய அரக்கன் வீடணன் இரணியன் போலின்றி உண்மை யான பக்தி செலுத்தி சரணாகதி அடைந்து நிலவுலகாளும் பேறு பெற்றதுடன் சகோதரனாகும் பாக்கியம் பெற்றார்.

எனவே இறைவன் குலம் பாரான், குணம் பார்ப்பவன் என்பது முடிந்தமுடிவு. பக்தி, அன்பு, நட்பு இவை இறைவனால் ஏற்றுக் கொள்ளப்படுவதோடு சகோதரன் ஆகும் பெரும் பேற்றை கொடுக்க முடியும் என்பதை இராமாயணம் வழி தெளியலாம்.

இராமனோடு உடன் பிறந்தோர் மொத்தம் நால்வராயினும், கானகம் ஏகியதால் அன்பென்ற சகோதரன், நட்பென்ற சகோதரன், பக்தி என்ற சகோதரன் என மூவருடன் மொத்தம் ஏழு சகோதரர்கள் கிடைக்கப்பெற்று இராமன் ஈரேழுலகம் என்றும் போற்றும் சிறப்பு அடைந்தார்.

என மூவர் சகோதரர்களாகின்றனர். வேடுவகுலத்தான் அறிந்தது ஒன்று. அது அன்பு. வானரக்குலத் தான் அறிந்தது நட்பு. அரக்கர் குலத்தான் அறிந்தது பக்தி. எனவே மாறா அன்பும், இடைவிடா நட்பும் தூயபக்தியும் இறையால் ஆட்கொள்ளப்பட்டு சகோதரர் ஆகும் வாய்ப்பை நல்கியது.

*''குகனொடும் ஐவரானோம் முன்புபின் குன்று சூழ்வான்*
*மகனொடும் அறுவரானோம், எம்முழை அன்பின் வந்த*
*அகமனர் காதல் ஐய! நின்னொடும் எழுவரானோம்*
*புகலருங் கானம் தந்து புதல்வரால் பொலிந்தான் உந்தை''*

என கம்பராமாயணத்தில் கம்பர் பாடியுள்ளார். குகன் தன்னிடத்து இருந்த தேனையும், மீனையும் அளித்து அன்பு பாராட்டுகிறான். இங்கு ஒன்றைக் கவனிக்க வேண்டும். கொடுக்கப் பட்ட பொருள் பெரிதல்ல. கொடுக்கப்பட்ட விதம் பொருளை விஞ்சி நிற்கிறது. அது இறைவனை மகிழ்ச்சிக் கொள்ள வைத்து சகோதர னாய் உறவு கொள்ள வைத்தது. இராவணனால் சிறைபிடிக்கப்பட்ட வைதேகி இராமனை நினைத்து ஓரிடத்தில் பெருமைக் கொள்கி றாள். வேடுவன் குகனிடத்து இராமன் சொன்ன வார்த்தைகள் அவள் கண்முன் நிழலாடுகிறது.

*''ஆழிநீர்க்கங்கை அம்பி கடாவிய ஏழை வேடனுக்கு எம்பி நின் தம்பி...*
*மங்கை கொழுந்தி எனச் சொன்ன வாழி நண்பினை உன்னிமயங்குவாள்''*

என்பதைக் காணும்போது இராமன் எந்தளவிற்கு குகனை நேசித்துள்ளார் என்பதை அறிய முடிகிறது. அடுத்தப்படியாக, அவ்வப்போது தாவும் தன்மைக் கொண்டதும், சஞ்சலம் நிறைந்த தும், ஒரு மனதில் நிலைக்கொள்ளாதது வானரம். இதனால் தான் மனம் ஒரு குரங்கு என்போம். இத்தகைய தன்மைக் கொண்ட அந்த வானரமாகிய சுக்ரீவன் இராமனிடத்து இடையறா நட்புக் கொள்



இராமானுஜருக்கு ஐந்து ஆசார்யர்கள். அவர்களில் ஒருவர் பெரிய திருமலை நம்பிகள். அவர் ஆசாரியர் மட்டுமல்ல. இராமானுஜருக்கு தாய்மாமன் கூட. ஒவ்வொருவரிடமும் ஒவ்வொரு விஷயத்தை தெரிந்துக் கொண்ட இராமானுஜர் பெரிய திருமலை நம்பிகளிடம் இராமாயணத்தின் சாரார்த் தத்தை தெரிந்துக் கொள்ள வேண்டும் என்று விரும்பி னார். அதற்காக அவர் பல தடவை திருப்பதி சென்றார். ஒவ்வொரு தடவையும் பிறகு பார்க்கலாம் என்று கூறி பெரிய திருமலை நம்பிகள் இராமானுஜரை திருப்பி அனுப்பி விட்டார். நிறைவாக ஒரு தடவை சென்றபோது அவரை அழைத்து ஒரு வருடகாலம் இராமாயணத்தை உபதேசம் செய்தார். காரணம் இராமாயணம் என்பது ஒரு கதை அல்ல?. அது ஒரு வாழ்வியல் சாஸ்திரம் மட்டுமல்ல, வேதார்த்தம். வேதம்தான் இராமாயணமாக அவதரித்தது. வேதத்தின் அர்த்தமாகிய எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் தான் இராமனாக அவதரித்தான். பிள்ளை உலகாசிரியர் வேதத்தின் அர்த்தத்தை அறுதியிடுவது ஸ்மிருதி இதிகாச புராணங்களினாலே என்பார்.


இராமாயணம் சிறை இருந்தவளின் ஏற்றத்தைச் சொல்கின்றது. மகாபாரதம் தூது சென்றவரின் ஏற்றத்தைச் சொல்கின்றது. இந்த இரண்டிலும் இராமாயணம் சிரேஷ்டம் என்றார். அப்படிபட்ட இராமாயணத் தினுடைய அர்த்த விசேஷங்களை திருமலை அடிவாரத்துக்குச் (அலிபிரி) சென்று தெரிந்துக் கொள்ள வேண்டும் என்று ஏன் இராமானுஜர் நினைத்தார் என்பதை சிந்தித்துப் பார்த்தால் ஓர் உண்மை புரியும்.

திருமலையானது இராமபிரான் நித்யவாசம் செய்யும் மலை, இதற்கு ஆதாரமாக விளங்குகின்ற பாசுரம்தான் பொய்கைஆழ்வாரின் பாசுரம்.

*“படைஆரும் வாள்கண்ணார் பாரசிநாள், பைம்பூந்*
*தொடையலோடு ஏந்தியதூபம், - இடை இடையில்*
*மீன்மாய மாசூணும் வேங்கடமே, மேல் ஒருநாள்*
*மான்மாய எய்தான்வரை”*

முதலில் இந்த பாசுரத்தின் அர்த்தத்தைக் காண்போம். ஒரு அருமை யான காட்சியை பொய்கை ஆழ்வார் காட்டுகிறார். துவாதசி நாள். ஏகாதசி விரதம் துவாதசியோடு தொடர்புடையது. இருக்கின்ற விரதங்களிலேயே

# திருவேங்கடத்தில் இராமன் நித்யவாசம் செய்கிறான்



– பேராசிரியர் எஸ். கோகுலாச்சாரி, புவனகிரி.

ஏகாதசி விரதம் மிகச்சிறந்த விரதமாகும். தாய்க்கு நிகரான உறவு இல்லை, காசிக்கு நிகரான திருத்தல மில்லை. கங்கைக்கு நிகரான புண்ணிய தலமில்லை, ஏகாதசி விரதத்திற்கு நிகரான விரதம் இல்லை என்பார்கள். ஏகாதசி விரதம் இருக்க வேண்டிய முறை என்று சில விஷயங்கள் சாஸ்திரங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. தசமி அன்று விரதம் இருக்க வேண்டும், அன்று ஒரு பொழுது இருந்து, ஏகாதசி முழுநாள் உபவாசம் இருந்து மறுநாள் காலை துவாதசி பாரணை பண்ண வேண்டும். ஏகாதசி விரதம் என்பது துவாதசி பாரணை செய்வதில்தான் நிறைவடைகிறது. அந்த துவாதசி பாரணை நேரம் கடந்துவிட்டால் அதற்குரிய பலன் கிடைக்காமல் போய்விடும். ஏகாதசி விரதமும் பலன் இல்லாமல் போய்விடும். இதை அம்பரீஷன் சரித்திரத்தில் நாம் தெரிந்து கொள்ள முடியும். இந்த ஏகாதசி விரதத்தை பெண்கள் மிகுந்த ஆர்வத்தோடும் இயல்பாகக் கடைபிடிக்கிறார்கள் என்ற காட்சி இந்தப் பாசுரத்தில் காட்டப்படுகிறது. அந்த துவாதசி பாரணைக்காக அவர்கள் திருமலையிலே நித்யவாசம் செய்கின்றனர்.


திருமலைக்கு இன்று பலரும் தானே வருகிறார்கள். பல்வேறு நாட்கள் விசேஷமாகத்தானே இருக்கிறது என்று கேட்கலாம். எத்தனையோ பேர் வந்து திருமலையிலே எம்பெருமானை வணங்குவதற்காக வந்தாலும் பெண்களையும், துவாதசி நாளையும் சிறப்பாக சொல்வதற்கு ஒரு காரணம் இருக்கிறது.

ஆண்டாள் திருப்பாவையில் “அறிவொன்றுமில்லாத ஆய்க்குலத்துப் பிள்ளையான பெண்களாகிய நாங்கள் உன்னைப் பிறவிப்பெறுந்தனைப் புண்ணியம் யாம் உடையோம்” என்று சொல்கிறார். பொதுவாக பெண்கள் தங்களைப் பற்றிச் சொல்லிக்கொள்கிறார்கள். சாஸ்திர அறிவு இல்லாவிட்டாலும் சாஸ்திரத்தின் அர்த்தம் பெண்களுக்குத் தெரிகிறது. அது இயல்பாகவே இருக்கிறது. அதைப்போல எத்தனையோ நாள்கள் இருந்தாலும் கூட, துவாதசி பாரணை செய்வதற்காக, விடிந்தும் விடியாத வேளையில் பெண்கள் வழிபாட்டுக்காக தூபம் போட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

வாசனையுள்ள புஷ்பங்களால் பெருமானை அலங்கரித்து திருவாராதனம் செய்கின்றார்கள். அப்பொழுது மலர்களின் மணமும், தூபத்தின் பரிமளமிக்க புகையும் எங்கும் பரவிக்கிடக்கிறது.

வானிலே நட்சத்திரங்கள் மறையத் தொடங்குகின்றன. விடிந்தும் விடியாத வேளை. துவாதசி நாள் என்பதால் எங்குப் பார்த்தாலும் வைணவப்பூஜைகள் நடைபெற்றவண்ணமிருக்கின்றன. ஒவ்வொரு இடத்திலிருந்தும் கமழும் நறுமணமிக்க புகையானது வானில் பரவி நட்சத்திரங்களை மறைக்கிறது.


புகை கொஞ்சம் குறைகின்றபோது அந்த நட்சத்திரங்கள் தெரிகின்றன. மறு படியும் சாம்பிராணி போன்ற வாசனைப் பொருட்களைப் போட்டு தூ ப ங்



களை ஏற்றுகின்றபோது நட்சத்திரம் மறை கிறது. (இடையிடையில் – மீன் மாய மாசூணும்) இப்படி நட்சத்திரங்கள் தெரிவதும் மறைவ துமாகக் காட்சி விரிகிறது. இப்படிபட்ட சிறப்பு மிக்க இந்த மலையானது முன்னொரு காலத் தில் மாயமான் உருக்கொண்டு வந்த மாரீசனை, அம்பால் அடித்த இராமபிரான் (மேல் ஒருநாள் – மான்மாய எய்தான்) எப்பொழுதுமே வாசம் செய்கின்ற மலை என்பதால் இங்கு இந்த பெண்கள் விரும்பி வாசம் செய்கின்றனர்.

இராமன் என்றாலே எல்லாவற்றையும் பிரம்மிக்கச் செய்கின்றவன் . எல்லோரையும் ஆகர்ஷிக்க வல்லவன். வால்மீகி இராமனை *“சந்திரகாந்தானனாம் நாமம் அதீவ பிரியதர்சனம்”* என்று சொல்கிறார். எல்லோரையும் கவர்ந்திழுக்கக்கூடிய அழகு படைத்தவன். அவனுடைய அழகு எப்படிபட்டதென்றால்

**“தோள்கண்டார் தோளேக் கண்டார்**
**தொடுகழல்கமலம் அன்ன**
**தாள்கண்டார் தாளே கண்டார் தடக்கைக்**
**கண்டாரும் அஃதே**



**வாள்கொண்ட கண்ணர்யாரே வடிவினை**
**முடியக்கண்டார்**
**ஊழ்கொண்ட சமயத்து அன்னான் உருகண்டாரை**
**ஒத்தார்”**

என்று கம்பன் காட்டுவது போல, மிதிலை தெருக் களிலே நடந்து செல்கின்ற போது அத்தனைப் பெண் களின் கண்களும் இராமபிரான் அழகிலேயே குவிந்து கிடந்தன என்பதைக் காட்டுகின்றார்.

இதிலே இன்னொரு நுட்பமான விஷயம் இருக்கிறது. ஜீவாத்மாக்களில் ஆண்கள் பெண்கள் என்ற பாகுபாடு இல்லை. உருவத்தால்தான் ஆண் பெண் என்ற பாகுபாடு இருக்கிறது.

ஆண்களாக இருந்தாலும், பெண்களாக இருந்தாலும் எல்லோரும் எம்பெருமானைப் பொறுத்தவரை பெண்கள் தான். அவன் ஒருவனே ஆண்மகன். அவன்தான் இராம பிரான்.

அந்த இராமபிரான் நித்யவாசம் செய்கின்ற மலை திருமலை. அந்த மலை ஜீவாத்மாக்களாகிய அழகிய பெண்களை ஈர்ப்பதில் என்ன தடை இருக்க முடியும்?.

திருமலையையும் அந்த மலையிலே நித்தியவாசம் செய்கின்ற இராம பிரானாகிய வேங்கடவனையும் நாம் சென்று சேவிக்க வேண்டும் என்ற அற்புத கருத்தைச் சொல்வதுதான் இந்த பாசுரம்.

இப்பாசுரத்தின் திரண்ட கருத்தாவது, திருமலை இராமபிரானுக்குரியது. அவன் அங்கே நித்யவாசம் செய்கின்றான். அவன் ஒருகாலத்திலே மாயமான் செற்றவன். இங்கே அவனை வழிபட பெண்கள் எல்லோரும் கூடியிருக்கிறார்கள். அப்படிக் கூடிய நாள் துவாதசி நாள்.

அந்த துவாதசி நாளில் அவனை வழிபட தூபதீபங்கள் ஏற்றிக் கொண்டிருக்கிறார்கள். அந்த புகை, மணத்தோடு எங்கும் பரவி வானில் தெரிகின்ற நட்சத்திரங்களை மறைக்கிறது. இவ்வளவு காட்சிக ளையும் பொய்கை ஆழ்வார் ஒரு பாசுரத்தில் அமைத்து நமக்குக் காட்டுகின்றார்.

இராமபிரான் நித்யவாசம் செய்யும் திருவேங்கட மலைச் சென்று அந்த எம்பெருமானை வழிபடுவோம். வாழ்வு பெறுவோம்.

# சுந்தர ஸ்ரீராமனை போற்றும் சுந்தரன்

ஹனுமன், வாயுபுத்ரன், மாருதி, கேசரி நந்தனன் என்று பல பெயர்களால் அறியப்படும் ஆஞ்சநேயர் பக்தியின் சிகரம் என்று கூறினால் அது மிகையாகாது. பக்திக்கு இலக்கணமாகத் திகழ்வது யார் என்று கேட்டால் அது நிச்சயமாக ஆஞ்சநேயர்தான்.

ஹனுமனின் பக்திக்கு நிகர் அவர் மட்டும்தான். இராமாயணத்தில் உள்ள காண்டங்களுக்கு வால்மீகி முனிவர் எவர் பெயரையும் சூட்டவில்லை. ஒருத்தரைத் தவிர, அவர்தான் மாவீரன் ஆஞ்சநேயர். அவர் ஒருவரின் பராக்கிரமங்களையே ஒரு காண்டம் முழுவதிலும் வால்மீகி முனிவர் வர்ணித்துள்ளார்.

அதுதான் "சுந்தர காண்டம்". அப்போது நம் மனதில் ஒரு கேள்வி எழும், "ஏன் சுந்தர காண்டம் என்று பெயர் சூட்டினார்? ஹனுமந்த காண்டம் என்றே இட்டிருக்கலாம் அல்லவா? அந்த பெயருக்கு என்ன காரணம்?" .

இந்த கேள்விக்கும் ஒரு பதிலுண்டு. அதாவது, இராமாயணம் எழுதி முடித்தவுடனே, முனிவர் எதிரில் ஹனுமன் உட்கார்ந்து இருந்தார். அவர் அங்கு அமைதியாக வால்மீகி முனிவர் எழுதி முடித்தவுடனேயே இராமாயணத்தை கேட்க வேண்டும் என்று ஆவலாகக் காத்து கொண்டிருந்தார்.

வால்மீகி முனிவர் ஹனுமனின் இச்சையை உணர்ந்து, "ஆஞ்சநேயா, நான் இராமாயணம் என்னும் ஸ்ரீராமபிரானின் கதையைச் சொல்லும் பெருங்காப்பியத்தை எழுதி முடித்து விட்டேன். நான் எழுதியதை கேட்பாயா?" என்று வினவினார்.

ஹனுமனும் மிக்க ஆவலுடன் ஆமாம் என்று தலையை அசைத்தார். முனிவர் மேலும், "நீ ஸ்ரீராமனின் பிரிய பக்தன். அவருடனேயே இருந்தவன். நான் எழுதியதில் ஏதேனும் விடுபட்டிருந்தால் என்னிடம் கூற வேண்டும்" என்று கோரினார்.

ஹனுமன் பயபக்தியுடன் முனிவரின் காலடியில் அமர்ந்து, கைகூப்பி காது இரண்டினையும் நன்கு நீட்டி ஸ்ரத்தையாக பக்தியுடனும், மகிழ்வுடனும், நெகிழ்ச்சியுடனும், பூரிப்புடனும், கண்ணீருடனும் மெய்சிலிர்த்து போய் ஸ்ரீராமனின் கதையில் மூழ்கி லயித்து, பிரம்மானந்தத்தை அனுபவித்துக் கொண்டிருந்தார்.

பிறகு வால்மீகி "ஆஞ்சநேய, உன் விருப்பப்படியே இந்த காண்டத்திற்கு நான் ஹனுமந்த காண்டம் என்று பெயரிட மாட்டேன். நான் வேறொரு பெயரை என் மனதில் கண்டு வைத்துள்ளேன். அதை சூட்டட்டுமா?" என்று கேட்க, "அது என்ன பெயர், சுவாமி?" என்று ஹனுமன் வினவினார். முனிவர் "சுந்தர காண்டம்" என்று கூறியவுடன் ஹனுமன், "ஆஹா! நம் சுவாமி ஸ்ரீராமச்சந்திர மூர்த்தி அழகின் வடிவல்லவா, அதனால் தான் முனிவர் சுந்தர காண்டம் என்று பெயரை யோசித்திருப்பார். மேலும் மிகவும் உகந்த பெயர்" என்றெண்ணி புலங்காகிதமடைந்தார்.

முனிவர் புன்முறுவல் பூத்து, "இனி உனக்கு எந்த ஆட்சேபமும் இல்லை, அல்லாவா? இந்த பெயரை வைக்கலாமில்லையா? முடிவை மாற்ற மாட்டாயே?" என்று சந்தேகத்துடன் கேட்க, மாருதி,





## சீதா ராமரான ஸ்ரீகோதண்ட ராமர், திருப்பதி

வருடந்தோறும் பங்குனி மாதம் ஸ்ரீராம நவமிக்கு அடுத்து வரும் தசமி திதி அன்று ஸ்ரீகோதண்ட ராமருக்கும் சீதா தேவிக்கும் மிக விமரிசையாக திருக்கல்யாணோத்ஸவம் நடைபெறும்.

உற்சவ தினத்தன்று சீதா ராமருக்கு முத்துக் களுடன் அக்ஷதை, மலர் மாலைகள், பட்டு ஆடைகள் வீதிவலமாகக் கொண்டு வரப்பட்டு சாத்தப் படுகின்றது.

ஆகம முறைப்படி வேத மந்திரங்கள் ஓத, வாத்தியங்கள் முழங்க திருக்கல்யாணம் நடைபெற்ற பின்னர் சீதாராமர், லக்ஷ்மணருடன்திருவீதி உலா எழுந்தருளுவார்.



“சத்தியமாக எந்த எதிர்ப்பும் தெரிவிக்க மாட்டேன். இது மிகவும் அழகான பெயராக உள்ளது” என்று கைகூப்பி முனிவரை தொழுது கூறினார்.

முனிவரும் ஐந்தாவது காண்டத்திற்கு “சுந்தர காண்டம்” என்று பெயரிட்டு ஆஞ்சநேயருக்கு இராமாயணம் முழுவதையும் பாடிக் காட்டினார்.மன நிறைவுடன் வீட்டிற்குத் திரும்பினார் ஹனுமன். நீண்ட நாட்களுக்குப்பின் அவரை கண்ட அவருடைய தாய் அஞ்சனா தேவி, “சுந்தரா, எப்படி இருக்கிறாய்?” என்று வினவ ஹனுமன் திகைத்தார். “ஏன் தாயே என்னை சுந்தரா என்றழைத்தாய்?” என்று ஹனுமன் கேட்க, “எங்களுக்கு ஒரு அழகான குழந்தை பிறக்கும் என்று சிவபெருமான் வரமளித்திருந்தார். பிறந்தவுடன் நீயும் மிக அழகாக ஒளிவீச, நாங்கள் உனக்கு முதலில் “சுந்தரன்” என்றே பெயரிட்டோம்” என்று கூறினார். ஹனுமனுக்கு அப்போதுதான் முனிவர் ஏன் தன்னைப் பார்த்து அப்படி புன்னகைத்தார் என்பதும் விளங்கியது.

இங்ஙனே ஆஞ்சநேயரின் நாமமான சுந்தரனிலிருந்து, “சுந்தர காண்டம்” என்ற பெயர் வால்மீகி முனிவரால் சூட்டப்பட்டது. ஸ்ரீராம நாமம் என்னும் தாரக மந்திரத்தை தன் உயிர்மூச்சாகக் கொண்டிருப்பவர் பக்த ஆஞ்சநேயர். “ராமா” என்ற ஒலி எங்கு ஒலித்தாலும் அங்கு ஹனுமன் இருப்பார். இராமாயணம் எங்கெல்லாம் பாராயணம் செய்யப்படுகிறதோ அங்கு நிச்சயமாக மாருதி வருவார். “ராம நாமத்தை” சொல்லும் பக்தனுக்குத் துணையாகவும் அவனுக்கு உதவுவதற்கும், பாதுகாப்பதற்கும் ஹனுமன் எப்போதும் தயாராக இருப்பார். இராம நாமமும் இராமாயணமும் கேட்கவே பூவுலகில் சிரஞ்சீவியாக இருந்து பக்திக்கே பெருமை சேர்ப்பவர் பக்த ஆஞ்சநேயரே ஆவார். வானத்தின் எல்லையும் மனதின் ஆழத்தையும் கூட அளந்து விடலாம். ஆனால் மாருதியின் பக்தியின் எல்லையையும் ஆழத்தையும் அளக்கவே முடியாது. எனவே “ஸ்ரீராம” நாமத்தை ஜபித்து ஆஞ்சநேயரின் பிரீதிக்கு எளிதில் பாத்திர மாவோம்; சம்சார சாகரத்தை கடந்தேறுவோம்.

**– டாக்டர் பா. காயத்ரி, சென்னை, 94476 40112.**

இவ்வுலகின் தோற்றம் மற்றும் அதன் இயக்கத்திற்கு மூல காரணமாகத் திகழ்வது வேதங்களாகும். இத்தகைய வேதத்தை உருவாக்கியது யார் என்ற சந்தேகம் ஒரு முறை அனுமனுக்கு உண்டானது. இச்சந்தேகத்தை தீர்க்கும்படி இராமனிடம் வேண்டினார் அனுமர். அப்போது, இராமரோ தனது சின்முத்திரை வலது கையை மார்பில் வைத்து, அனைத்து உயிர்களுக்குள்ளும் பரமாத்மா எனும் இறைவன் இருப்பதைப் போல நானே வேதமாகவும், வேதத்திற்குள் அதன் தத்துவமாகவும் இருக்கின்றேன் என்றார். இந்த அமைப்பில் அமைந்துள்ள ஒரே தலம் தென்னிந்தியாவில் திருவண்ணாமலை அருகில் நெடுங்குணம் கிராமத்தில் அமைந்துள்ளது.

யோகராமர் திருக்கோயில் திருவண்ணா மலை நகரில் இருந்து சுமார் 52 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. இத்தல இராமர் புஷ்பக விமானத்தின் கீழ் அமர்ந்து சின் முத்திரை காட்டிய வலது கையை மார்பில் வைத்துள்ளார். இது போன்ற காட்சி தென்னிந்தியாவில் வேறெங்கும் காணக்கிடைக்காத ஒன்றாகும்.

யோக ராமர் திருக்கோயிலின் நேர் எதிரே அனுமன் சன்னதி உள்ளது. முன் மண்டபத்தில் விஷ்வக்சேனர், நம்மாழ்வார், ஆளவந்தார் உள்ளிட்டோருக்கு திருவுருவம் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. பிரகாரத்தில் வேணுகோபால ஸ்வாமி, அனுமன், பரசுராமர் வீற்றுள்ளனர். கோயிலின் பின்புறத்தில் உள்ள கோட்டை மலையின் மேல் வேணுகோபால ஸ்வாமி கோயில் அமைந்துள்ளது.

**கடல் தீர்த்தவாரி :**

இத்தலத்தில் பௌர்ணமி, அமாவாசை மற்றும் புனர்பூச தினங்களில் மூலவருக்கு சிறப்பு பிரார்த்தனைகள் நடைபெறும். ஆவணி இரண்டாம் வெள்ளிக்கிழமையில் இராமர், சீதை, லட்சுமணனுக்கு கருட சேவை காட்சி அளிக்கிறார். இத்தலத்தில் வழிபட்டு விட்டு மகாபலிபுரம் சென்று கடலில் தீர்த்தவாரி வழிபட்டால் வாழ்நாளில் நாம் செய்திருந்த தீங்கில் இருந்து மோட்சம் உண்டாகும் என பக்தர்களால் நம்பப்படுகிறது.

**தனித்தன்மை வாய்ந்த தலம் :**

அருள்மிகு யோக ராமர் கோயில், நாட்டிலேயே தனிச் சிறப்புப் பெற்ற கோயில்களில் ஒன்றாகும். வேறெந்த கோயிலுக்கும் இத்தலத்திற்கான சிறப்பு இல்லை. அதாவது அமர்ந்திருக்கும் நிலையில் அற்புதமான கலையில் கட்டப்பட்ட கோயிலாக இது உள்ளது. குறிப்பாக, இக்கோயிலை விஜய நகர பேரரசர்கள் கட்டியுள்ளதாகக் கூறப்படுவதால் வரலாற்று சிறப்பு வாய்ந்த தலமாகவும் இக்கோயில் விளங்குகிறது.

# யோக ராமாலயம் நெடுங்குணம்



திரு.அறந்தாங்கி சங்கர்,சென்னை.9444160161







### ஆவணியில் வரும் வளர்பிறை தினத்தன்று :

திருவண்ணாமலையில் வீற்றுள்ள இந்த யோக ராமரை மிதுனம், சிம்மம், விருச்சிகம் ராசிக் காரர்கள் வழிபடுவதன் மூலம் யோகம் உண்டாகும் என்பது பக்தர்களின் நம்பிக்கை. அன்றைய தினம் மூலவருக்கு நெய் தீபம் ஏற்றி, பாசிப்பயறு, பொங்கல் படைத்து வழிபட்டால் தொழிலில் செழிப்பு உண்டாகும். செல்வம் பெருகும் என்பது பழமையான நம்பிக்கை.

சென்னை, திருச்சி, கோவை, மதுரை என மாநிலத்தின் பிற பகுதிகளில் இருந்தும், பெங்களூர் உள்ளிட்ட பிற மாநிலங்களில் இருந்தும் திருவண்ணாமலைக்கு போக்குவரத்து வசதிகள் நல்ல முறையில் இணைக்கப்பட்டுள்ளன. திருவண்ணாமலை நகரில் இருந்து காஞ்சிபுரம் மாவட்ட நெடுஞ்சாலையில் மேல்மருவத்தூர் செல்லும் சாலையில் சேத்துப்பட்டு அடுத்து நெடுங்குணத்தில் ஸ்ரீயோக ராமர் திருக்கோயில் அமைந்துள்ளது.

ஒரு முறை ஸ்ரீராமபிரானை வழிபட்டு வாழ்வில் வளமும் நலமும் பெறலாம். ஸ்ரீராம் ஜெயராம் ஜெய ஜெய ராம்.




## தியாகபிரம்மம் கீர்த்தனையில் ஸ்ரீராமர்

சங்கீத மும்மூர்த்திகளில் ஒருவரான ஸ்ரீதியாக பிரம்மம் என்று அன்பாக அழைக்கப்படும் தியாகராஜ சுவாமிகள் திருமாலின் முக்கிய அவதாரமான ஸ்ரீராமரைப் போற்றிய பாடல்கள் பல பல.

*“ஜகதானந்த காரகா ஜெய ஜானகி பிராண நாயக!”* என்று தொடங்கும் கீர்த்தனை பஞ்ச ரத்ன கீர்த்தனையில் ஒன்றாக சிறப்புப் பெற்றது ஆகும்.

*‘‘மந்துகேகு ஸ்ரீஹனுமந்து...’’* என்ற கீர்த்தனையில் “மருந்திற்காக சஞ்சீவினி மலையை கொண்டு வரச் சென்ற ஹனுமனை போன்று, தன்னையும் தங்கள் அருகிலே வைத்திருங்கள் ஸ்வாமி” என்று மனமுருகி ஸ்ரீராமபிரானிடம் வேண்டுகிறார்.

தியாகராஜ சுவாமி போன்று நாமும் எந்நேரமும் கீர்த்தனைகள் பாடாவிடினும் ஸ்ரீராம நாமத்தை துதித்துக் கொண்டே இருந்து ஸ்ரீராமரின் அருளைப் பெறுவோம்.



# சித்திரையில் ஸ்ரீராமர்

முனைவர்
ச.செந்திலாண்டவன்,சென்னை
9444582856

சூரியன் மேஷ ராசிக்குள் புகுகின்ற நாளே சித்திரை முதல் நாள் ஆகும். இந்தச் சித்திரை முதல் நாளில் தான் இந்த பூமண்டலத்தை பிரம்மா படைத்ததாகப் புராணங்கள் பேசுகின்றன. இந்தச் சித்திரை மாதம் வட நாட்டிலும் தெலுங்கிலும் “சைத்ர மாதம்” என்றே அழைக்கப்படுகிறது.

சித்ரா பௌர்ணமி நாளில் வீட்டில் நெய்தீபம் ஏற்றி குபேரன் மனைவி சித்ரா தேவியை வழிபட்டால் செல்வம் பெருகும்!

சித்திரை மாத அமாவாசையை அடுத்து வரும் சுக்லபக்ஷ திருதியை அட்சய திருதியை எனப் போற்றப்படும். “அட்சயம்” என்றால் “என்றும் குறையாத செல்வம்” என்று பொருள். அட்சய திருதியை அன்று எவற்றையெல்லாம் தான தர்மங்கள் செய்ய முடியுமோ அவற்றை செய்தால் புண்ணியங்கள் பல மடங்காகி வாழ்க்கை சுப யோகமாக நடக்கும்.

ஸ்ரீமந்நாராயணனின் அவதாரங்களில் இராமாவதாரம் மிகவும் முக்கியமானதாகும். பங்குனி/சித்திரை மாத வளர்பிறை நவமி அன்று அல்லது புனர்பூச நட்சத்திரம் அன்று ஸ்ரீராமருக்கு சிறப்பான முறையில் பூஜைகள், வழிபாடுகள் செய்து பக்தர்கள் ஒரு விழாவாகக் கொண்டாடுவர். ஸ்ரீராமன் பிறந்தபோது புனர்பூச நட்சத்திரம் 4ஆம் பாதத்தில் ஐந்து கிரகங்கள் உச்சம் பெற்றுத் திகழ்ந்தனவாம்!

ஸ்ரீராம நவமி, இந்தியா முழுவதும் இராமன் பிறந்த தினத்திற்கு முன் பத்து நாளும் பின் பத்து நாளும் கொண்டாடப் படுகின்றன.

வீடுகளில் ஸ்ரீராம பட்டாபிஷேகப் படம் வைத்துக் கொண்டாடுதல் சிறப்பு. கோயில்களிலும் வீடுகளிலும் ஸ்ரீராமநாம ஜபமும், பஜனைகளும், உபந்யாசங்களும் நடைபெறும். ஸ்ரீராமன், தசரதன் –கௌசல்யா மகனாகப் பிறந்தார். இராம சரிதத்தைச் சொல்வதே இராமாயண காவியம். வடமொழியில் வால்மீகி முனிவரும், தமிழில் கம்பர் பெருமானும் எழுதிய காவியம் இதிகாசமாகப் போற்றப் படுகின்றது. அக்கம்ப இராமாயணத்தில் ஸ்ரீராமபிரான் பிறப்பினைப் பாடும் பொழுது,

“ஒரு பகல் உலகெலாம்
உதரத்துட்பொதிந்து
அருமறைக் குணர்வகும் அவனை
அஞ்சனக்



*கருமுகில் கொழுந்தெழில் காட்டும் சோதியைத்*
*திருவுறப் பயந்தனன் திறங்கொள் கோசலை''*

என்று, "கருமுகில் கொழுந்தெழில் காட்டும் சோதி" எனக் கம்பநாட்டாழ்வார் ஸ்ரீராமனை சிறப்பித்து மகிழ்கிறார்.

இராம மந்திரம் என்னென்ன நன்மைகள் செய்யும் என்பதை கம்ப ராமாயணச் சிறப்புப்பாயிரம்

*''நன்மையும் செல்வமும் நாளும் நல்குமே*
*தின்மையும் பாவமும் சிதைந்து தேயுமே*
*சென்மமும் மரணமும் இன்றித் தீருமே*
*இம்மையே ''ராம'' என்ற இரண்டெழுத்தினால்''*

என்று விளக்கமாகக் கூறுகிறது. மேலும் ஸ்ரீராமநவமியன்று, "ஸ்ரீராம் ஜயராம் ஜயஜயராம்" என்ற பதின்மூன்று அட்சரங்கள் கொண்ட மந்திரத்தை குழந்தைகள் முதல் பெரியோர்கள் வரை அனைவரும் வீட்டிலோ, திருக்கோயில்களிலோ ஸ்ரீராமபஜன் செய்தால் மிகப் பெரிய புண்ணியம் கிடைக்கும் என்பது ஐதீகம்.

# சித்திரையின் சிறப்பு


- சதுர் மகா யுகம் ஆரம்பித்தது சித்திரை முதல் நாளே.
- சித்திரை வளர்பிறை துவிதியையில் கிருத யுகம் பிறந்தது.
- சித்திரையின் வளர்பிறை பஞ்சமியில் கூர்ம கல்பம் பிறந்தது.
- சித்திரை வளர்பிறை சப்தமியில் கங்கை நதி பிறந்தது.
- சித்திரை வளர்பிறை திரயோதசியில் மத்ஸ்ய அவதாரமும் தேய்பிறை பஞ்சமியில் வராக அவதாரமும் நடந்தது.
- சித்திரை – அஸ்வினி நட்சத்திரத்தில் ஆரம்பிப்பதால் அந்த அஸ்வினி தேவர்களது அருளால் சூரியன் கல்பகோடி காலங்கள் சாஸ்வதமாக இருப்பான்.
- ரிக்வேத சுலோகம் ஒன்றில் "சூரியன் அஸ்வினியில் புறப்பட்ட போது இருந்தது போல எல்லாத் தெய்வங்களும் எங்களுக்கு தீர்க்க ஆயுளைக் கொடுக்கட்டும்" என்று பேசப்படுகிறது.
- சித்திரை மாத சுக்ல பக்ஷ அஷ்டமியில் அம்பிகை அவதரித்த தாக தேவி பாகவதம் குறிப்பிடுகிறது.
- சித்திரா பௌர்ணமி நாளில் மதுரையில் மீனாட்சி– சொக்கநாதர் திருக்கல்யாண விழா சிறப்பாக நடைபெறும்.
- மதுரை – கள்ளழகர் வைகை ஆற்றில் இறங்கும் எதிர்சேவை விழா – சித்ரா பௌர்ணமியில் தான்.
- சித்திரை முதல்நாளில் திருச்செந்தூர் முருகனுக்கு அன்னா பிஷேகம் நடைபெறும்.
- சித்ரா பௌர்ணமி நாளில் தான் சிவபெருமான் அருளால் சித்ர குப்தர் தோன்றினார். இவர் உயிர்களின் புண்ணிய பாவக் கணக்குகளை எழுதி, எமதர்ம ராஜனிடம் ஒப்படைப்பார்.
- ஸ்ரீமத்இராமாநுஜரும், ஸ்ரீசங்கரரும் இம்மாதத்தில்தான் அவதரித்தனர்.



அலசுவோம்......

அறிவோம்....

ஆதிகாவிய நாயகர்களை......



# "ஸ்ரீராம ஜென்ம தினம்"

**அமரர் சத்யதாரா,**
**சென்னை,**

ஸ்ரீராமனை விட "ஸ்ரீராம" நாமம் அதீதமான மகிமை வாய்ந்தது. இது எவ்வாறு என்று ஒரு சுவையான அலசலுடன் பகிர்வோம். இராமாயண காவியத்தில், சமுத்திரத்தில் அணை கட்டப்படுகின்றது. நளன் என்ற வானர வீரன் கைகளால் கற்பாறைகளை எடுத்து கடலில் போட்டால் அது மிதக்கும் (இது அவன் பெற்றிருந்த ஒரு சாபத்தின் விளைவு). அவ்வாறே நளன் தனது சேவையை தொடர்கிறான். ஹனுமன் பார்த்தார். நளனுக்கு உண்டான சக்தி தனக்கு இல்லையே என ஏங்கினாராம். உடனே பாறையில் தனது நகத்தினால் கீறி, "ராம" என்னும் நாமத்தினை எழுதி கடலில் போட... அந்த கற்பாறை மிதந்ததாம். என்ன ராம நாம மகிமை! இராம நாமத்தின் பல்வேறு சுவைகளை அனுபவிப்போம்...!!!

"இராமன்" என்ற சொல்லுக்கு இலக்கண விளக்கம்: சம்ஸ்க்ருதத்தில் "ரமயதி" என்ற வினைச் சொல்லுக்கு மகிழ்விக்கிறான் என்று பொருள். *"ரமயதி இதி யஸ்ய ஸ: ராம:"* – யாரொருவன் (அடுத்தவரை) மகிழ்விக்கிறானோ அவனே "இராமன்" எனப்படுகிறான்.

*"அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்"...*

*"தாயிற் சிறந்ததொரு கோயிலுமில்லை"...*

*"தந்தை சொல் மிக்க மந்திரமில்லை"* என்ற முதுமொழிகள் தோன்றுவதற்கு முன்பே, அவற்றிற்கு இலக்கணம் தந்த முழுமையான "மனிதனாக" வாழ்ந்து காட்டிய ... அவதார புருஷன் ஸ்ரீராமன்.

ஒரு சொல்... ஒரு வில்... ஒரு இல்... என்று வாழ்ந்து காட்டிய உதாரண புருஷன் ஸ்ரீராமனே...

வெகு சமீப காலத்தில் வாழ்ந்த மகான்... தியாக பிரம்மம் என பெருமை கொண்ட கர்நாடக இசைப் பேரறிஞர் "96 கோடி "ராம" நாம ஜபம் செய்து ஸ்ரீராமனின் ப்ரத்யக்ஷமான தர்சனம் பெற்றார் என்பது ஓர் சத்தியமான சாத்தியமான வரலாறு.

இராம நாமம் பற்றி "சர்வேஸ்வரன்" அருளிய தத்துவம்: "ராம ராம ராம" என்று மூன்று முறை ஸ்மரணம் செய்தாலே... விஷ்ணு சஹஸ்ரநாமம் எனப்படும் முழுதான ஸ்துதியை பாராயணம் செய்த பலன் கிடைக்கும்.

திரேதா யுகத்தில் வாழ்ந்த ஸ்ரீராமபிரானின் உயரம் 96 அங்குலம்(எட்டு அடி). இந்த செய்தி ஸ்ரீவால்மீகி இராமாயணத்தின் துவக்கத்திலேயே காணப்படும் அபூர்வ செய்தியாகும். இராமாயண காவியம் முதன்முதலில் சம்ஸ்கிருத மொழியில்தான் உருப்பெற்றது. அதுவே வால்மீகி ராமாயணம்.

பின்பு உருவான பரம்பரைகளில், பல்வேறு கால கட்டங்களில், அத்யாத்ம ராமாயணம், ஆனந்த ராமாயணம், யோகவாசிஷ்டம் ரகுவம்ச மகாகாவியம், சம்பு ராமாயணம், உத்தரராம சரிதம் என்று பல

## மே மாத பண்டிகைகள், பருவ தினங்கள் மற்றும் தி.தி.தே. ஆலய உற்சவங்கள்


| | |
|---|---|
| 03 | அக்ஷய திருதியை, பரசுராம ஜெயந்தி |
| 05 | இராமாநுஜ ஜெயந்தி |
| 06 | சங்கர ஜெயந்தி |
| 10-12 | திருமலை ஸ்ரீபத்மாவதி-ஸ்ரீநிவாச பரிணயோத்ஸவம். |
| 13-21 | ரிஷிகேஷ், நாராயணவனம் ஸ்ரீகல்யாண வேங்கடேஸ்வர ஸ்வாமி பிரம்மோத்ஸவம். |
| 14 | ஸ்ரீநரசிம்ம ஜெயந்தி, அனந்தாழ்வான் சாத்து முறை |
| 13-15 | தெவுனிகடப்பா ஸ்ரீலக்ஷ்மி வேங்கடேஸ்வர ஸ்வாமி தெப்போத்ஸவம் |
| 14-17 | திருச்சானூர் ஸ்ரீபத்மாவதி தாயார் வஸந்தோத்ஸவம் |
| 15 | தரிகொண்ட வெங்கமாம்மா ஜெயந்தி |
| 16 | அன்னமய்யா ஜெயந்தி |
| 17 | திருப்பதி ஸ்ரீகங்கை அம்மன் சித்திரை திருவிழா |
| 23-31 | கார்வேட்டி நகரம் ஸ்ரீவேணுகோபால ஸ்வாமி பிரம்மோத்ஸவம் |
| 25 | அனுமத் ஜெயந்தி |

பெயர்களில் சம்ஸ்கிருத மொழியில் பல கோணங்களில் ஸ்ரீராமனின் வரலாறு உருக்கொண்டது.

பல மொழியாக்கங்களில் இராமாயண காவியம். தமிழ்: கம்ப ராமாயணம், ஹிந்தி: துளசிதாசர் எழுதிய ராமசரித மானஸ், தெலுங்கு: ரங்கநாத ராமாயணம், பாஸ்கர ராமாயணம், மொல்ல ராமாயணம், அஸ்ஸாம்: மாதவ கந்தளி ராமாயணம்,வங்காளி கிருத்திவாஸ ராமாயணம்/ ராம ரசாயணம், மராட்டி: பாவர்த்த ராமாயணம், குஜராத்: கிரிதரி ராமாயணம், ஒடியா: ரூயி பாதரின் தேனபதி ராமாயணம், சரளாதாசின் யோக ராமாயணம், ஜகமோகன ராமாயணம். தாண்டி ராமாயணம், பீதாம்பர ராமாயணம், மலையாளம்: துஞ்சத்து ராமானுஜ எழுத்தச்சன் எழுதிய அத்யாத்ம ராமாயணம், பஞ்சாபி: தில்சாத் ராமாயணம், சிந்தி: வசன நடையில் சிந்தி ராமாயணம், நேபாளி: பானுக்த ராமாயணம், கன்னடம்: குமார வால்மீகியின் தோரல்வே ராமாயணம், மோகன்தாஸ் ராயரின் ராமாகதா லிங்கராஜ் , உர்சின் கர்நாடக ராமாயண சங்க்ரம், புட்டப்பாவின் ராமாயண தர்சனம் – பரதபக்தி காவியம்.

த்ரேதாயுகம் இராமாயண காவியம் முடிவுள்ள காலம். ஸ்ரீராமர் வனவாசம் முடித்து இராவண சம்ஹாரம் செய்து மீண்டும் அயோத்யாவுக்கு வந்து, மாமுடி தாங்கிய மன்னனாக அரியாசனம் ஏறுகிறான். இராவணன் போன்ற அரக்கர்களை சம்ஹாரம் செய்து சீதாதேவியை மீட்டு வந்தபின் கிட்டிய அரசாட்சி. தனக்கு உதவிய அனைத்து வீரர்களுக்கும் நண்பர்களுக்கும் நன்றி கூறி பரிசில் கொடுத்து மகிழ்கிறான்.

ஸ்ரீரங்கவிமானத்தை விபீஷ்ணனிடம் பரிசாகக் கொடுத்தார் ஸ்ரீராமபிரான், விபீஷ்ணனுக்கு கொடுத்த வாக்குப்படி ஆலயத்தின் பெருமாள் இலங்கையை நோக்கி, அதாவது தென் முகம் பார்த்தே சேவை சாதிப்பதை இன்றளவும் காணமுடிகிறது.



## சஹஸ்ர “ராம” நாமம்

**“ராம ராம ராம” என்று மூன்று தரம் ஸ்மரணம் செய்தாலே ... ஆயிரம் முறை ஸ்மரித்த பலன் எவ்வாறு?**

**சம்ஸ்க்ருத எழுத்து இலக்கணத்தில் “ரா” என்பது ர வரிசையில் இரண்டாவது எழுத்து. எழுத்தின் மதிப்பு எண்கணித அடிப்படையில் 2 ஆகும். இதுபோல “ம” என்பது “ப” கார வரிசையில் 5வது எழுத்து. ஆக ஒரு தடவை “ராம” என்று உச்சரித்தவுடன் மதிப்பு 10 ஆகும். “ராம... ராம...ராம ...” என்றால் 10×10×10 =1000 ஆகும். ஆக ஆயிரம் தடவை உச்சாடனம் செய்த பலன் சம்பவிக்கும்.**



108 வைணவ திவ்ய தேசங்களில் பூலோக வைகுண்டம் ஸ்ரீரங்கத்தில் மூலவரின் விமானத்தின் மேல்காணும் – தங்கத்தால் ஆன இக்ஷ்வாகு குல தனம் எனப்படும் பிரணவாஹார விமானம் ஸ்ரீராமபிரானால் விபீஷணனுக்குக் கொடுக்கப்பட்ட விமானம். ஸ்ரீரங்கநாதர் ஆலயம் தோன்ற வித்தான நிகழ்வு ஸ்ரீராமபிரான் விபீஷணனுக்கு அளித்த பரிசன்றோ!

இராவணேசுவரனின் இளவலான விபீஷணன் ஸ்ரீராமபிரானால் சகோதரனாக அங்கீகரிக்கப்பட்டு எழுவரானோம் என்ற பெருமைதனை எட்டியவன். அயோத்யாவில் ஸ்ரீராமனின் பட்டாபிஷேகத்தில் பங்கு கொண்ட விபீஷணன், ஸ்ரீராமனிடம் இலங்கைத் திரும்பிச் செல்ல அனுமதி வேண்டுகிறான். என்ன பரிசு வேண்டும் உனக்கு? இது இராமனின் கேள்வி. தங்களை விட உயர்ந்த பரிசு எனக்கு வேறெதுவுமில்லை இது விபீஷணனுடைய நிலைப்பாடு. என்னைவிட உயர்ந்த பொருளொன்றினை உனக்குத் தரவிழைகிறேன் என்றான் அவதார புருஷன். எனது வம்சம் இக்ஷ்வாகு மாமன்னனின் குலப்பெருமைக் கொண்டது. பல்லாயிரம் ஆண்டுகளாக எங்களது வம்சத்தில் பூஜிக்கப்பட்டு வரும் இக்ஷ்வாகு குல தனம் எனப்படும் இந்த பெருமையுடைய ஸ்ரீரங்க விமானத்தை உனக்குத் தந்தேன் என ஸ்வர்ணமயமான ஸ்ரீரங்கவிமானத்தை விபீஷணனிடம் கொடுத்தான். விமானத்தினைக் கொடுக்கும்போது இலங்கை சென்று ஸ்தாபிக்கும் வரையில், இதனை பூமியில் எங்கும் வைக்கவேண்டாம் என்ற ஒரு விந்தையான நிபந்தனையுடன் வழங்கினான்.

இலங்கைச் செல்லும் வழியில் காவிரி நதியை கடக்கும் நேரம், மாலைப்பொழுது, சந்தியாவந்தனம் செய்ய வேண்டிய காலம். சுற்றும்முற்றம் பார்த்தான். மாடுமேய்க்கும் ஒரு சிறுவன் விபீஷணன் அருகே காணப்பட்டான். அவனிடம் விபீஷணன் சிறிது நேரம் அந்த விமானத்தை சுமந்திருக்கும்படியும், சில கணங்களில் கர்மாவை முடித்துவிட்டு பெற்றுக்கொள்வதாகவும்.... அதுவரை அதனை பூமியில் வைக்காமல் உதவிட வேண்டும் என்று கோரினான். இறைவனின் விளையாட்டு இங்குதான் துவங்கியது.

விமானத்தைப் பெற்றுக்கொண்ட சிறுவன் தாமதமானால் மூன்று தடவை உன்னை அழைப்பேன், அதற்குள் வந்துவிடவேண்டும் என்ற நிபந்தனையுடன் விமானத்தைப் பெற்றுக்கொண்டான். நதியில் இறங்கிய விபீஷணன் கர்மாவினை முடிக்கும் முன்பே மூன்று தடவை அழைத்துவிட்டு விமானத்தை பூமியில் வைத்துவிட்டான். இதைக்கண்ணுற்ற விபீஷணன் ஓடோடிவர சிறுவனும் ஓடினான். ஓடி காவிரி நதியை கடந்து அக்கரை சென்று அங்கிருந்த ஒரு குன்றின் மீது ஏறி நின்றான். அவனை பின் தொடர்ந்து வந்த விபீஷணன் அவன் தலையில் ஓங்கி ஒரு குட்டுவைத்தான். அடுத்தகணம் சிறுவனைக் காணவில்லை, விநாயகப் பெருமானின் வடிவமே நின்றது. அதுவே இன்றளவும் நாம் காணும் திருச்சிராப்பள்ளி உச்சிப்பிள்ளையார். ஸ்ரீரங்க விமானம் வைக்கப்பட்ட இடத்தில் காலப்போக்கில் புதர்கள் சூழ்ந்தன. அப்புதரில் வாழ்ந்த பச்சைக்கிளிகள் வேதமந்திரத்தை ஓதியபடி வட்டமிட்டு வந்தன. தர்மவர்மா என்ற சோழமன்னன் கிளிகள் வேதம் ஓதுவதைக்கண்டு ஆச்சரியமுற்று புதர்களை அகற்றியபோது ஸ்வர்ணமயமான விமானத்தைக் கண்டான். ஸ்ரீரெங்கநாதரின் ஆலயத்தை எழுப்பினான்.

*எங்கும் ராமன், எதிலும் ராமன், வாழ்வின் எழுச்சிக்கு, வெற்றிக்கு, உறுதுணை ராமநாமமே என்று ஸ்ரீராமனின் நாமத்தை பூமியெங்கும் பரப்பி பாரதத்தினை பார் புகழும் பரவசமிக்க புனித பூமியாக்குவோம்.*

மூலமூர்த்தியை விட மூல மந்திர ஜபம் சாலச் சிறந்தது என்பதை நமது பாரத தேசத்தின் ஞானிகள் அனைவரும் அறிந்து வைத்திருந்தனர். சுந்தரத் தெலுங்கினில் பாட்டிசைத்த சங்கீத மும்மூர்த்திகளில் ஒருவரான ஸ்ரீதியாகராஜ சுவாமி களின் இராமபக்தி ஆன்மீக உலகம் அறிந்ததே. திருமால் பக்தர்களின் எட்டெழுத்தும், சிவனேசர்களின் ஐந்து எழுத்தும் சேர்ந்ததே "ராம" என்ற இரண்டெழுத்து மந்திரம் உருவானது என்கிறார் தியாகராஜர். "எவரநி" என்று தொடங்கும் கீர்த்தனையில் தியாகராஜர் அழகாகப் பாடியுள்ளார்.

நாராயணாய மந்திரத்தில் ஜீவ அக்ஷரம் "ரா". அவ்வெழுத்து இல்லை என்றால் "ந–அயனாய" என்றாகிறது. அதன் பொருள் "வழி காட்டாதவன்" எனப் பொருள் மாறிவிடும். அவ்வாறே "நமசிவாய" மந்திரத்தில் ஜீவா அக்ஷரம் "ம". இந்த "ம" என்ற எழுத்தை நீக்கி விட்டால் "ந சிவாய" என பங்களித்தால் வழங்காதவன் எனப் பொருள்படும். ஆகவே திருமூல மந்திரங்களிலும் உயிர் எழுத்தாக உள்ள "ரா, ம" இரண்டு எழுத்துக்க ளும் இணைந்து "ராம" என்கிற அற்புத சொற்பதம் பிறந்தது. அதுவே நற்பதம் அருளும் என்கிறார் தியாகராஜ சுவாமிகள். நம்மாழ்வாரின் திருவாய் மொழி பாசுரத்தில், நல்லதொரு இடமான அயோத்தி யில் நான்முகனார் படைத்த, உய்வதற்கு வழி ஒன்றுமறியாத மிகச் சிறிய எறும்பு முதலான அசை யும் அசையாதன அனைத்தை யும் நற்கதிக்கு உதித்த இராமபிரானை அல்லால் கற்க விரும்புபவர் வேறு எதனையும் கற்பரோ என்கிறார்.

குலசேகர ஆழ்வார் தமது பெருமாள் திருமொழி யில் *"அண்ட சராசரங்களை வைகுந்தத்து ஏற்றி"* என்று கூறி "அசையும் அசையாத அனைத்தையும் வைகுந்தத்திற்கு அழைத்துச் செல்லக் கூடியவர் இராமன்" என்கிறார்.

கூரத்தாழ்வான் அருளிய அதிமானுஸஸ்தவம் – 31 வது சுலோகத்தில் தர்மம் அனுஷ்டிக்கவோ, யோகப்யாசம் செய்யவோ ஏதும் சிறிதளவேனும் ஞானம் பெறுவதற்கோ தகுதிகள் சிறிதும் இல்லாத வையாய் இருந்த போதிலும், இந்த புல், எறும்பு முதலானவைகள் இந்த பூதலத்தில் இராமபிரான் திருவடி பட நடந்த வாசனை இணைப்பால் வாழ்க்கை பந்தத்தில் இருந்து விடுபட்டு முக்தி அடையச் செய்யப்பட்டதாகக் கூறுகிறார்.


*"தாத்ருக் குணோ நன் பூவித ராகவத்வே*
*யஸ் தாவகம் சரிதம் அன்வ புங்கதா"*

..."அதி மானுஸஸ்தவம் 32"

என்பதில் ராம நாமம் போதும். பரமகதி வேண்டாம் என்று பரமபக்த ஹனுமன் கூறுவதாக அமைந்துள்ளது. ராம நாமத்தின் பெருமையை கம்பர் கூறுகையில், *"மும்மைசால் உலகுக் கெல்லாம் மூல மந்திரம்"* என்றும், *"தம்மையே தமர்க்கு நல்கும் தனிப் பெரும் பதம்"* என்றும், *"ஏழுமை நோய்க்கும் மருந்து"* என்றும் கூறி பெருமை கொள்கிறார். அத்தகு சிறப்பு வாய்ந்த உன்னதமான ஸ்ரீராமரின் அவதாரம் சித்திரை மாதம் நவமி திதியில் புனர் பூச நட்சத்திரத்

# இராமநவமியும் பானகமும் நீர் மோரும்...

டாக்டர் கி.ஜ.நிகிலா வெங்கட்,கோவை,
98409 91234.





தில் கடக லக்னத்தில் நிகழ்ந்தது. நடுப்பக லில் கோடை வெயிலில் ஸ்ரீராமர் அயோத்தி மாநகரில் அவதரித்தார். அவர் ஏற்றுக் கொண்ட வனவாசமும் 14 ஆண்டுகள் தொடர்ந்தது. உஷ்ணத்திலேயே தொடர்ந்த தாகக் காணப்படுகிறது. பரந்தாமனின் வெப்பத்தை ஆற்றும் பொருட்டே பக்தர்கள் இராமநவமியில் பானகமும் நீர் மோரும் நைவேத்தியம் செய்து மகிழ்கிறார்கள்.

**பானகம் :**

ஆயுர்வேதம் சொல்லும் அற்புத விளக் கம் . பானகம் என்பது இனிப்பு, புளிப்புச் சுவை மிகுந்தும், காரம் குறைவாகவும் சேர்க்கப்பட்ட ஒரு பானம். ஆயுர்வேதத்தில் இது "பானக கல்பனா" என்று சொல்லப் படுகிறது. "கல்பனா" என்றால் தயார் செய்தல் என்று பொருள். ஆயுர்வேதத்தில் உடனடி நிவாரணம் தரும் மருந்து தயாரிப்பு முறைகளில் இதுவும் ஒன்று. அதாவது, சில மருந்துகளைச் சாப்பிட்டால் முதலில் ஜீரணமாகும். அதன் பிறகு இரத்தத்தில் கலந்து வளர்சிதைமாற்றம் அதிகரித்து பின், அதன் வேலையை மெதுவாகத் தொடங்கும். இதற்கு அதிக நேரம் எடுத்துக் கொள் ளும். ஆனால் பானகம் என்பது சாப்பிட்ட உடனே விரைவாக அதன் பணியைச் செய்யும் மருந்தாகும். இதைக் குடித்ததும் உடனடி ஆற்றல் கிடைக்கிறது. எனவே, இதை மருத்துவத்தில் உள்ள குளுக்கோஸுக்கு முன்னோடியாகச் சொல்லலாம்.இதன் மகத்துவம் தெரிந்ததால் தான் நம் முன்னோர் திருவிழாக் காலங்களில் செய்யும் நேர்த்திக்கடன் மற்றும் கூட்ட நெரிசலில் பக்தர்களுக்கு ஏற்படும் நீரிழப்புக்குத் தீர்வாக இப்பானகம் வழங்கு வது வழக்கத் தில் உள்ளது. எலுமிச்சை, புளி, அன்னாசி, மாதுளை பானகம் என ஆயுர்வேதத்தில் பானகங்கள் உள்ளன. ஆனால் எலுமிச்சை, புளி கலந்த பானகம் தான் மக்களிடையே பிரபலம்.

**ஜம்பீர பானகம் :**

எலுமிச்சைச் சாறு – ஒரு பழம், வெல்லம்–ஒரு பங்கு, தண்ணீர் – 16 மடங்கு, ஏலக்காய்த் தூள் – ஒரு சிட்டிகை, சுக்குப்பொடி – ஒரு சிட்டிகை, மிளகுத்தூள் – ஒரு சிட்டிகை.வெல்லத்தைத் தட்டி பொடியாக்கிக் கொள்ளவும். அதனுடன் எலுமிச்சைச் சாறு, தண்ணீர் சேர்த்து நன்றாகக் கலக்க வேண்டும். வெல்லம் முழுமையாகக் கரைந்ததும் வடிகட்டிக் கொள்ளவும், இதனுடன் ஏலக்காய்த்தூள், சுக்குப்பொடி, மிளகுத் தூள் சேர்த்து கலக்கவும். இதைச் சிறிது நேரம் மண்பானையில் வைத்திருந்து பருகலாம்.

**மருத்துவப் பயன்கள் :**

உடலின் உஷ்ணத்தை குறைத்து, பசி இன்மையைப் போக்கி, உடல் சோர்வையும் போக் கும். தொண்டைக்கு இதமளித்து, தொண்டை கர கரப்பை சரியாக்கும்.

**நீர்மோரின் ஆயுர்வேத மருத்துவ பயன்கள் :**

தயிருடன் நாலில் ஒரு பாகம் நீர் சேர்த்து கடைந் தெடுத்த மோருக்கு தக்ரம் என்று பெயர். இதுவே மிகவும் உத்தமமானது. இதனால் திரிதோஷமும் சமனப் படும் மற்றும் மாந்தக்கினி, அரோசகம், அசீரணம் முதலியவற்றை போக்கி ஆரோக்கியத்தைத் தரும். தயிரைவிட மோரே சிறந்த உணவாகும்.

*"ஷோ: பார்ஷோக்ரஹணீதோஷ மூத்ரக்ரஹோதருசௌ*
*ஸ்னேகூஷவ்யாபதி பாண்டுத்வே தக்ரம் தத்யாத்கரேஷு"*

–சரக ஸம்ஹார, சூத்ஸ்தானம் 27

மோரின் பயனாக ஆசாரியர் சரகர் கூறுகையில் மோரா னது வீக்கத்தைப் போக்கக் கூடியது. மூல நோயைப் போக்கும். வயிற்றுப்போக்கை சரி செய் யும். சிறுநீரக



### ஒன்டிமிட்டா ஸ்ரீகோதண்டராமஸ்வாமி பிரம்மோத்ஸவம்

| தேதி | கிழமை | பகல் உத்ஸவம் | இரவு உத்ஸவம் |
|---|---|---|---|
| 09-4-2022 | சனி | ந்யாஸாபிஷேகம் | அங்குரார்ப்பணம் |
| 10-4-2022 | ஞாயிறு | துவஜாரோஹணம் | சேஷவாகனம் |
| 11-4-2022 | திங்கள் | வேணுகான அலங்காரம் | ஹம்ஸ வாகனம் |
| 12-4-2022 | செவ்வாய் | வடபத்ரசாயி அலங்காரம் | சிம்ம வாகனம் |
| 13-4-2022 | புதன் | நவநீத கிருஷ்ண அலங்காரம் | ஹனுமத்சேவை |
| 14-4-2022 | வியாழன் | மோகினி சேவை | கருடசேவை |
| 15-4-2022 | வெள்ளி | சிவதனுர்பாணாலங்காரம் | வரவேற்பு, கல்யாணோத்ஸவம், யானை வாகனம் |
| 16-4-2022 | சனி | ரதோத்ஸவம் | --- |
| 17-4-2022 | ஞாயிறு | காளீயமர்த்தன அலங்காரம் | குதிரை வாகனம் |
| 18-4-2022 | திங்கள் | சக்ரஸ்நானம் | துவஜாவரோஹணம் |
| 19-4-2022 | செவ்வாய் | -- | புஷ்பயாகம் |

எரிச்சலை, சிறுநீர் அடைப்பைப் போக்கும். வயிறு வீக்கத்தை குறைக்கும். பசி இன்மையைப் போக்கி, கல்லீரலின் ஆரம்ப நிலை பிரச்சனைகளை சரி செய்ய உதவிடும் என்கிறார்.

நாம் பகவான் ஸ்ரீராமருக்கு நீர் மோர் நைவேத்யம் செய்யும் போது அதனோடு இஞ்சித் துருவல், கறிவேப்பிலை, இந்துப்பு ஆகியவை சேர்க்கும் போது நமது ஜீரணத்தை சரி செய்து நமக்கு ஆரோக்கியத்தை கொடுக்கிறது.

ராம நாமத்தின் மகிமையாலும், ராம நவமி பிரசாதம் பானகம் நோய் எதிர்ப்புச் சக்தியைக் கொடுக்கிறது. உடனடியாக சக்தி கொடுக்கக் கூடியது.

அதில் உள்ள வெல்லத்தின் காரணமாக நிறைந்த இரும்புச் சத்துக்களும், பொட்டாசியமும், நீர் மோரில் உள்ள இஞ்சியின் ஆக்ஸிசனேற்றமும் (அன்டி ஆக்சிடன்ஸ்), அனைத்தும் ஒன்று சேர்ந்து நம்மை வருடம் முழுவதும் புத்துணர்ச்சியோடு வைக்க உதவுகிறது.

“நன்மையும் செல்வமும் நாளும் நல்குமே, தின்மையும் பாவமும் சிதைந்து தேயுமே, சென்மமும் மரணமும் இன்றித் தீருமே, இம்மையே ராமா என்ற இரண்டெழுத்தினால்” என்றெழுதி, ராம நாமத்தைக் கூறுவதால் ஏழு பிறவிகளில் செய்த பாவங்கள் அனைத்தும் கரைந்து போகும். நன்மையும் செல்வமும் தேடி வரும்.

### ஸ்ரீகோதண்டராம ஸ்வாமி, திருப்பதி

| தேதி | கிழமை | பகல் உத்ஸவம் | இரவு உத்ஸவம் |
|---|---|---|---|
| 29-3-2022 | செவ்வாய் | சேனாதிபதி உத்ஸவம் | அங்குரார்ப்பணம் |
| 30-3-2022 | புதன் | துவஜாரோஹணம் | பெரியசேஷவாகனம் |
| 31-4-2022 | வியாழன் | சிறியசேஷவாகனம் | ஹம்ஸ வாகனம் |
| 01-4-2022 | வெள்ளி | சிம்மவாகனம் | முத்துப்பந்தல் வாகனம் |
| 02-4-2022 | சனி | கல்பவிருக்ஷ வாகனம் | சர்வபூால வாகனம் |
| 03-4-2022 | ஞாயிறு | பல்லக்கில் மோகினி அவதாரம் | கருடசேவை |
| 04-4-2022 | திங்கள் | அனுமத் வாகனம் | வசந்தோத்ஸவம், யானை வாகனம் |
| 05-4-2022 | செவ்வாய் | சூரியப்பிரபை வாகனம் | சந்திரப்பிரபை வாகனம் |
| 06-4-2022 | புதன் | திருத்தேர் | குதிரை வாகனம் |
| 07-4-2022 | வியாழன் | பல்லக்கு உத்ஸவம், சக்கரஸ்நானம் | துவஜாவரோஹணம் |







# ஏப்ரல் 2022
# ராசிப் பலன்கள்



- சேலம் முராரி. எம்.வி. நரநாரயணன், சேலம், 94422 86213.

### மேஷம்

குழந்தைகள் கல்விக்காக அதிக செலவுகள் செய்ய வேண்டி இருக்கும். குடும்பத்தில் முடிந்த வரை பிறரிடம் வாக்கு வாதங்கள் செய்யாமல் இருப்பது நல்லது. இம்மாதத்தின் பிற்பகுதியில் சிலருக்கு குடி இருக்கும் இடம் மாற வேண்டியிருக்கும். தொழில் துறையில் அலைச்சல் மிக அதிகமாக இருக்கும்.

### ரிஷபம்

தொழில்துறையில் நல்ல லாபம் உண்டு. மாணவர்கள் நல்ல மதிப்பெண்கள் பெறுவார்கள். உத்தியோகஸ்தர்களுக்கு பதவி உயர்வு உண்டு. தந்தையின் ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. தொழில் விஷயமாக தூக்கமில்லாமல் இருப்பீர்கள். மனைவி ஆரோக்கியம் நன்றாக இருக்கும்.

### மிதுனம்

தொழில் துறையில் மாற்றம் செய்ய வேண்டி இருக்கும். உத்தியோகஸ்தர்களுக்கு பதவி உயர்வு காரணமாக இடமாற்றம் உண்டாகும். வயிற்றில் உஷ்ண நோய் உண்டாகும். உப்பு அதிகமாவதால் உண்டாகும் நோய் புதிதாக உருவாகும். மாணவர்கள் நல்ல மதிப்பெண்கள் பெற்று, நல்ல இடங்களில் உயர் கல்வி பெறுவர்.

### கடகம்

பொருளாதாரப் பிரச்சனைகள், தடைகள் விலகும். தெய்வ பலம் கூடும். திருமணமாகாதவர்களுக்கு விரைவில் திருமணம் கை கூடும். கணவன்-மனைவிக்குள் இருந்த பிரச்சனைகள் தீரும். தொழில் துறையில் புதிய முயற்சிகள் கை கொடுக்கும். உடல் ஆரோக்கியத்தில் இருந்த குறைபாடுகள் நீங்கும்.

### சிம்மம்

அஜீரணக் கோளாறுகள் உருவாகும். பொருளாதாரத்தில் சிக்கல்கள் ஏற்பட்டு சரியாகும். தாயின் ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. மாணவர்கள் நன்கு படித்தல் வேண்டும். தொழில் துறையில் தேக்க நிலை நிலவும். மாதத்தின் பிற்பகுதியில் பழைய பாக்கிகள் உருவாகும். பணம் கொடுக்கல் வாங்கலில் எச்சரிக்கை தேவை.

### கன்னி

திருமணமாகாதவர்களுக்கு விரைவில் திருமணம் கை கூடும். பொருளாதார வளர்ச்சி நன்றாக இருக்கும். தொழில் துறையில் உயர்வு உண்டு. பழைய பாக்கிகள் வசூலாகும். சிலருக்கு வெளிநாடு செல்லும் யோகம் உண்டாகும். தெய்வ தலங்களில் நல்ல தரிசனம் கிடைக்கும். கணவன்-மனைவிக்கிடையே நல்ல அன்னியோன்யம் உண்டாகும். கடன் பிரச்சனைகள் குறையும்.

### துலாம்

கடன் வாங்கி வீடு, மனை வாங்கும் யோகம் உண்டாகும். நண்பர்கள், உறவினர்களால் சிறு பிரச்சனைகள் ஏற்பட்டு பிறகு சரியாகும். குழந்தைகளின் கல்விக்காக நிறைய செலவுகள் செய்ய வேண்டி இருக்கும். இரவு நேரப் பயணங்களைத் தவிர்க்கவும். குழந்தை பாக்கியம் உண்டு.

### விருச்சிகம்

இம்மாதம் சகல காரியங்களிலும் வெற்றி உண்டாகும். இளைய மற்றும் மூத்த சகோதரர்களுக்கும் நல்ல முன்னேற்றம் உண்டு. மாணவர்கள் படித்தால் நல்ல மதிப்பெண்கள் பெறலாம். பழைய பாக்கிகள் வசூலாகும். புதிதாக மேற்கொள்ளும் முயற்சிகள் வெற்றி பெறும். மனைவியின் ஆரோக்கியத்தில் எச்சரிக்கை தேவை.

### தனசு

நண்பர்கள் உறவினர்கள் மூலம் உதவிகள் கிடைக்கும். பூர்வ புண்ணிய சொத்துக்கள் கிடைக்கும். உத்தியோகஸ்தர்களுக்குப் பதவி உயர்வு காரணமாக இடமாற்றம் உண்டாகும். தொழில் துறையில் கடினமாக உழைத்து நல்ல லாபம் பெறுவர். மாணவர்கள் நல்ல மதிப்பெண்களைப் பெற்று நல்ல கல்லூரிகளில் இடம் கிடைக்கப் பெறுவார்கள்.

### மகரம்

வீடு, மனை, வாகனம் வாங்கும் யோகம் உண்டு. தொழில் துறையில் வளர்ச்சி உண்டாகும். தைரியமாகக் காரியங்களைச் செய்து வெற்றிப் பெறுவீர். குழந்தைகளின் ஆரோக்கியத்தில் இருந்த குறைபாடுகள் நீங்கும். தெய்வ காரியங்களைத் தலைமை தாங்கி நடத்துவீர்கள். நல்ல பெயரையும் புகழையும் பெறுவீர்கள்.

### கும்பம்

செலவினங்களுக்கு ஏற்ற வருமானம் கிடைக்கும். திருமணமாகாதவர்களுக்கு விரைவில் திருமணம் நடக்கும். ஆரோக்கியத்தில் இருந்த குறைபாடுகள் நீங்கும். தொழில் துறையில் அலைச்சலும் வளர்ச்சியும் இருக்கும். மாணவர்கள் மேல் படிப்புக்காக வெளியூர் செல்வர். வெளிநாடு செல்லும் யோகம் உண்டு. குடும்பத்தில் சுப செலவுகள் அதிகமாகும்.

### மீனம்

தெய்வ தலங்களுக்கு யாத்திரைகள் சென்று நல்ல தரிசனம் கிடைக்கப் பெறுவீர்கள். எதிரிகளாகவும் தொழில் போட்டியாளர்களாகவும் நல்ல லாபத்தை அடைவீர்கள். கணவன்-மனைவிக்குள் நல்ல அன்னியோன்யம் உண்டாகும். தொழில் துறை வளர்ச்சி இருக்கும். திடீர் பணவரவு உண்டு. உத்தியோகஸ்தர்கள் பதவி உயர்வு பெறுவார்கள். மாணவர்கள் உயர் கல்வியைப் பெறுவார்கள்.

# கருணையே வடிவெடுத்த இராமபிரான்

- திருமதி பிரேமா வரதன், புதுதில்லி.
9899713565



*16* கலைகளையும் பூரணமாகக் கொண்டு இப்பூவுலகில் அவதரித்த உத்தம புருஷன் யார் என்று ஸ்ரீவால்மீகி முனிவர், நாரதரைக் கேட்க, எல்லாத் திருக்குணங்களும் பூர்ணமாகக் கொண்டவன் நம் இராமனைத் தவிர வேறு யார் என்றார். அத்திருக்குணங்களில் ஒன்று தயை. மனிதர்களிடம் மட்டுமல்ல, சகல ஜீவ ராசிகளிடமும் (பறவை, விலங்கு உட்பட) அவன் காட்டிய கருணை இருக்கிறதே...! அப்பப்பா...! இராமனுக்கு நிகர் இராமனே தான். அவ்விஷயத்தை நாமும் கொஞ்சம் அநுபவிப்போம் வாரீர்!

சீதையை அபகரித்த ராவணன் ஆகாய மார்க்கமாகத் தேரில் சென்று கொண்டிருந்ததைக் கண்ட கழுகரசனான ஜடாயு, அவ்வரசனிடம் போராடித் தோற்று குற்றுயிரும் குலையுயிருமாய் நிலத்தில் வீழ்கிறான். தன் தம்பி லக்ஷ்மணனுடன் சீதையைத் தேடிப் பரிதவித்துக் கொண்டு வனத்தில் வந்த இராமன், ஜடாயுவைத் தடவிக் கொடுத்து, உச்சி முகர்ந்து, தன் கையிலிருந்த பெருவில்லை நழுவ விட்டு மூர்ச்சித்துப்பிறகு தெளிந்து, ஜடாயு மூலம் விவரமெல்லாம் அறிகிறான். அதற்காகவே காத்திருந்த ஜடாயுவின் உயிரும் பிரிகிறது. அப்பொழுது லக்ஷ்மணனிடம் இராமன் கூறிய வார்த்தைகள்... நெஞ்சை உருக்குகின்றன. (குரல் தழுதழுக்கிறது.)

லக்ஷ்மணா! என் தந்தையைப் போலவே இப் பக்ஷிராஜனும் எனக்குப் பூசிக்கத் தகுந்தவனாவான். ஆகவே, கட்டைகளைக் கொண்டு வந்து அடுக்குவாயாக! இப்பக்ஷிராஜனுக்கு தகனச் சடங்குகளை நானே செய்யப் போகிறேன். "ஏ கழுகரசனே! நீ என்னால் தகனம் செய்யப் பெற்று, என்னிடம் அனுமதி பெற்று, மேலான விஷ்ணு லோகத்தைப் பெறுவாயாக!" என்று கூறி ஜடாயுவைச் சிதையின் மேலிட்டு வருத்தத்துடன் தன் பந்துவைப் போல் மந்த்ர பூர்வமாகத் தகனம் செய்தனன். பிறகு இராமன் ஜடாயுவுக்குப் பிண்டப் பிரதானம் செய்யும் பொருட்டு தர்ப்பங்களைப் பரப்பி, பசம்புல் தரையில் ஜடாயுவுக்குச் செய்ய வேண்டிய மரணச் சடங்குகளை விதிப்படி ஒன்றும் தவறாமல் செய்து முடித்தான். பிறகு கோதாவரி நதியில் ஸ்நானம் செய்து அக்கழுகு அரசனுக்குச் செய்ய வேண்டிய ஜல தர்ப்பணாதிகளையும் செய்தான்.

தன் அண்ணனான வாலியினால் ராஜ்யம் கைசோரப் பெற்று, அவனுக்குப் பயந்து வனத்தில் திரிகின்ற சுக்ரீவன், அனுமனை இராமனிடம் தூதனுப்பி அபயம் கேட்கிறான். சுக்ரீவன் பக்கல் நியாயமிருப்பதறிந்த இராமன், அவ்வானரனைக் காக்க, அவனிருப்பிடம் வருகிறான். இராம லக்ஷ்மணர்களைப் பூஜித்த சுக்ரீவன், "பிரபு! கேவலம் குரங்கான என்னோடு உம்மைப் போன்றவர் சிநேகம் செய்ய விரும்புவது எனக்கு மிக வியப்பாக இருக்கிறது. இது என் பாக்யம்! என்னுடன் உமக்குச் சிநேகம் செய்ய விருப்பப்பட்டால் இதோ கையை நீட்டுகிறேன். உமது கையால் என் கையைப் பிடித்து இந்த சுலோகத்தைக் கடவாதிருக்கும் படி திடமான ஏற்பாடு செய்வீராக! என்றனன். இராமன் மனத்தில் சந்தோஷம் மிகப் பெற்று, அவன் கையைப் பிடித்துக் கொண்டதோடு அல்லாமல் அவ்வானரனை அழுந்தக் கட்டித் தழுவிக்கொண்டான். பிறகு அனுமனால் கொண்டு வரப்பட்ட நெருப்பை இடையில்

வைத்து, அதன் சாக்ஷியாக இருவரும் சிநேகம் செய்து கொண்டனர். தான் கொடுத்த வாக்குப்படி வாலியை வதம் பண்ணி, சுக்ரீவ பட்டாபிஷேகம் பண்ணி வைத்த இராமனின் தயையைப் போற்றி, *"இளையவர்கட்கு அருளுடையாய் ராகவனே தாலேலோ"* என்று இராமனுக்கு தாலாட்டுப் பாடுகிறார் குலசேகராழ்வார்.

சீதையை மீட்க வேண்டி, இலங்கைக்குச் செல்ல வானரங்களின் உதவியுடன் சமுத்திரத்தில் அணை கட்டினான் இராமன். மகா பலசாலிகளான வானரங்கள் பெரிய மலைகளைத் தூக்கி வந்து, அணைக்கட்டுவதற்காகச் சமுத்திரத்தில் போட்டன. அங்கிருந்து அதைப் பார்த்த அணில்கள் "நாமும் இராமபிரானுக்குத் தொண்டு செய்ய வேண்டும்" என்று ஆசைப்பட்டன.

தங்கள் சக்திக்கேற்றவாறு அணில்கள் கடல் நீரில் மூழ்கின. அந்த ஈர உடம்புடன் கரைக்கு வந்தன. கரையில் உள்ள மணலில் விழுந்து புரண்டன. உடலில் மணல் துகல்கள் ஒட்டிக் கொண்டன. மீண்டும் கடலுக்குச் சென்று, தங்கள் உடலை உதறிக் கொண்டு அந்த மணல் துகல்களைக் கடலில் போட்டன. இப்படி திரும்பத் திரும்பச் செய்தன. இந்த அணில்களால் முடிந்த தொண்டு இது.

அணில்கள் கடல் நீரில் மூழ்கி எழுந்து, கரையில் புரளுவதால், கடல் நீரை வெளியேற்றியும், மணலை கடலில் உதிர்ப்பதால், மணலானது கடலில் அணை கட்ட உதவும் என நினைத்தனவாம்.

அணில்களின் தொண்டைக் கண்டு மனம் நெகிழ்ந்த இராமன், மிக்க பாசத்துடன் அணில்களின் முதுகைத் தடவிக் கொடுத்தார்.



இன்றும் நாம், இராமன் தன் கைவிரல்களால் அணில்களின் முதுகில் தடவிக் கொடுத்ததால் ஏற்பட்ட அடையாளங்களான மூன்று கோடுகளைக் காண்கிறோம்.

திருவேங்கடவனே! தயை என்ற மஹா குணம் ஒன்று உன்னிடமில்லையென்றால், வேறு எத்தனை குணங்களை நீ கொண்டிருந்தாலும் அவை எல்லாம் தோஷமேயன்றி குணமாகாது! என்கிறார் ஸ்வாமி தேசிகன் தயா சதகத்தில்!

கருணையின் வடிவமாகவல்லவோ இராமன் திகழ்கிறார்.அந்த ஸ்ரீராமனே அல்லவோ அர்ச்சையில் வேங்கடவன்! நாமும் இராமன் காட்டிய வழியில் சென்று எல்லா ஜீவராசிகளிடமும் கருணை காட்டுவோம்!

அயோத்தியில் அன்று தன்னைச் சார்ந்த புல் பூண்டுக்குக் கூட மோக்ஷமளித்த பரம தயாளனான இராமன் திருவடிகளே சரணம்!


# ராமநாமம் காத்திடும் தாரக நாமம்

சித்திரக் கதை

கதை மூலம்: டாக்டர் கே. ரவிச்சந்திரன்

சித்திரம் : திரு. தும்பலி சிவாஜி





தங்களுக்கு இப்பேரரசினையே அளித்த என் இராமனுக்கு இந்த சிறிய ஆறு லட்ச ரூபாயை வழங்க முடியாதா என்ன அரசே!
இது திமிரான வார்த்தை. இவனிடமிருந்து பணம் வசூலாகும் வரை சிறையில் அடையுங்கள்.
சிறைக் காவலர்கள் இராமதாசரை சிறையில் அடைத்தனர். பல இன்னல்களைச் செய்தனர். கற்பாறைகளை இழுக்க வைத்தனர். இவையாவற்றையும் பொறுமையுடன் ராம நாமத்தை உச்சரித்தப்படி தாங்கிக் கொண்டார் இராமதாசர்.
சீதம்மகு சேயிஸ்தி சிந்தாகு பதகம்மு ராமச்சந்திரா! ஆ பதகம்முனகு பட்டே பதிவேல வராஹாலு ராமச்சந்திரா...!
இராமதாசரின் புலம்பல்களைக் கேட்டு ஸ்ரீராமச்சந்திர மூர்த்தி மனமிறங்கி புறப்பட்டார். தானிஷாவிற்கு காட்சியளித்தார்.
தானிஷா! நான் இராமோஜி. என் தம்பி லக்ஷ்மோஜி. கோபண்ணா தர வேண்டிய கடன் மொத்தம் பெற்றுக் கொள்ளுங்கள். இராமதாசரை விடுதலை செய்யுங்கள்
உறக்கத்திலிருந்து திடுக்கிட்டு எழுந்த தானிஷா சுற்றும் முற்றும் பார்த்தார். அங்கு யாரையும் காணவில்லை. ஆனால் அவர்கள் கொடுத்த தங்க காசுகள் மட்டும் அங்கு இருந்தன. வந்தவர் இராம, லக்ஷ்மணர்களே என்பதை உணர்ந்து உடனே சிறைச் சாலைக்குச் சென்றார்.
இராமதாசரை விடுதலை செய்யுங்கள்.
இராமதாசரே என்னை மன்னியுங்கள்! அரசன் எனும் அகங்காரத்தால் உமது பக்தியை அறியாமல் தண்டித்து விட்டேன். இதற்கு பிரதிபலனாக இன்று முதல் பத்ராசலத்தின் அனைத்து அதிகாரங்களையும் தங்களுக்கே வழங்குகின்றேன்.
இராமலக்ஷ்மணர்கள் தானிஷாவிற்கு காட்சியளித்தது. இராம தாசரின் கடன்களை தீர்த்து,சிறையிலிருந்து விடுவித்ததை அறிந்த மக்கள் இராமதாசரை புகழ்ந்தனர்.
பக்த ராமதாசருக்கு ஜெய்.
அடுத்த இதழில் இன்னும் ஒரு கதையை பார்த்து படித்து மகிழலாம்.
முற்றும்.

## சித்திரம் வரைதல்

இந்த சித்திரத்திற்கு வண்ணம் தீட்டுவோமா...

பக்கத்தில் உள்ள படத்தை இந்த கட்டத்தில் வரையுங்கள்...



### பொருத்துக...

1. ஜடாயு - அ. வானர அரசன்
2. இராமர் - ஆ. ஜனகர்
3. சீதா - இ. புனர்வசு
4. வாலி - ஈ. படகோட்டி
5. குகன் - உ. கழுகரசன்

1. உ, 2. இ, 3. ஆ, 4. அ, 5. ஈ.



### பாசுரம் அறிவோம்...


*"கற்பார் ராமபிரானை யல்லால் மற்றும்
கற்பரோ?
புற்பா முதலாப் புல்லெறும்பாதி ஒன்று
இன்றியே
நற்பால் அயோத்தியில் வாழும் சராசரம்
முற்றவும்
நற்பாலுக்கு உய்த்தனன் நான் முகனார்
பெற்ற நாட்டுளே"*

- நம்மாழ்வார்

### வார்த்தைகளை சரியாக அணிவகுத்து வாக்கியம் அமைக்கவும்...

சிறந்தது நாமமே என்ற "ஸ்ரீராமா" நாமங்களிலும் ஆயிர

ஆயிர நாமங்களிலும் "ஸ்ரீராமா" என்ற நாமமே சிறந்தது.



### பாதையைக் கண்டுபிடி

இராமாயணத்தில், அனுமன் இலங்கைக்கு சீதா தேவியை தேடிச் சென்றார்.

சீதையை அசோக வனத்தில் கண்டு ஸ்ரீராமரின் அடையாளச் சின்னத்தை தாயாரிடம் வழங்கினார்.

சீதா தேவி அளித்த அடையாளத்தையும் ஸ்ரீராமரிடம் அளித்தார்.

**சீதா தேவியைக் காண அனுமனுக்கு வழி காட்டிடுங்கள்.**

### விடுகதை பகுதி...

1. கை இல்லாமல் நீந்துவான் காலில்லாமல் ஓடுவான் ?
2. கூட்டுக்குள்ளே கூடியிருக்கும் குருவியல்ல. பாய்ந்து செல்லும் குதிரையல்ல. எதிரியை கொல்லும் வீரன் அல்ல?
3. மரத்திற்கு மரம் தாவுவான் குரங்கு அல்ல. பட்டை போட்டிருப்பான் சாமி அல்ல?

1. படகு, 2. தேள், 3. அணில்



Printed by Sri P. Ramaraju, M.A., and Published by Dr. K. Radha Ramana, M.A., M.Phil., Phd., on behalf of Tirumala Tirupati Devasthanams and Printed and Publised at Tirumala Tirupati Devasthanams Press, K.T. Road, Tirupati 517 507. Editor : Dr.V.G. Chokkalingam, M.A., Ph.D.

## 08-02-2022 அன்று திருமலை ஆலயத்தில் ஏகாந்தமாக நடைபெற்ற இரத சப்தமி உத்ஸவத்தில் ஸப்த வாகனத்தில் எழுந்தருளிய ஸப்தகிரிவாசன்

















SAPTHAGIRI (TAMIL) ILLUSTRATED MONTHLY Published by Tirumala Tirupati Devasthanams Printing on 25-03-2022 & posting at Tirupati RMS Regd. with the Registrar of Newspapers for India under RNI No.APTAM/2021/80590. Postal Regd.No.TRP/157/2021-2023 "LICENCED TO POST WITHOUT PREPAYMENT No. PMGK/RNP/WPP-04(5)/2021-2023" Posting on 20th of Every month.




சாந்த்யை நமோஉ ஸ்து சரணாகதரக்ஷணாயை
காந்த்யை நமோஉ ஸ்து கமநீயகுணாஸ்ரயாயை ।
க்ஷாந்த்யை நமோஉ ஸ்து துரிதக்ஷயகாரணாயை
தாத்ர்யை நமோஉ ஸ்து தநதான்யசம்ருத்திதாயை ॥